சக்தி

2 SEP 1944
MADRAS



தாரண ஹு
ஆடி மீ

-/8

கதைகள்

நம்பிக்கை
நியாயம்
பத்தொன்பதாம்-வரி

✲

கட்டுரைகள்

புத்தகமும்-மதிப்புரையும்
அறியாமை
கம்யூனிஸம்
பொருளாதார-அராஜகம்

✲

வரலாறு

ரமண பகவான்

✲

குறிப்புகள்

ராஜாஜி-விளக்குவாரா?
காலச் சுழல்
புத்தக உலகம்
கதம்பம்

5-8-44 சனிக்கிழமை முதல்

கீழ்காணும் பிரபல நகரங்களில் வெற்றிகரமாக
நடந்துவருகிறது

88847
600 008

ஸி[illegible]யா பிலிம்ஸாரின்

பூம்பாவை

K. R. ராமசாமி — U. R. ஜீவரத்தினம்
K. சாரங்கபாணி — K. R. செல்லம்
N. S. கிருஷ்ணன் — T. A. மதுரம்
T. R. ராமச்சந்திரன்

முதலியோர் நடித்தது

கர்னாட்டிக் டாக்கீஸ்	—	கோயமுத்தூர்
ராமவிலாஸ் தியேட்டர்	—	காரைக்குடி
நியூ அபேரா டாக்கீஸ்	—	வேலூர்
சுவாமி பிக்சர் பாலேஸ்	—	பாண்டிச்சேரி

விரைவில் எதிர்பாருங்கள்

பாரகான் - மதராஸ் — ஸிடி டாக்கீஸ் - பெங்களூர்

விநியோகஸ்தர்கள் :

கந்தன் & கம்பெனி

கோயமுத்தூர் — மதுரை — கோட்டயம்

மைசூர் சமஸ்தானம் பெங்களூர் கண்டோன்மெண்ட்
உள்பட வட, தென் கன்னடத்திற்கு :

மைசூர் பிலிம் கார்ப்பொரேஷன்

196, காந்தி நகர் — பெங்களூர் ஸிடி

சென்னை நகரத்துக்கு :

ஸ்ரீ சாயா & கோ.

145, பிராட்வே — சென்னை

இசைவாணி கோகிலகான

ஸ்ரீமதி எம். எஸ்.

சுப்புலக்ஷ்மியின்

"எச். எம். வி." ரிகார்டு சங்கீதம்

HIS MASTERS VOICE

N. 18218	கண்ணெடுத்தாகிலும்	— சிம்மேந்திரமத்திமம்
N. 18208	மாதயை	— வஸந்த
N. 18205	கண்டதுண்டோ வானத்தின் மீது	
N. 18685	ஸரகுனபாலிம்ப	— கேதாரகௌளம்
N. 18680	என்ன கானு ராமபஜன	— பந்துவராளி
N. 18100	நீ இரங்காயெனில் வண்டினமுரலும்	— அட்டாண — தோடி

எல்லா "எச்.எம்.வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

தாரண
மலர் 10

சக்தி

ஆடி
இதழ் 4

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

ராஜாஜி விளக்குவாரா?

மகாத்மா காந்தி சிறையிலிருந்து வெளிவந்தது முதல், பிரிட்டிஷ்-இந்திய சமரசத்துக்கு ஓயாத முயற்சி செய்கிறார்; காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்கும் பெருமுயற்சி செய்கிறார். இரண்டையும் தனித்தனி நாம் ஆராய வேண்டும்:

பிரிட்டிஷ்-இந்திய சமரசத்துக்கு, மகாத்மாஜி சொல்லும் யோசனைகளின் சுருக்கம் இது தான்:

1. யுத்தம் முடியும் வரையில், சட்டமறுப்பு ஆயுதத்தைப் பிரயோகிக்கமாட்டேன். இந்திய சுதந்தரத்துக்கே உலைவைக்கும் முயற்சி நடந்தால் மட்டும், இந்த ஷரத்து விலக்காகும்.

2. யுத்தம் நடக்கும் வரையில், இந்திய அசெம்பிளியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இந்திய தேசிய சர்க்கார் அமைந்திருந்தால் போதும்.

3. பிரிட்டிஷ் மன்னரைப்போல, இந்திய வைஸிராயும், அந்தத் தேசிய சர்க்காரின் ஆலோசனைப்படி நடக்கவேண்டும்.

4. மாகாணங்களில், ஜனப்பிரதிநிதிகளைக் கொண்ட மந்திரி சபைகள் பழையபடி அமையவேண்டும்.

5. ராணுவ இலாக்காவுக்கு ஓர் இந்திய மந்திரியே இருக்க வேண்டும். என்றாலும், ராணுவத்தின் மீது, வைஸிராய்க்கும் சேனாதிபதிக்கும் பரிபூர்ண ஆதிக்கம் இருந்து வரும்.

6. ஐக்கிய தேசங்களின் படைகள் இந்தியாவில் இருந்துகொண்டு போர் நடத்தலாம். ஆனால், அவைகளின் செலவை, இந்தியா மீது சுமத்தக்கூடாது.

இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள இந்தியா மந்திரி அமெரி தயார் இல்லை. மகாத்மாஜியின் யோசனைகள், சமரசப் பேச்சை மறுபடி தொடங்கக்கூட இடங் கொடுக்கவில்லையாம். மீண்டும் கிரிப்ஸ் பல்லவியையே அமெரி பாடுகிறார். தவிர, ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை ஏற்படவில்லையே என்றும் ஒரு சாக்குக் கூறுகிறார். ஆனால், அவர் தொனியிலே பழைய வீறாப்பு இல்லை; குரல் கொஞ்சம் கம்மித்தான் இருக்கிறது. எனவே, ஜின்னா சாகேப் வழிக்கு வந்தால், பிரிட்டன் இறங்கித்தான் தீரும் என்று தோன்றுகிறது. காந்தி-ஜின்னா சந்திப்பு, பலன் தருமா?

எந்த நிலைமையில் காந்தி-ஜின்னா சந்திப்பு நடக்கிறது? ராஜாஜி தயாரித்ததும் மகாத்மாஜியின் அங்கீகாரம் பெற்றதுமான காங்கிரஸ்-லீக் சமரசத் திட்டத்தை ஆதாரமாகக் கொண்டே, அந்தச் சந்திப்பு நடக்கிறது. அந்தத் திட்டத்தின் சாராம்சமாவது:

1. இந்திய சுயேச்சைக் கோரிக்கையை ஜின்னாலீக் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. யுத்தம் முடிந்ததும், இந்தியாவின் வடமேற்கு, கிழக்குப் பிராந்தியங்களில் சகல ஜனங்களிடமும் ஓட்டெடுத்து, பாகிஸ்தான் வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்போது சகல கட்சியாரும் ஓட்டர்களிடம் தத்தம் அபிப்பிராயத்தைப் பிரசாரம் செய்ய உரிமை உண்டு.

இது முக்கியமாக ராஜாஜியின் திட்டமாகும். இதைப்பற்றி, ஜனாப் ஜின்னா முஸ்லீம் லீக்கில் பேசிய

பேச்சு, எந்தத் தோரணையில் இருக்கிறது? ஜின்னா மகா துடுக்காகவே பேசியிருக்கிறார். ராஜாஜியை, 'நடு ஆள்' என்று கேவலமாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஜின்னாவின் பேச்சு, ராஜாஜிக்கே சகிக்கவில்லை; அவர் ஆத்திரம் கொள்கிறார். ஆனாலும், என்ன செய்வது? நாம் செய்த பாவம் நம்மை நிழல்போல் தொடராமல் என்ன செய்யும்? உள்ளங் கொதித்துப் பயனில்லை. ஜின்னாவின் தொனி, உச்சஸ்தாயியில் இருக்கிறது. அதிலே அகம்பாவ குதூகலம் எதிரொலிக்கிறது. எந்த ஜனங்களின் சம்மதத்தையும் கேளாமல் இந்தியாவைத் தம் இஷ்டப்படி துண்டு போட்டுத் தந்துவிட வேண்டும் என்பது போலிருக்கிறது ஜின்னா பேச்சு. அபத்தப் பஞ்சாங்கத்திலே அத்தனையும் தியாஜ்யம் என்கிற மாதிரி, ராஜாஜி திட்டம் முழுவதிலும் குற்றங் காண்கிறார் ஜின்னா.

ராஜாஜி என்ன செய்யப் போகிறார்? பாகிஸ்தான் என்ற கருத்தே அபாயமானது, இந்துக்களுக்கோ முஸ்லீம்களுக்கோ யாருக்குமே அது நல்லதல்ல என்ற அபிப்பிராயத்தை என்றும் போலவே இன்றும் நாம் கொண்டிருக்கிறோம். ஐரோப்பாவைச் சிதைத்த பால்கன் நாடுகளின் கதையும், அயர்லாந்தைச் சிதைத்த அல்ஸ்டரின் கதையும், பாலஸ்தீனைச் சிதைத்த யூதர் கதையும் இந்தியாவுக்கும் நிகழவேண்டுமா? துண்டுபட்டுக் குலைந்து கிடந்த ஜெர்மனியை, 'இரும்பும் உதிரமும்' என்ற பயங்கர தத்துவத்தால் ஒன்று படுத்தி உருவாக்கினார் பிஸ்மார்க் என்ற மேதை. கருணையே பெரிதென்ற தத்துவத்தின் பலத்தால் இந்தியாவில் மகத்தான சாம்ராஜ்யத்தைக் கண்டான் அசோகன். அந்த இந்தியா, இன்று அந்நிய ஆட்சியின் கீழே, தானே ஒன்றுபட்டிருக்கிறது. அது சிதைந்து சீரழிந்தால் தான் சுதந்தரம் வருமா? நாம் அப்படி நினைக்கவில்லை. என்றாலும், ராஜாஜி ராஜதந்திரம் செய்கிறார். அவருடைய சமரசத் திட்டம், இந்திய சுதந்தரத்துக்குப் பலம் திரட்டுமானால், நல்லது தான்.

ஆனால், ஜின்னாவுடன் சமரசம் பேசுமுன், ஒரு விஷயத்தை ராஜாஜி தெளிவு செய்துவிட வேண்டும். ராஜாஜி திட்டத்தில் சில அடிப்படையான ஆட்சேபங்களை ஜின்னா கோஷ்டியார் கிளப்புகிறார்கள்: 1. பாகிஸ்தானை முடிவு செய்ய ஓட்டெடுக்கவே கூடாதாம். (ஏன் கூடாதோ?) 2. ஓட்டு எடுத்தாலும், முஸ்லீம்களிடம் மாத்திரமே தான் ஓட்டு எடுக்கவேண்டுமாம். (இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் இந்தியாவையே துண்டாடு என்ற உரிமை வரை போகலாம்; பாகிஸ்தான் விரும்பும் பிரதேசத்தில், பரம்பரையாய் வாழும் ஹிந்து முதலிய இதர வகுப்பாருக்கு, ராஜ்ய ஸ்தாபனப் பிரச்னையில் கூட ஓட்டுரிமை ஆகாதா?) 3. பல கட்சியாரும் ஓட்டர்களிடம், தத்தம் அபிப்பிராயத்தைப் பிரசாரம் செய்ய உரிமையும் இருக்கக் கூடாதாம்!

ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேளாமலே, பாகிஸ்தான் கட்டாயம் செய்தே தீர்வது என்ற கொள்கைக்குள் காங்கிரஸ் கட்டுப்பட்டு விட வேண்டும் என்பதுதான், ஜின்னாவின் கருத்துப்போல் இருக்கிறது. இதற்கு இணங்கவே முடியாது. ஒரு பிரதேசத்தின் ஜனங்கள் பிரிந்துபோக விரும்பினால், அவர்கள் போகட்டும் என்ற கொள்கையை ஒப்புக் கொள்வது பாதகமில்லை. ஆனால், அவர்கள் பிரிந்தே போகவேண்டும் என்று காங்கிரஸ் விரும்பவில்லை; விரும்பாது. ஒன்றுபட்டிருப்பதே நலமென்றுதான் மிகப் பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் — காந்திஜியும் ராஜாஜியும் உள்பட்த் தான் — நினைப்பார்கள்; நினைக்கிறார்கள். ஓட்டு எடுக்கும் காலத்தில், பிரியலாகாது என்ற பிரசாரத்தைக் காங்கிரஸ் செய்யத்தான் வேண்டும். அந்த உரிமையை விட்டுக்கொடுத்து, காங்கிரஸை இன்றே கட்டுப்படுத்திவிடலாகாது. அது மிக்க அபாயமாகும். இந்த விஷயங்களையெல்லாம் ராஜாஜி, இப்போதே திட்டமாய், தெளிவாய், விளக்கிவிட வேண்டும்.

காலச்சூழல்

'சக்தி' பக்கங்கள்: அட்டை உள்பட 56 - பக்கங்கள் 'சக்தி'யை அச்சிட, இந்திய சர்க்காரின் அனுமதி கிடைத்திருக்கிறது. 102 - பக்கங்கள் வரை பெற்றிருந்த 'சக்தி' ஒரேயடியாய் 32-பக்கங்களுக்குச் சுருங்காமல், 24-பக்கங்கள் அதிகமாய்க் கிடைத்தது நண்பர்களுக்கு மகிழ்ச்சிதரும் என்றே நம்புகிறோம். 7-பக்கங்கள் விளம்பரத்தையும் குறைத்திருப்பதைக் காணலாம். அதனால், சில நூறு ரூபாய்கள் விளம்பர வருமானம் குறைந்து விட்டது. ஆகவே,விலையைக் குறைப்பது சாத்தியமல்ல. அதற்குப் பதில், இந்த அளவிலேயே முடிந்த அபிவிருத்திகளைச் செய்ய எண்ணியுள்ளோம். காகிதக் கட்டுப்பாட்டு உத்திரவினால் நேர்ந்த இந்த நிர்ப்பந்தம் காரணமாக ஆசிரியர்கள் டில்லி சென்றுவர நேரிட்டதாலும், இது சம்பந்தமான ஏற்பாடுகளாலும், இம்மாத இதழைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதோடுகூட, நாங்கள் எண்ணிய அபிவிருத்திகளைச் செய்யவும் அவகாசமில்லை. பின் இதழ்களில் அந்த அபிவிருத்திகளைச் செய்வோம். என்றும்போல், நண்பர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாக நடந்து வருவோம்.

பர்மாவில் இந்தியர் வருங்காலம்: பர்மாவில் வருங்காலத்தில் எந்த இந்தியர் குடியேறலாம்? இந்த விஷயத்தைப்பற்றி, பர்மா சர்க்காருக்கும் (எதிரி சர்க்கார் அல்ல; பிரிட்டிஷ் பர்மிய சர்க்கார்) இந்திய சர்க்காருக்கும் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன.

1. பர்மாவில் பிறந்தவரா யிருக்க வேண்டும்;

2. அங்கே படித்தவரா யிருக்க வேண்டும்;

3. அங்கே 5000 ரூபாய் மதிப்புடைய சொத்து வைத்திருந்தவரா யிருக்கவேண்டும்;

4. பர்மா சர்க்காரில் உத்தியோகம் வகித்திருக்க வேண்டும்;

5. அங்கே ராணுவத்தில் சேவை செய்திருக்க வேண்டும்.

6. சர்க்காரிடம் 'விசேஷ உரிமை' சர்ட்டிபிகேட்டுகள் பெற்றிருக்க வேண்டும்.

7. 1941—42-ஆம் வருஷத்தில் பர்மாவிலிருந்து தாங்கள் வெளியேறி வந்த தேதியிலிருந்து, தொடர்ந்து எட்டு வருஷ காலம் அங்கே வசித்திருக்கவேண்டும்.

இந்த ஏழு யோக்கியதைகளில் ஏதாவது ஒன்று இருக்கக்கூடிய இந்தியரைத் தவிர, மற்றவர் பர்மாவுக்குள் குடியேற, இனி உரிமைகிடையாதாம். பர்மாவில், இந்தியர் குடியேறும் உரிமையைப்பற்றிமட்டில் தனியாக விவாதிப்பது சரியல்ல. பர்மாவில் வியாபாரம், தொழில் முதலியன செய்யச் சென்று அந்நாட்டின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவும் இந்தியர் பலர். அவர்களுடைய பொருள், தொழில், உழைப்புக்களின் பலன்களைப் பறிமுதல் செய்வதில்லை என்ற உத்தரவாதம் வேண்டும். பர்மாவுக்குச் செல்லும் ஐரோப்பியருக்கு என்ன பாதுகாப்புகள் அளிக்கப்படுமோ அத்தனையும் இந்தியருக்கும் அளிக்கவேண்டும். பர்மியருக்கு இந்தியர் தூரபந்துக்களல்ல; ஐரோப்பியர் அண்ணன் தம்பிகளுமல்ல.

ரயில் சீர்திருத்தம்: யுத்தத்துக்குப் பின்னே என்னென்னவோ சீர்திருத்தங்களெல்லாம் ரயில்வேக்களில் செய்யப் போகிறார்களாம். மூன்றே மூன்று வகுப்புக்கள் தான், ரயில்களில் இருக்குமாம். அதாவது மூன்றாம் வகுப்பு, இண்டர், அப்பர் என்று மூன்று வகுப்புகள். முதல் வகுப்பு இராதாம். ஆனால், முதல் வகுப்பு மாதிரி 'டீலக்ஸ் கோச்சுகள்' என்ற வண்டிகள் மெயில்களில் மட்டில் இருக்குமாம்! மூன்றாம் வகுப்பிலே அதிக வசதிகள் இருக்குமாம். யுத்தத்துக்குப் பின்னே வானத்தை வில்லாய் வளைப்பதும், மணலைக் கயிறாய்த் திரிப்பதும் இருக்கட்டும்; இப்போது ஏதாவது செய்வார்களா?

கதம்பம்

ஜின்னாவுக்குப் பதில்: ஸ்ரீநகரில், ஜின்னாவுக்கு மகா வைபவமாக ஒரு விருந்து நடந்தது. ஹபீஸ் ஜலுந்தரி என்பவரின் மனைவி, அப்போது ஜின்னா சாகேப்பிடம் பேசிக் கொண்டிருந்தாளாம்.

“என் புருஷனுக்கு உங்களிடம் மகா வியப்பு. உங்கள் வேலைத் திட்டங்களிலெல்லாம் அவருக்கு மிகவும் பிடித்தம். ஆனால், எனக்குப் பிடித்தமே யில்லை” என்று அவள் சொன்னாளாம்.

“இப்போது என்னை நேரே பார்த்த பிறகு, உங்கள் அபிப்பிராயம் மாறியிருக்குமே?” என்றார் ஜின்னா.

“அது தான் இல்லை. துளியும் மாறவில்லை” என்று அந்த மாது பதிலளித்தாளாம்.

ஜின்னாவை நேரே பார்த்த ஒரு பெண்ணின் மனது மாறவில்லை. காந்தியின் மனது என்ன ஆகுமோ?

அதிசய மோசடிகள்: ‘ஆண் குழந்தை வேண்டுமா? அதற்கு நமது நீலப் பொடி சாப்பிடுங்கள். பெண் வேண்டுமானால் ரோஜாப் பொடி தருகிறோம்.’ என்று, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நியூ ஸவுத் வேல்ஸில் ஒரு மருந்துக் கம்பெனியார் விளம்பரம் செய்கிறார்களாம். இன்னொரு கம்பெனியார், ‘காதலரை வசீகரிக்கும் மோஹன தந்திரம் — சீட்டாட்டத்தில் எப்படி ஏமாற்றுவது—நிர்வாண சித்திரங்கள் வரையும் வித்தை’ ஆகிய கலைகளை யெல்லாம் தபால் மூலமே போதித்து விடுவதாக வாக்களிக்கிறார்களாம். மற்றொரு கம்பெனியாரோ, எதிரி குண்டு மேலே படாமல் காப்பாற்றக்கூடிய கவச பைபிள்கள் விற்கிறார்களாம்.

மூடர்களும் அவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் தூர்த்தர்களும் ஒரு நாட்டில் மட்டுமில்லை; உலகெங்கும் தான் இருக்கிறார்கள்! எடுத்ததற்கெல்லாம் இந்தியாவை மட்டில் குறை கூறுகிறார்களே, ஏன்?

கோடீசுவரர் ரகசியம்: ஓர் இந்தியக் கோடீசுவரர், ஒரு சுதேச சமஸ்தானத்தில் ஜனங்களின் கல்விக்காகப் பத்து லட்ச ரூபாய் நன்கொடை அளிப்பதாக அறிவித்தார். இது என்ன சூழ்ச்சியோ என்று சமஸ்தான ஜனங்கள் ஐயங்கொண்டு, “இதன் மர்மமென்ன?” என்று அந்தக் கோடீசுவரரைக் கேட்டார்கள். “ஒன்றுமில்லை. அடுத்த ஜன்மத்தில் நான் உங்கள் மகாராஜாவாகப் பிறக்கப்போகிறேன் என்று என் ஜாதகம் சொல்லுகிறது. அப்போது உங்கள் அன்புக்குப் பாத்திரமா யிருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தருமம் செய்கிறேன்” என்றார் கோடீசுவரர் - இது ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ பத்திரிகையில் ‘சூப்பர்’ என்பவர் எழுதியுள்ள ஒரு கதையாகும். பலன் அடுத்த ஜன்மத்தில் இல்லை; இந்த ஜன்மத்திலேயே கிடைத்துவிடும் என்பது கோடீசுவரருக்குத் தெரியும். நமக்குத் தெரியாது. இதுதான் ரகஸ்யம்.

காலம் மாறிவிட்டது: “யுத்தத்துக்கு முன்னே, பல அதர்ம குணங்களை நாம் புகழ்ந்துகொண்டிருந்தோம்: பணம், மோசடியால் வந்த கீர்த்தி, முரட்டுத்தனம், வாய்ச்சாலக்கு ஆகியவைகளைப் புகழ்ந்தோம். கோடீசுவரர்களும், குஸ்திப் பயில்வான்களும், சங்கீத கேஸரிகளும், விளம்பரதாரிகளுமே நம் வீரர்களா யிருந்தார்கள். அதெல்லாம் இன்று மாறிவிட்டது. யார் தேசத்துக்கு மிக அதிக சேவை செய்கிறார்களோ அவர்களையே இன்று நாம் மதிக்கிறோம்” என்று ஒரு கட்டுரையில் இங்கிலாந்தைப் பற்றி லார்டு எல்டன் கூறுகிறார். நம் தேசத்தின் நிலைமையோ இன்று இதற்கு நேர்மாறா யிருக்கிறது. கடவுள் தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்.

"மூன்று வருஷமாக அவனை எதிர்பார்த்துத்தான் உயிர் வைத்திருக்கிறேன். மூன்று மாதமாகக் கடிதமே வரவில்லை. மனதில் வேதனையா யிருக்கிறது."

"அவன் வருவான் என்பதில் சந்தேகம் இல்லை. கப்பல் வேலை செய்யப் போனவர்களில் எத்தனை பேர் பணக்காரர்களாகத் திரும்பி வரவில்லை; அந்த மாதிரி, அவனும் நிறையப் பணங் கொண்டு வருவான்."

"வராமல் இருக்கவா போகிறான்? அவன் மேல் எனக்கு எவ்வளவு அன்பிருக்கிறது! அவனுக்கும் அது தெரியும்......ஹூம்.... பகவான் இருக்கிறார். இரவிலே, கனவில் அவனைக் கண்டேன். இன்று அவன் வருவானென்று நினைத்துப் பக்குவான்னம் பண்ணி வைத்திருக்கிறேன்."

"அம்மா, கப்பல் வேலைக்குப் போயிருந்தானே துரூபே? அவன் வந்திருக்கிறானாம்: அவன் தந்தை சொன்னார். அவனிடம் கேட்டுப் பார்க்கலாமே, கார்லைப் பற்றி."

"நிஜமாகவா? அப்படியானால் இப்போதே போய் அவனிடம் கேட்டுப் பார்க்கிறேன்."

"ஆனால், இந்தக் கப்பலில் கார்ல் வருவானென்று சொன்னாயே, அம்மா!"

"ஆம், ஆம்......மறந்து போனேன். இந்தக் கப்பலில் வரவில்லையானால், அங்கே போய் விசாரிக்கிறேன்."

"அம்மா, தம்பி வந்த பிறகும், நீ என் வீட்டிலேயே இருக்க வேண்டும்."

(சிரித்துக்கொண்டே) "அது நடக்கிற காரியமா, அப்பா! அவனுக்கு கல்யாணம், காட்சி பண்ண வேண்டாமா?"

"அதெல்லாம் அவனாகப் பண்ணிக் கொள்ளுவான். நீ அவனோடேயே இருக்கவேண்டிய அவசியம் இல்லை."

"என்னைப் பார்க்க அவன் எவ்வளவு ஆவலாக வருவான் என்பது உனக்குத் தெரியாது. தன்னந்தனியாக இருக்க, அவனால் எப்படி முடியும்?......அவன் பெரியவனா யிருப்பானோ?...இருபது வயதுகூட ஆகாதே இன்னும். ஒன்றாகச் சாப்பிட்டு, ஒன்றாகத் தூங்கி வந்த என் கண்மணி, ஐந்து வருஷத்திற்குப் பின்னால் வந்து எப்படியம்மா தனியாக இருப்பான்? என் கரஸ்பரிசத்திற்காக, அவன் எவ்வளவு தவித்துக் கொண்டிருப்பான்! அவனுக்குக் கல்யாணமாகி, நல்ல நிலைமையில் இருப்பதைப் பார்த்து விட்டால் போதும், அப்புறம் சந்தோஷமாகக் கண்ணை மூடிக்கொள்வேன்!"

"அம்மா, என் அழுகிறாய்?"

"இது அழுகை அல்ல, ஆனந்தக் கண்ணீர். அவன் வரப்போகிறான் என்பதை நினைத்து நினைத்து என் மனம் ஆநந்தத்தால் விம்முகிறது"

"அம்மா, கப்பல் வந்து விட்டது. எல்லோரும் இறங்கி விட்டார்கள்.........ஆனால், ஆனால், கார்லைக் காணோமே!"

"ஏன்?...வரவில்லையா?... பகவானே!"

* *　　* *

பேதுருவின் இல்லம்.

"பேத்ரு, என்னைப் பார்த்ததும் உன் முகத்தில் என் இவ்வளவு கவலை உண்டாகிறது? உண்மையைச் சொல்; கார்ல் எங்கே? நீ அவனைப் பார்த்தாயா?"

"பார்த்தேன், சுகமாக இருக்கிறான்."

"நல்ல வேளை, கடவுளே!"

"அவனும் நானும் ஒரே கப்பலில் இருந்தோம்."

"அப்படியா! அவன் உனக்குத் தம்பிபோல."

"ஒன்றரை வருஷம்வரை ஒரே கப்பலில் வேலை பார்த்தோம்."

"பிறகு?...சீக்கிரம் சொல்!... அதன் பின் நீ எங்கே போனாய், அவன் எங்கே போனான்!...உண்மையைச் சொல்."

"ஒவ்வொரு சமயம் நாள் கணக்கில் கடலிலேயே இருக்க நேரும். புயல் வந்துவிட்டாலோ கப்பல் ஒரே ஆட்டம் ஆடும்."

"பகவானே!"

"எதிரிக் கப்பல்கள் பின் தொடர்ந்து வந்து சுடுவதும் உண்டு"

"ஹா, எத்தனை ஆபத்து!... ஆனால், ஒரு கடிதத்திலாவது இதைப்பற்றி அவன் எழுதவில்லையே! 'நன்றாக இருக்கிறேன்' 'சுகமாக இருக்கிறேன்' என்பதைத் தவிர, கடிதத்தில் வேறொன்றும் இராது.......ஆ, கண்மணி, நீ எவ்வளவு கஷ்டப்பட்டாயோ?......"

"ஒரு முறை ஒரு நீர்மூழ்கிக் கப்பல் எங்களைப் பின்தொடர்ந்து வந்து பீரங்கிப் பிரயோகம் செய்தது. அப்போது......"

"ஹூம்......"

"ஒரு குண்டு என்னருகே வந்து விழுந்தது."

"தெய்வமே!"

"சிப்பந்திகளில் மூன்று பேர் மாண்டார்கள். எங்கள் சகாக்களில்......"

"கார்லும் ஒருவன்... அவனுக்கு என்ன நேர்ந்தது?"

"இலேசான காயம், வேறொன்றும் இல்லை."

"ஐயோ! ஒன்று மறியாத சிறுவன்!"

"ஒன்றரை மாதம் பாயும்படுக்கையுமாக இருந்தான். நான் அவன் பக்கத்திலேயே இருந்தேன்."

"அப்புறம்? அப்புறம் குணமாகி விட்டது அல்லவா?"

"குணமாகி விட்டது. பின்பு.."

"என்ன, சொல்லு; யோசிக்காதே."

"நான், வேறொரு கப்பலுக்குப் போய்விட்டேன்."

"கார்ல்?"

"அதே கப்பலில் இருந்தான்"

"இப்போ?"

"இப்போ யுத்தம் முடிந்துவிட்டது. என்றாவது வருவான்."

"வருவான் அல்லவா? அது போதும்......"

—பேத்ரு பெருமூச்செறிகிறான். குண்டு பட்டு இறந்து போன கார்லின் நினைவு தோன்றியதும், அவன் மனதில் கவலை பொங்குகிறது. மகன் வருவானென்ற நம்பிக்கையுடன் கிழவி வீடு செல்லுகிறாள்.

*

சத்தியமே ஜயம்

என் மகனே, அன்புக்கு எப்போதும் தோல்வி கிடையாது. இன்றோ நாளையோ பல யுகங்களுக்குப் பிறகோ, சத்தியம் ஜயமடைதல் நிச்சயம். அன்பே வெற்றி கொள்ளும். உங்கள் சகோதரர்களிடம் உங்களுக்கு அன்பு உண்டா?

—சுவாமி விவேகானந்தர்

தேயிலையின் சரிதம்—9

2 SEP 1944

வீட்டில் தேயிலை நீர் அருந்தும் வேளை

யாத்திரையின் முடிவு

தேயிலை எங்கள் தொழிற்சாலையில் நன்று பக்குவப்படுத்தப்பட்டு பொட்டலம் செய்யப்பட்ட பின் இந்தியா பூராகவும் எங்கள் விற்பனையாளர்கள் மூலம் விநியோகிக்கப்படத் தயாராகிறது.

இந்தியா பூராவிலும் எல்லா முக்கியமான இடங்களிலும் இருக்கும் எங்கள் விற்பனை இலாக்காக்களுக்கு எங்கள் தொழிற்சாலையிலிருந்து இடைவிடாமல் துய்தான தேயிலை சேர்க்கப்படுகிறது. இவ்விடங்களிலிருந்து எங்கள் விற்பனையாளர்கள் அடிக்கடி தேயிலையை வியாபாரிகளுக்கு சேர்ப்பிக்கிறார்கள்.

இவ்விதம் புதிது புதிதாய் தேயிலை சில்லரை வியாபாரிகளுக்கு எப்பொழுதும் கிடைத்துவருவதால் எங்கள் தேயிலை உங்களுக்கு எப்பொழுதும் துய்தானதாகவும் வாஸனையுடனும் கிடைத்துவருகிறது.

ப்ரூக்பாண்டு தேயிலையைக்கொண்டு பானம் தயாரிக்குப்பொழுதெல்லாம் தவறாமல் புதிதாகக் கொதிக்கவைத்த ஜலத்தை உபயோகித்து அதில் தேயிலையை நான்கு நிமிஷங்கள் போட்டுவைத்தால் போதுமானது.

ப்ரூக் பாண்ட்

கரப்பான் வியாதி தீர

எக்ஸ்-மா (X-MA)வை

உபயோகிக்கவும்

மற்றொரு சமீபகால நற்சாட்சி பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

தங்கள் அரிய எக்ஸ்-மா ஆயின்ட்மெண்டால் குணமடைந்து, நான் இதை பம்பாயிலுள்ள ஒரு ஸ்திரீக்கு வெகுவாக சிபார்சு செய்கிறேன். பம்பாயில் உங்களுக்கு பிராஞ்சு இருந்தால், அவளுக்கு ஒரு புட்டி கொடுக்கும்படி செய்யவும். இல்லையேல் உங்களது மதராஸ் ஆபீஸிலிருந்து அவளுக்கு அனுப்பவும்.

உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)..

உபயோகிக்கும் விதம்

காலையிலும் மாலையிலும் சொறி கண்டவிடத்தில் நன்றாகத் தடவ வேண்டும். சொறிமீது காற்றுப் படாமலிருக்க மெல்லிய துணி போட்டு மூடுவது நலம்.

இந்த மருந்து தயாரிப்பவர்கள்

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

ஒன்றுதான்

கரப்பான் சொறி போன்ற சரும வியாதிகளுக்குத் தக்க மருந்து ஸ்பென்ஸரின் எக்ஸ்—மாதான். இது கீழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றது. எல்லா நாடுகளிலும் அதை வாங்கியவர்கள் பரம திருப்தி அடைந்துளர். ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்த வண்ண மிருக்கின்றன. அதன் அபார விற்பனையே அதன் குணத்திற்குச் சான்று. இதற்குமுன் இதை 'ஸ்மித்ஸ்' அன்குவென்டம் டெடெர்ஜென்ஸ்' (**Smiths unguentum Detergens**) என்றழைத்தார்கள். சரும வியாதிகளின் நிவாரணியான இதற்கிணை வேறெதுவுமில்லை. 'கரப்பான், வண்ணான்சொறி, எரிதிமா போன்ற சரும வியாதிகளுக்கு எரிச்சல் கொடாத மருந்து எக்ஸ்-மா ஒன்றுதான்.

கைக்கு அடக்கமான புட்டி

ரூ. 1-4-0

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள் கோரப்படுகின்றன:

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமி.,

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ், சென்னை

SPENCER & CO., LTD., MADRAS.

புத்தகமும் மதிப்புரையும்

எம். எல். சபரிராஜன்

இந்த விமர்சகர் என்பவர் யார்?

பேய் பிசாசுகளுக்கும் இவர்களுக்கும் உறவு உண்டா? புத்தக ஆசிரியர்கள் இவரைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? இவர் பூலோகத்திலிருந்து மதிப்புரை எழுதுகிறாரா, அல்லது பூதலோகத்திலிருந்து மதிப்புரை எழுதுகிறாரா?

அருமையான இலக்கியங்கள் பல தோன்றிய பண்டைக்காலத்தில் விமர்சகர் யாரும் இல்லை. கம்பன் காலத்திலோ, இளங்கோவன் காலத்திலோ மதிப்புரைக்காரர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அற்புத இலக்கியங்களுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்தில், விமர்சகர்களுக்குத் தேவை என்ன வந்தது?

இந்தக் காலத்திலே ஏராளமான புத்சகங்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன. பேருக்குத்தான் யுத்தகாலம், காகிதப் பஞ்சம் என்பதெல்லாம். மழைக் காலத்திலே ஈசல்கள் தோன்றுவதுபோல, எங்கெங்கெல்லாமோ இருந்து பிரசுராலயங்கள் கிளம்புகின்றன. இந்தப் பஞ்ச காலத்திலே அச்சுக் கலையின் மேன்மையையும் சிறப்பையும் நாம் நன்றாகப் பார்க்க வேண்டுமானால், அதைத் தமிழ்நாட்டிலேயே பார்க்கலாம்போல் இருக்கிறது. பொதுவாகச் சொல்லப்போனால், புத்தகம் வெள்ளம்போல, பிரளயம்போல, வருகிறது. இந்தச் சுழலிலே அகப்பட்டுக்கொண்ட நம்முடைய கண்விழி பிதுங்குகிறது.

'இயந்திர பூதம்' என்று நம் தலைவர்கள் வெறுத்து ஒதுக்கும் இயந்திர நாகரிகத்தின் கொடுமையையும் தீங்கையும் இந்த அறிவுத் துறையிலும் நாம் காண்கிறோம். இங்கேயும் இயந்திரபூதம் எல்லையற்ற நாசம் விளைவித்திருக்கிறது. ஒரு காலத்தில் அச்சு இயந்திரம் உலகத்துக்கு ஞானசூரியனாக விளங்கியது. அது நமக்கு ஞானக்கண் வழங்கியது. ஒருசிலருக்குமட்டும் தனி உடைமையாகயிருந்த கல்வியை, பாரபட்சமில்லாமல் எல்லோருக்கும் பொதுவுடைமையாக்கியது. ஆனால், இன்றோ, அது கொடுத்த கண்ணைப் பிடுங்கிக்கொண்டதுமல்லாமல், ஆளுக்கே மோசம் உண்டாக்கி வருகிறது. சிவனிடம் வரம்பெற்ற பஸ்மாசுரன் போல, அது நம் தலையிலேயே கைவைக்கத் தொடங்கியிருக்கிறது.

கலையும் இலக்கியமும் மக்களுடைய உள்ளத்தைப் பண்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்வரை, அவற்

'வாள் வேண்டுமா? பேனா வேண்டுமா?' என்று இந்தியரைக் கேட்டானாம் ஒரு வெள்ளைக்காரன். இதே தோரணையில் அட்டகாசம் செய்யும் விமர்சகர்கள் இந்தக் கட்டுரையைப் படிக்கவேண்டும். படிப்பது போதாது; கொஞ்சம் யோசனையும் செய்ய வேண்டும். செய்தால் அவர்கள் பித்தம் தெளியும்.

ருல் யாருக்கும் தீங்கு நேராது. ஆனல், இன்று இலக்கியம் ரூபாய் அணு பைசாவில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. அது கத்தரிக்காய் வெண்டைக்காய் போல, வர்த்தகப் பொருளாகி விட்டது. இலக்கிய உலகம், யாதொரு குறைவும் இல்லாத தத்ரூபம் சந்தைக் கடையாக விளங்குகிறது.

இப்போது இலக்கியத்துக்குத் தர்மகர்த்தர்களாக வெளிவருபவர்களில் பெரும்பாலோர், ஒன்று பணக்காரர்கள், அல்லது பணத்தைச் சம்பாதிப்பதற்காகக் குதிரைப் பந்தயத்திலோ, அதைப் போன்ற வேறு தொழிலிலோ ஏமாந்துபோய், இதில் ஒரு கை பார்க்கலாமென்று எழுத்தாளர்களாகவும் பிரசுர கர்த்தர்களாகவும் வேஷம் போட்டுக்கொண்டு வருபவர்கள். இவர்களுக்கு லட்சியம் ஒன்றே: எப்படியாவது பணம் சேர்க்கவேண்டும். ஆகையால், சாதாரண மக்களுடைய சிந்தையைக் கவரத்தக்க புத்தகங்கள் எழுதி வெளியிடத்தொடங்குகிருர்கள். பொது ஜனங்களுடைய ருசி எந்தமாதிரியானது என்பதுதான் நமக்கு நன்ருகத் தெரியுமே! சென்ற இருபது வருஷ காலத்தின் வருந்தத்தக்க சரித்திரமே இதற்குப் போதாதா? தூண்டிலைப் போட்டு மீன் பிடிப்பதைப்போல, சாதாரண மக்களுடைய ஆபாச வேட்கையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் புத்தகங்களை வெளியிடுகிருர்கள். அவையும் ஆயிரக் கணக்கான முறையில் வெளியாகின்றன. ஜனங்களும் நாக்கைச் சொட்டிக்கொண்டே வாசிக்கிருர்கள். அச்சு இயந்திரம் மூன்ரும் பதிப்பையும் முப்பதாம் பதிப்பையும் அச்சிட்டுத் தள்ளுகிறது. காதலிலும் கண்ணீரிலும் எத்தனை வகையுண்டோ, அத்தனையையும் அலசிப் பிழிந்த அழகான பதிப்பு முத்து முத்தான எழுத்திலே வெளிவந்துவிடுகிறது. பணக்கார யுவதிகளும் யுவர்களும் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டே அந்த ஆசிரியர்களைப் புகழ்ந்து கொண்டாடுகிருர்கள். உண்மை எழுத்தாளன், இலக்கியத்துக்காகப் பாடுபடுபவன், திறமைமிக்க புலவன் மூலையிலே வயிற்றைப் பிசைந்துகொண்டு இலக்கியத் தெய்வத்தைச் சபித்துக்கொண்டே வாழுகிருன். கோகிலாம்பாளின் காதல் மர்மத்தைப்பற்றி எழுதிய அற்புத நாவலாசிரியர், தம்முடைய நவீனத்தைச் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்து இரவு பகலாய் வாசித்து முடித்த குமாரி சுந்தரியின் உற்சாகத்தைப் பார்த்து, மேலும் புத்தூக்கம் பெற்று, பட்டுவின் புதுக் காதலைப்பற்றி மிக அருமையாக நான்கு புத்தகங்கள் எழுதி வெளியிடுகிருர். தமிழ்நாடு சீர்குலைந்து போவதற்குச் சொல்லவா வேண்டும்? இத்தனை புத்தகங்களும் வெளியான பிறகு, நம்மில் பலர் ஒழுக்கமாகவும் உத்தமமாகவும் இருப்பது அதிசயம் அல்லவா?

இதற்கு ஜனங்களைக் குறை சொல்லுவது சரியல்ல. எதை வாசிப்பது எதை வாசிக்கக் கூடாது என்பது தெரியாமல் ஜனங்கள் தவிக்கிருர்கள். மேல் அட்டையைப் பொறுத்தவரையில், நேற்றுப் புதிதாக முளைத்த பிரசுராலயம் முதல் எல்லாமே கவர்ச்சியாக வெளியிடுகின்றன. ஆகையால், அவற்றைப் பாகுபடுத்தி வாங்கக்கூடிய சக்தி பொதுஜனங்களுக்கு இல்லாமல் போகிறது. தவிரவும், சாதாரண ஜனங்களுடைய ருசி, நிலைபெருத தாகவே இருக்கும்.

எதை வாசிக்கலாம் வாசிக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த நிலைமையில் அவர்களுக்கு உதவி செய்யவும் வழிகாட்டவும் யாராவது முன் வந்தால், எவ்வளவு நலமாக இருக்கும்? இந்த வேலையைச் செய்பவரே விமர்சகர்.

ஆனால், இதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. விமர்சகர் தரும நியாயத்துக்குப் பயந்து, பாரபட்சம் இல்லாமல் விமர்சனம் செய்தால், இலக்கியத்துக்குப் பெருந் தொண்டு புரிந்தவராவார். கடமையிலிருந்து நழுவி மனம் போன போக்கில் திரியத் தொடங்கினால், அவர் இலக்கியத்துக்கும் எழுத்தாளருக்கும் பெரும் பாதகம் செய்ய முடியும். அவர் எழுத்தாளர்களை உயிரோடு சமாதியில் புதைக்கலாம். அவருடைய கையிலுள்ள ஆயுதம் மிகப் பயங்கரமானதாகும்.

தமிழ்நாட்டு விமர்சகர்களுக்கு, எழுத்தாளர்கள்என்றால், கேவலம் ஒரு கொசுப்போல. புதிய புத்தகம் ஒன்று மேஜைக்கு வந்ததும் அதை அலட்சியமாக இரண்டொரு முறை புரட்டிப் பார்த்துவிட்டு, "பூ, எழுதிவிட்டாரோ, துரை!" என்கிறார். கஷ்டப்பட்டு நூற்றுக் கணக்கான பக்கங்களிலே புத்தகத்தை எழுதிய அந்த ஆசிரியரைப் பத்தே வரியில் குட்டிவிட்டுஅவரைக்காட்டிலும் அதிகமான புகழ் அடைந்துவிடலாம் என்று நினைக்கிறார். ராமாயணப் பிரசங்கம் செய்யும் புலவர்கள், கம்பன் வால்மீகி முதலியோருடைய கவிகளில் நான்கை எடுத்துச் சொல்லிவிட்டு, கம்பனையும் வால்மீகியையும் காட்டிலும் தாங்களே பெரியவர்கள் என்று நினைத்துக் கொள்ளுகிறார்களே அந்தமாதிரியே இருக்கிறது இதுவும்.

இங்கே விமர்சகர் எழுத்தாளரைத் தம்முடைய ஜன்ம விரோதியாகவும் அவர் எழுதிய புத்தகத்தை அவர் செய்த குற்றமாகவும் கருதுகிறார். விமர்சகர்கள் புத்தகத்துக்கு மதிப்புரை எழுதுவதாகத் தெரியவில்லை. ஆசிரியருடைய உருவத்தையும் அவரிடம் தங்களுக்குள்ள நேசத்தையும் மனத்தில் வைத்துக் கொண்டே எழுதுகிறார்கள். பிடித்தால் சொர்க்க லோகம்; பிடிக்காவிட்டால் அதல பாதாளம். கத்தி பிடிக்கவேண்டியவர்கள் எழுதுகோலைப் பிடிக்கிறார்கள். மேற்கு அரங்கத்திலே நேசவல்லரசுகளுடன் சேர்ந்து இந்தியப் படைகளின் புகழுக்குக் காரணமாய் விளங்கவேண்டியவர்கள், மதிப்புரை என்னும் திருப்பணி புரிகிறார்கள்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு, மாத்யூ ஆர்னல்ட் விமரிசனத்தைப்பற்றி ஓர் அருமையான கட்டுரை எழுதினார். அதில் விமரிசனத்தின் கருத்து என்ன என்பதைப்பற்றி மிக்க அழகாகக் கூறியிருக்கிறார். எங்கே சிறப்பான, முக்கியமான அம்சங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் கண்டுபிடித்து வாசகர்களுக்குக் காட்டுவதே விமரிசகர் கடமை என்று அவர் கூறுகிறார்.

இதை நம்முடைய விமர்சகர் கவனிப்பதாய்த் தெரியவில்லை. விமர்சனம் என்றால் குறை சொல்லுவதென்றே அவர்கள் நினைக்கிறார்கள். குணங்கள் அவர்களுடைய கண்களுக்குத் தென்படுவதே இல்லை.

தற்போது பத்திரிகைகளில் வரும் மதிப்புரை உண்மையான விமர்சனம் ஆகவே ஆகாது. அதற்குப் பத்திரிகைகளைக் குறை சொல்லுவதும் சரியல்ல. பொதுவாக, தினசரிப் பத்திரிகைகளில் ஒவ்வொரு வரியும் முக்கியமானதாகும். தினசரிப் பத்திரிகைகளுக்குச் செய்திகளே உயிர். ராமாயணப் பதிப்பைப் பற்றிய மதிப்புரையைக் காட்டிலும் இங்கிலாந்துமீது குண்டு வீசிய எதிரி விமானங்களில் எத்தனை சுட்டு வீழ்த்தப்பட்டன என்பதே அவர்களுக்கு முக்கியம். ஆகையால் அவை 1000 பக்கப் புத்தகத்தைப் பற்றிப் பத்தே வரியில் மதிப்புரை எழுதுவதை நாம் சகித்துக் கொள்ளலாம்.

ஆனல், விமர்சனம் சுருங்கச் சுருங்க விமர்சகனுடைய கடமை அதிகமாகிறது. சுருக்கமான விமர்சனம் எழுதும்போது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். புத்தகத்துக்கு மதிப்புரை எழுதும்போது, விமர்சகர் நீதிபதிபோல. புத்தக ஆசிரியர் கைதிக்கூண்டில் நிற்கிறார். அவருடைய பேரும் புகழும் விமர்சகர் கையில் ஊசலாடுகிறது. நீதி வழங்குவதில் மயிரிழை பிசகினுலும், குற்றவாளிக்குத் தண்டனை கிடைப்பதுபோல, இங்கே எழுத்தாளனுடைய பேருக்கும் புகழுக்கும் கொலைத்தண்டனை கிடைக்கிறது. எழுத்தாளனைப் பொறுத்தவரை, அவனுடைய உயிரைக்காட்டிலும் பெயரே முக்கியம். நான்கு பேர் நன்ருயிருக்கிறது என்று சொன்னல், அவன் சாவதற்கு முன்பே செத்துப்போகத் தயாராயிருக்கிருன். ஆகையால், எப்படி நியாயம் வழங்குகிறது? என்ன தான் முயன்ருலும், பத்து வரியில் புத்தகத்தின் குணதோஷத்தை ஆராய்வது இலகுவல்ல. ஆகையால், குறைகளை எடுத்துக் கூறும்போது குணங்களையும் அவசியம் கூறவேண்டும். ஆசிரியர்களை உயிரோடு தோல் உரிப்பதில் ஆனந்தங்கொள்ளலாகாது.

பெரும்பாலான புத்தகங்கள் சிறந்த சிறந்த இலக்கியங்கள் அல்ல என்பதை விமர்சகன் அறிவான். அவைகளை வேருருமுறையில் மதிக்கவேண்டும். இலக்கியத்திலே இரு வகை உண்டு. ஒன்று சாசுவத இலக்கியம். மற்ருென்று தற்காலிக இலக்கியம். சாசுவத இலக்கியம் என்றும் நிலைத்து நிற்பது. தற்காலிக இலக்கியம், அந்தத் தலைமுறை மக்கள் மாத்திரம் படித்து இன்புறத்தக்கதாய் இருக்கும். தற்காலிக இலக்கியத்திலே, பிறர் புகழ்ந்து ரசிக்கத்தக்க அம்சம் என்ன இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதிலேயே, அவனுடைய சக்தியின் பெரும் பகுதி செலவாகும்.

தற்காலிக இலக்கியத்தை மதிப்பிடும்போது, விமர்சகன் தன்னுடைய ஞானத்தையும் மேதையையுமே அளவாகக் கொள்ளக் கூடாது. அவன் முன்பு நிற்கும் கேள்விகள் இரண்டு: ஒன்று, இந்தப் புத்தகம் எனக்குப் பிடித்திருக்கிறதா? இரண்டாவதாக, இது பொதுஜனங்களுக்குப் பிடிக்குமா?

தனக்குப் பிடித்ததே ஜனங்களுக்குப் பிடிக்குமென்றும் தனக்குப்பிடிக்காதது ஜனங்களுக்குப் பிடிக்காதென்றும் விமர்சகன் நினைக்கலாகாது. ஏனெனில், துர்ப்பாக்கியவசமாக, அந்த ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்பவர் மூளையில் களிமண் இருக்கலாம். உதாரணமாக, பெரிய 'ற'ஞவா, சின்ன 'ர'ஞவா என்று கேட்கும் விமர்ச

கருக்கு யாப்பருங்கலக்காரிகை அர்த்த மற்றதாகவும் அயோக்கியத்தனமானதாகவும் இருக்கலாம்.

ஆம். விமர்சகன் இலக்கியத்துக்கு ஓர் அரிய தொண்டன். நேர்மையான விமர்சனத்தால் பொதுஜனங்களுக்கும் இலக்கியத்துக்கும் எழுத்தாளர்களுக்கும் பயன் உண்டு. எத்தனையோ குப்பை கூளத்துக்கு மத்தியில் அவன் ஓர் அற்புதமான கதாசிரியனையோ, கவியையோ, கட்டுரையாளனையோ கண்டு பிடித்து இதோ பாருங்கள் என்று உலகத்துக்குக் காட்டலாம். அவன் இலக்கிய விஞ்ஞானி.

ஆசிரியர்களும் ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். பேச்சிலோ அசதி மறதியிலோ அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அச்சிலே தங்கள் சரக்குகளை வெளியே கொண்டுவர விரும்பினால், உலகத்தாரின் தீர்ப்புக்கு முன்னே தைரியமாய் நிற்க அவர்கள் தயாரா யிருக்க வேண்டும். கோடம்பாக்கம் காமாட்சியைப் பற்றியும் மீனம்பாக்கம் மேனகையைப் பற்றியும் எழுதிவிட்டு இவை அமர இலக்கியங்கள் என்றும் இவற்றிற்குச் சாதகமான மதிப்புரையே வெளிவரும் என்றும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சரியல்ல. எப்போது ஆசிரியர்கள் என்று வெளிவருகிறார்களோ அப்போதே, விமர்சகர்களுடைய அபிப்பிராயத்துக்குத் தலைவணங்கவேண்டும். அவர்கள் விமர்சகர்களைத் தங்கள் ஜன்ம விரோதிகளாக நினைக்காமல் நண்பர்களாகவும் கலைத் தொண்டர்களாகவும் நினைக்கவேண்டும். விமர்சகர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே இத்தகைய நல்லுறவு ஏற்பட்டால், இலக்கியத்திற்கு அதிர்ஷ்டம் பிறக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

*

அபேதவாத சூட்சுமம்

இரண்டு அபேதவாதிகள் உற்சாகமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

“எல்லோருக்கும் நல்ல காலம் வரப்போகிறது. மார்க்ஸ் கண்ட கனவு பலிக்கப் போகிறது. பூலோகத்திலே பரலோக ராஜ்யம் ஏற்படப் போகிறது என்பதில் சந்தேகம் இல்லை. சமத்துவமும் சகோதரத்துவமும் பரவப் போகிறது. உன்னிடம் இருபதினாயிரம் பவுன் இருந்தால், அதில் பாதி எனக்குக் கொடுப்பாய் அல்லவா?” என்றான் ஒருவன்.

“ஆஹா, அதில் என்ன சந்தேகம்?” என்றான் மற்றவன்.

“உன்னிடம் பத்து வீடுகள் இருந்தால், அதில் ஐந்து வீடுகளை எனக்குக் கொடுப்பாய் அல்லவா?

“ஆம், தாராளமாய்க் கொடுப்பேன். இதில் என்ன வஞ்சகம்?”

“உன்னிடம் இரண்டு பசுமாடுகள் இருந்தால், அதில் ஒன்றை எனக்குக் கொடுப்பாய் அல்லவா?”

“மாட்டேன்.”

“மாட்டாயா! ஏன்?”

“என்னிடம் நிஜமாகவே இரண்டு பசுமாடுகள் இருக்கின்றன. அதனால் தான்.”

நியாயம்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

ரிப்பன் சிலையின் பீடத்தில் அவன் படுத்துத் தூங்கினான். அந்தப் பையனுக்குப் பதினாறு வயது தான் இருக்கும். குப்பையில் எறிந்த ஒரு கந்தல் சாக்குத்தான் அவனுடைய அரை வேட்டி. அது நழுவிக் கீழே விழுந்துகிடந்தது. அந்த அழகான சிலையோடு சிலையாய் அவன் ஒட்டிக் கிடந்தான். வானத்திலே சூரியன் இவனைப் பார்த்துச் சிரிப்பது போல் காய்ந்து கொண்டிருந்தான். பொழுது விடிந்த பிரக்ஞைகூட இல்லாதவனாய், பிறந்த மேனிக்கு அவன் தூங்கிக்கொண் டிருந்தான். இவனைப்போல் இன்னும் எத்தனையோ பேர், வேறு வேறு கண்டங்களிலும்தான் இருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் பார்த்துப் பார்த்துச் சிரித்துத்தான் இருப்பான் சூரியன். சிரிப்பிலே சூரியனுக்குச் சலிப்பேது? அவன் சிரிப்பதற் கென்றே பிறந்தவன்.

அவனைச் சுற்றிலும், உயிர்களின் நடமாட்டம் வலுத்தது; ஒளி பரவியது. அவனோ அசையவில்லை. அவனுக்கு இன்னும் பொழுது விடியவில்லை; அவன் இன்னும் இரவின் மாய அமைதியிலே கட்டுண்டிருந்தான்.

சிலையைச் சூழ்ந்துள்ள பசும்புல் பாத்திக்குத் தண்ணீர் தெளிப்பதற்காக, கார்ப்பொரேஷன் சிப்பந்தி, ஒரு வாளியோடு வந்து சேர்ந்தான். அங்கே உறங்கிக் கொண்டிருக்கும் இந்த அனாதையைக் கண்டதும், அவன் ஆபாசமாய்த் திட்டினான்; அந்தப் பாட்டுக்குத் தாளம் போடுவதுபோல, பையனின் முதுகில் மொத்து மொத்தென்று உதைத்தான். இதற்கெல்லாம் பையன் மசியாததைக் கண்ட சிப்பந்தி, பையனின் முகத்தை முரட்டுத்தனமாய்த் திருப்பி, அதற்கு நேரே வாளியின் மூக்கைப் பிடித்து, தண்ணீரைக் கொட்டினான். பையன் எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டு மிரளமிரள விழித்தான். தண்ணீர் இன்னும் அவன் முகத்திலே, சிலீர் என்று ஊசி சரம்போல் சொரிந்து கொண்டிருந்தது. கைகளால் முகத்தை மூடிக் கொண்டு, தன் கந்தல் சாக்கையும் சுருட்டிக்கொண்டு, பையன் சங்கிலி வேலியைத் தாண்டிக் குதித்து, ரஸ்தாவின் இடது பக்கத்துக்கு ஓட்டம் பிடித்தான். தன் உடம்பிலே இருந்த தண்ணீரைத் துடைத்துக் கொண்டு, இரைக்க இரைக்க அங்கே நின்றான்.

தோகைபோன்ற மேலங்கியின் மடிப்புகள் பிரிந்து கிடந்த ரிப்பன் பிரபுவின் அழகான கல் தொந்தியின் மீது, சூரியன் தன் கிரணங்களால் கொஞ்சித் தடவினான். அதன் பின்னே, அவன் சுட்டுப் பொசுக்கும் தன் கோடைச் சிரிப்பைச் சிரித்தான்; அந்தச் சிரிப்பு, சிறுவனின் வயிற்றுக்குள்ளே புகுந்து, மின்சாரம் போல் தாக்கியது.

அவன் திருடன்! கோடி கோடியாய்க் கொள்ளையடிப்பவர் திருடரல்ல. அவர்கள் சட்டப்படி செய்வார்கள்; அல்லது சட்டத்தை ஏமாற்றுவார்கள். இரண்டும் தெரியாத பேதை, ஒரே ஒரு வாழைப்பழம் திருடினாலும், அவன்தான் சமூகத்தின் பரம சத்ரு. ஆஹா! நியாயம் எவ்வளவு அழகாக அவனுக்கு வழங்கப்படுகிறது!

வழியிலே போவோர் வருவோரையெல்லாம், தெய்வத்தின் பெயரால், ஒரு சல்லி—ஒரே ஒரு சல்லிதான்—அவன் பிச்சை கேட்டான். ஆனால், கோயில்களிலே தெய்வமேது? பணப் பைகளிலே தம்படிக்காசுகளுக்கு இடமேது? காப்பி ஓட்டல் வாசல்களிலே போய் அவன் நின்று கொண்டான்; வயிறு நிரம்பி ஏப்பம் விட்டுக்கொண்டு வாயிலே புனமுறுவல் தவழ வெளியே வருவோரை யெல்லாம், ஆவலோடு பார்த்தான். கையை எவ்வளவுதான் நீட்டினாலும், அவன் கைதான் வலித்தது; காசு போடுவோரைக் காணோம்.

பசியால் அப்படியே ஐந்தடியில் சுருண்டு விழுந்தான். அவன் தொண்டை வறண்டது. கண் பஞ்சடைந்தது. என்றாலும், சிரமப் பட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

இந்தச் சமயத்தில் ஒரு கை வண்டி நிறையக் கனிந்த வாழைப் பழங்களை ஒருவன் வீதியிலே இழுத்துக் கொண்டு போனான். பையன் தள்ளாடித் தடுமாறி எழுந்து, மூச்சைப் பிடித்துக்கொண்டு, அந்த வண்டிக்குப் பின்னே ஓடினான். அதிலிருந்து ஐந்தாறு பழங்களைப் பிடுங்கினான். ஒரு பழத்தை, தோலைக்கூட உரிக்காமல் பர பர என்று வாயிலே திணித்துக் கொண்டான். ஆனால், அதை அவன் விழுங்க முடியவில்லை; இடுக்கிபோல் ஏதோ ஒன்று அவன் மென்னியைப் பிடித்து இறுக்கியது. இரண்டொரு நிமிஷங்கள் சென்றதும், அந்தப் பிடி தளர்ந்தது. உடனே அவன் தலையில் பலமான ஒரு குட்டு விழுந்தது. அந்தக் குட்டினால், அவன் முதுகெலும்பே கலகலத்து விட்டது; அவன் காது ஞொய் என்று அடைத்துக் கொண்டது. சிறிதுநேரம் வரையில் கற்சிலை போல் அவன் திகைத்துநின்றான். பின்பு, நிமிர்ந்து பார்த்தான். கண்களிலே தீ பறக்க, இவனை உறுத்து விழித்துக் கொண்டு, ஒரு தடியன் நிற்பதைக் கண்டான்.

"திருட்டுப் பயலே!" என்று கர்ஜித்த அந்த மனிதன், "வா தாணாவுக்கு. பளமா

தின்னே, பளம்? அங்கே இன்னும் ருசியா வேறே பளம் தின்னலாம்; வா'' என்ருன்.

பையன் துக்கம் தாளாமல் ஊமையாஞன். உலகத்திலேயே தான் ஒருவன்தான் அநாதை என்று அவனுக்குத் தோன்றியது. தன்னைக் காப்பாற்ற அங்கே யாரும் இல்லை. அவன் ஓட நினைத்தான். அப்படி அவன் நினைக்கு முன்னே, அவனுடைய அந்தச் சபல எண்ணத்தை, அவன் விழித்த விழியிலிருந்தே அந்தத் தடியன் தெரிந்து கொண்டு விட்டான்; அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். பழமும் கையுமாய், அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்ருன்.

அந்த டிவிஷனின் சப் இன்ஸ்பெக்டர் ஒரு வாலிபர். இப்போதுதான் பயிற்சிக் காலம் முடிந்து, புதிதாய் உத்தியோகம் வகிக்கத் தொடங்கி யிருந்தார். வேலை செய்வதில் மிகவும் ஆர்வம் படைத் திருந்தார். மகுடம் போட்ட தம் போலீஸ் பித்தான்களைப் பளபளப்பாய்த் துடைத்துக்கொண்டு, ஜரிகையிட்ட தம் சிவந்த தலைப்பாவைத் தூசி தட்டிச் சுத்தமாய் வைத்துக் கொள்வதிலே அவருக்கு மிகுந்த ஆசை.

திருட்டின் விவரங்களை, அவர் வெகு கம்பீரமாய் விசாரித்தார். அவரைச் சூழ்ந்து நின்ற ஜவான்களெல்லாம், பையனை வெறித்துப் பார்த்தார்கள். பையனே, சுவரிலே தொங்கிய லாத்திகளைக் கண்டு மெய் நடுங்கிஞன். சப் இன்ஸ்பெக்டர், வெகு கம்பீரமாகவே, குற்றவாளி மீது பிராது தயாரித்து விட்டார்.

கோர்ட்டிலே மாஜிஸ்டிரேட், ஓயாமல் கொட்டாவி விட்டுக் கொண்டே, விசாரணை நடத்தினர். பிராஸிகியுஷன் தரப்பு சப் இன்ஸ்பெக்டர் அற்புதமாய் வாதம் செய்தார்; வழக்கின் சாராம்சத்தை அவர் எடுத்துக் காட்டியது, குற்றவாளிகளின் மனோதத்துவம் பற்றிய ஓர் அரும் ஆராய்ச்சி இலக்கியமாயிருந்தது. இந்த இளம் திருடனைச் சும்மா விட்டால், பின்னல் கொடுங் குற்றம் புரியத் தயங்கமாட்டான் என்று வாதித்து, இவனுக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டுமென்று அவர் போராடினர். ஒரு வாரத்துக்கு முன்னே யாரோ ஒரு கிழக் கனவான் எஸ்பிளனேட்டுக் கடைகளில் சாமான் வாங்கிக் கொண் டிருந்தபோது அவர் ஜேபியிலிருந்த பணப்பையைக் களவாடிச் சென்றவன் இவன்தான் என்று, 3245 சி. ஜவான் அடையாளம் சொன்ஞன். ஒரு சைக்கிள் விளக்கைத் திருடிக்கொண்டு இந்தச் சிறுவன் ஓடியபோது, தான் நேரே கண்டு இவனைத் துரத்தியதாகவும் பயல் தப்பிச் சென்று விட்டதாகவும்

> ### சைத்தானின் நோய்
>
> "சைத்தான் - அதாவது பாவ புருஷன்-நோய் பிடித்துவிட்டான். அவன் மனம் மாறி மகாத்மா ஆக விரும்புகிருன்'' என்ற கொள்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான், அட்லாண்டிக் சாசனம், பெவரிட்ஜ் அறிக்கை, கல்விச் சட்டம் முதலிய பல பிரகடனங்கள் தற்காலத்தில் செய்யப்படுகின்றன. ஆனல், சைத்தானின் நோய் தீர்ந்து பழைய சைத்தான் ஆகிவிடும் போது, இந்தப் பிரகடனங்களை யெல்லாம் ஒழுங்காய் அனுஷ்டிப்பான் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?
>
> — ஸி. இ. எம். ஜோட்

3259 நி. ஜவான் சாட்சி சொன்ஞன். இவன் மகா அபாயமான ஆசாமி. பட்டணத்திலுள்ள முடிச்சுமாரிகளுக்கெல்லாம் தலைவன் இந்தப் பயல்தான்—இவ்வாறெல்லாம் சப் இன்ஸ்பெக்டர் வாதித்து முடித்தார்.

கைதிக் கூண்டில் நடு நடுங்கிக் கொண்டு நிற்கும் கைதியை மாஜிஸ்டிரேட் பார்த்தார். தம் எதிரில் இருந்த காகிதங்களை ஒரு புரட்டுப் புரட்டினர். தமது பேனவை விரல்களுக் கிடையே உருட்டினர். அதிகார தோரணையால் இருண்ட அவர் கண்களுக்கு, தம் முன்னே நிற்கும் பையனின் வாலிப வசீகரத்தின் அழகு எப்படிப் புலப்படும்? இவரையே பார்த்துப் பழிப்பது போல் பளபள என்று ஜொலிக்கும் அந்தச் சிறுவனின் கண்களை, மாஜிஸ்டிரேட் ஒருவித உணர்ச்சியும் இல்லாமல் வெருண்டு நோக்கினர். பஞ்சமா பாதகர்களின் கண்களையும், வேசிகளின் கண்களையும் தான் அவர் கண்டிருக்கிருர்; அவருக்குக் குழந்தைகள் கிடையாது.

"போர்ஸ்டல் சிறையில் மூன்று வருஷம் போடு" என்று ஆடம்பர கம்பீரத்தோடு அவர் தீர்ப்பளித்தார்

உலகத்து நீதி மன்றங்களெல்லாம் ஜயபேரிகை முழங்கின.

கந்தரின் இந்தியா

பிரபல அமெரிக்க ஆசிரியரான ஜான் கந்தர், இந்தியாவைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிருர்:

"அங்கே புருக்களையும் குரங்குகளையும் புனிதமானவையாகக் கருதுகிருர்கள். சோடா பாட்டில்களை, குண்டு போட்டு அடைத்து வைக்கிருர்கள். அந்த நாட்டில் ஒரு மயிலைக் கொன்ருல், பத்து வருஷம் சிறைக்குப் போகவேண்டும். அமெரிக்க சிகரெட்டுகள் அமெரிக்காவில் விற்பதைக் காட்டிலும், மலிவாய் அங்கே கிடைக்கின்றன. பிரேதங்களைக் கழுகுகளுக்கு இரையாகக் கொடுக்கிருர்கள். அங்கே உள்ள முப்பத்தைந்து கோடி மக்களில் 30-லட்சம் பேர்களுக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். சிம்லாவில், வைசிராயையும், கவர்னரையும் தவிர வேறு யாரும் மோட்டாரில் போக முடியாது. இந்தியாவில் உள்ள பத்திரிகைக்காரர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சென்னை மாகாண வாசிகள்."

கள்ளனுக்குள் குள்ளன்

ஓர் அமெரிக்க சினிமாக் கம்பெனி முதலாளி, பெர்னர்ட் ஷா எழுதிய ஒரு நாடகத்தைப் படம் பிடிக்க விரும்பினர். நாடக உரிமையைப் பெறுவதற்காக, அவர் ஷாவுக்குக் கடிதம் எழுதினர். இவ்வளவு பணம் வேண்டுமென்று ஷா கண்டிப்பாய்ச்சொன்னர். சினிமா முதலாளி, மகா தந்திரசாலி. அந்தத் தொகையில் ஒரு பகுதியை எப்படியாவது குறைக்க முயன்ருர். தொகையைக் கொஞ்சம் குறைத்தால்தான் தாங்கள் வாங்க முடியுமென்று குறிப்பிட்டு மறுபடியும் எழுதிய கடிதத்தில், "நீங்கள் உரிமை கொடுத்தால், ஆயிரக்கணக்கான மக்களுக்கு உங்கள் நாடகங்களைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். நீங்கள் கொடுக்கவில்லையானல், அதைப் பார்க்கும் பாக்கியம் அவர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறது? அது சினிமாவாக வெளி வந்தால், கலையுலகத்துக்குப் பெருஞ் சேவையாக விளங்கும்" என்று முகஸ்துதியாய் வரைந்தார். பெர்னர்ட் ஷாவா மசிகிறவர்? "நீங்கள் கலையையே பிரதானமாகக் கருதுகிறீர்கள். நான் பணத்தையே பிரதானமாகக் கருதுகிறேன். என்ன செய்வது!" என்று பதில் எழுதிவிட்டார்.

அறியாமை

மு. அருணசலம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னே, மயிலத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் இளைஞர் மகாநாடொன்று நடந்தது. சமாஜத்துப் பெரியோர் பலர் என்னிடம் அன்புடையவர்கள் ஆதலால், என்னை அந்த இளைஞர் மகாநாட்டுக்குத் தலைமை 'வகிக்க' வேண்டுமென்று கேட்டார்கள். வயதில் நான் இளையவனயிருந்தது ஒரு காரணம்; சமயமென்றும் சாத்திரமென்றும் புத்தகங்களையும் ஏடுகளையும் போட்டு நான் அச்சமயம் புரட்டிக் கொண்டிருந்தது மற்ருெரு காரணம். சைவத்திலும் சித்தாந்தத்திலும் இவன் புலியாயிருப்பான் என்று அவர்கள் எண்ணிவிட்டார்கள் போலும்!

தலைமையும் 'வகித்தேன்', சொற்பொழிவும் 'ஆற்றினேன்.' இவற்றிலெல்லாம் எனக்கு அப்போது மிக்க மகிழ்ச்சி. மகாநாடு நடந்து கொஞ்சநாள் கழித்து, 'நீங்கள் இந்தக் கருத்தைச் சொன்னீர்க ளல்லவா? மிகவும் நன்ருயிருந்தது' என்று நண்பர் யாராவது என்னைப் பாராட்ட நேர்ந்த போதெல்லாம், என்னுடைய மகிழ்ச்சி அளவுகடந்து போய்விடும்.

இதையெல்லாம் இப்போது நினைத்தால் எனக்கே சிரிப்பாய்த்தான் இருக்கிறது. சமயத்தைப் பற்றியும் கடவுள் தத்துவத்தைப் பற்றியும் பேச எவ்வளவோ அனுபவம் வந்த பெரியோர்களும் அஞ்சுகிருர்கள். அந்தத் தத்துவம், ஒன்ரு, பலவா? அது, குறித்த ஒன்றுதான? அல்லவா? இருக்கிறதா? இல்லையா? இத்தகைய கேள்விகளுக் கெல்லாம் விடையளிக்க முடியாது. இவை யாவும் உண்டென்றுஞ் சொல்லலாம், இல்லையென்றும் சொல்லலாம். கடவுளாகிய நம்பி குடிவாழ்க்கையே இப்படி இருக்கும் போது, நமக்கு இங்கு என்ன பிழைப்பிருக்கிறது என்று ஞானிகள் எண்ணுகிருர்கள்.

இப்படிப்பட்ட ஞானியாக இல்லாமையால்தான், அன்று தலைமை வகிக்க நான் இணங்கிவிட்டேன். என்னை வந்து கேட்டது பற்றி எனக்குப் பெருமைதான். யாருக்குத்தான் புகழுரையில் விருப்ப மில்லை?

ஆனல், சமயத்தைப்பற்றி எனக்குத் தெரியுமா? வந்தவாறு எதோ? போமாறெங்ஙனே? என்று தெரியாமல் அப்பர் சுவாமிகளே திகைக்கிருர். ஆகவே, தெரியாதென்று ஒப்புக் கொள்வதற்கு (அன்று தலைமை வகித்திருந்த போதிலும்கூட) இன்று நான் வெட்கப்பட வேண்டியதில்லை. தெரியாது என்று தைரியமாய் ஒப்புக் கொள்ளுகிறேன்.

நேற்று வீட்டில் என் தங்கைக்குக்கொஞ்சம் காய்ச்சலடித்தது. என், என்ன என்பது நமக்கு அவ்வளவு எளிதாக விளங்கக்

"எனக்கும் உனக்கும் ஒரே ஒரு வித்தியாசம்: நான் அறியேன் எனபதை நான் அறிவேன்: நீ அறியாய் என்பதை நீ அறியாய்'' என்று யாரோ ஒரு பிரபல ஐரோப்பிய மகான் கூறினர். அறியாமையை அறிந்து, அதையே ஆண்டவனுக்கு ஆராதனையும் செய்துவிடுகிருர் ஒரு தமிழ்நாட்டுப் பக்தர்!

காணேம். எங்களூர் நாட்டு வைத்தியனுக்குச் சொல்லி யனுப்பினர்கள். அவன் வந்தான். வைத்தியன் என்ருல், எவனே என்று மலைக்கவேண்டாம். பரியாரி கலியன் மகன் குப்பன்; எழுத்துக் கூட்டிக் கூட அவனுக்குப் படிக்கத் தெரியாது. வந்து, தங்கை கையின்மீது மெல்லிய பட்டொன்றைப் போட்டு, கையைப் பிடித்து நாடி பார்த்தான். பார்த்துவிட்டு, "வாதம் கொஞ்சம் கனத்திருக்கிறது. ஒருவேளை மருந்தில் குணமாகிவிடும்" என்று சொல்லி, ஏதோ ஒரு பொடியைக் கொடுத்துவிட்டுப் போனன். அவன் சொன்ன படியே ஓமச் சாற்றில் அப்பொடியைப் போட்டுக் கொடுக்க, காய்ச்சல் போய் விட்டது.

எனக்கோ, நாடியா, அதில் வாதமா, அது கனப்பதா ஒன்றும் தெரியாது. ஆகவே, குப்பனுடைய அறிவையும் அவன் தந்த பொடியின் வேலையையும் கண்டு எனக்கு அளவுகடந்த ஆச்சரியந்தான்.

என்னுடைய மைத்துனன் ஒருவன் — சிறு பையன் — வைத்தியக் கல்லூரியில் படிக்கிருன். அவனைக் கேட்டால் இன்னும் எவ்வளவோ சொல்கிருன். "இந்தச் சுரம் இன்ன இன்ன காரணத்தால் வந்தது, இன்ன சரக்குகள் உடம்பில் சேர்ந்தால், உடம்பு நிதானத்துக்கு வரும்" என்று சற்றுத் தெளிவாகவே இவன் சொல்லுகிருன். குப்பனைவிட இந்தச் சிறு பையன் அதிகமாகத் தெரிந்திருக்கிருன் என்பதில் சந்தேகமில்லை.

ஆனல், உயிர்ப்பொருள்களைக் குறித்த இரசாயனம் படிக்கும் மாணவனைக் கேட்டால், அவனுக்கு இன்னும் சில விவரங்கள் தெரிந்திருக்கின்றன. உடம்பில் என்னென்ன உலோகங்கள், வாயுக்கள் முதலியன சேர்ந்திருக்கின்றன, கொடுக்கும் மருந்தில் எவையெவை அடங்கியுள்ளன என்பன வெல்லாம் இவனறிந்த அளவு வைத்தியக் கல்லூரி மாணவனுக்குத் தெரியாது.

எனவே, இம் மூவரிடத்தும் உடம்பையும் மருந்தையும் பற்றிய அறிவு வெவ்வேறு வகையில் வளர்ந்தும் விரிந்தும் இருக்கக் காண்கிருேம்.

சின்ன விஷயமொன்று இப்போது ஞாபகம் வந்தது, சொல்லுகிறேன். ஒருநாள் மாலை தஞ்சாவூர் ஸ்டேஷனில் ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னுடன் என் மனைவியும் குழந்தைகளும் இருந்தார்கள். சிறு பெண் ஒருத்தி பூ விற்றுக் கொண்டிருந்தாள்- பூக்காரப் பெண்ணின் தந்திரத்தைச் சொல்ல வேண்டுமா? குழந்தைகள், அதிலும் பெண்களைப் பார்த்துவிட்டால், சுற்றிச்சுற்றி வருவாளே தவிர, நாம் பூ வாங்காத வரையில் அப்புறம் இப்புறம் அசைவாளா? பூ வாங்கிக் கொடுக்காத வரையில், நம்முடைய மனைவிகள் அல்லது குழந்தைகள்தான் ஆகட்டும், நம்மை விடுமா? ஆகவே வேறு வழியின்றி அவளைக் கூப்பிட்டேன்.

அவள் வந்தாள். ஏதோ கொஞ்சம் பேரம்பண்ணி ஓரணுவுக்குப் பூ வாங்கினேன். பூ, மல்லிகைப் பூ என்று நினைத்துக் கேட்டேன். அவளோ, "இது மல்லிகைப் பூ அல்ல, இது பிச்சிப் பூ" என்ருள். நான் விடவில்லை. பள்ளிக்கூடத்திலே மரஞ்செடி கொடிகளைப் பற்றி ஏட்டில் படித்த படிப்பு

லேசில் என்னை விட்டதா? இல்லை. ஆகவே நான் கற்ற பாடத்தை அவளிடம் ஒப்புவிக்க ஆரம்பித்தேன்.

"இல்லையில்லை. இது மல்லிகைப் பூத்தான். பார், இதன் இதழ்கள் விரிந்துள்ள முறையும், இதன் நிறமும் மணமும் இது மல்லிகை என்பதைத் தான் காட்டுகின்றன. மற்றெந்தப் பூவும் இப்படியிராது. அதன் தோற்றமும் இப்படியிராது. தோற்றமே வேறு மாதிரியிருக்கும்'' என்று ஆரம்பித்து, மல்லிகையைப் பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்தேன். நான் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராயிருந்து, அவள் என்னிடம் பாடம் படிக்கும் மாணவியா யிருந்தாலும், இவ்வளவு விரிவாகச் சொல்லியிருக்க மாட்டேன்.

ஏனோ தெரியவில்லை, அந்தப் பூக்காரப் பெண் அந்நேரத்தில் அந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் என் பிரசங்கம் முழுவதையும் பாவம், பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு நிதானமாக அவள் சிரித்துக் கொண்டே என்னை நோக்கிச் சொல்லலானாள் :

"சாமி, நீங்கள் என்னமோ பாடம் ஒப்பிச்சீங்க, அதெல்லாம் சரிதான். நீங்கள் சொன்னது மல்லிகைப் பூத்தான். மல்லிகைப் பூ என்றால், அதிலே எத்தனை சாதி, உங்களுக்குத் தெரியுமா? இதோ இருக்கிறதே இந்தப் பிச்சிப் பூவும் அதிலே ஒரு சாதி. இன்னும் மற்றச் சாதியெல்லாம் சொல்லுகிறேன் கேட்கிறீங்களா?'' என்று சொல்லிவிட்டு, மடமடவென்று அடுக்கு மல்லிகை, நித்திய மல்லிகை, குண்டு மல்லிகை, குட மல்லிகை, காட்டு மல்லிகை, கஸ்தூரி மல்லிகை, மல்வல், சாதி மல்லிகை முதலிய பெயர்களை யெல்லாம் அடுக்கினாள். கடைசியாக, "சாமி, மல்லிகையிலேயே மஞ்சள் மல்லிகை தெரியுமா உங்களுக்கு? இராமபாணம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்றாள்.

நான் திக்கு முக்காடிப் போனேன். மல்லிகை எனக்குத் தெரியுமென்று சொல்லப்போக, அதன் விளைவு இது! அடேயப்பா, எத்தனை சாதிதான் உண்டு இந்த மல்லிகையில்!

கடைசியாக அவள் இன்னொரு பாணத்தை விட்டாள் :

"சாமி, மன்மதபாணம் வேணுமா உங்களுக்கு?'' என்றாள்.

நான்தான் என்ன செய்யக் கூடும்? அவளோ சிறு பெண். எளிமையான ஒரு பூக்காரிதான் என்றெண்ணி அவளிடம் என் திறமையைக் காட்டப்போக, அவள் இப்படியெல்லாம் கேட்கிறாளே என்று என் மனத்தினுள்ளேயே ஒரு பரிதாபம். நல்ல காலமாக அவள் "அதுவும், மல்லிகையிலே ஒரு சாதிதான் சாமி, என்னமோண்ணு நெனச்சிக்காதீங்க'' என்று சொல்லிக் கொண்டே அப்பால் போய் விட்டாள்.

என்னுள்ளத்திலிருந்தும் ஒரு பெரிய சுமை நீங்கிற்று. கண்ணும் கொஞ்சம் திறந்தது. என்னவோ எல்லாவற்றையும் தெரிந்து விட்டோம் என்ற செருக்கு, இந்தச் சிறு பெண் காரணமாக நீங்கிற்றல்லவா? மல்லிகையைப் பற்றி அவள் அறிந்துள்ளதை நோக்கும்போது எனக்குத் தெரிந்தது எவ்வளவு அற்பம்? ஒன்றுமே தெரியாது என்று சொல்லி விடலாம். ஆயி

னும், தெரியாது என்பதையே நான் இதுவரைதெரிந்துகொள்ள வில்லையே!

ஆம், தெரியும் என்ற செருக்கு மிகவும் பொல்லாததுதான். சந்தேகமில்லை. எல்லாம் தெரியும் என்றெண்ணியிருந்த ஔவை யார், கேவலம் ஒரு மாட்டுக் காரப் பயலிடம் 'தெரியவில்லை' என்று சொல்லித் தலை குனிய வேண்டி வந்ததல்லவா? "பாட்டி, சுடுகிற நாவற்பழம் வேண்டுமா, சுடாத நாவற்பழம் வேண்டுமா?" என்று அவன் கேட்ட போது ஔவையாருக்கு விளங்க வில்லை. பிறகு, மணல் ஒட்டிய பழம் சுடுகிற பழம் என்றும், மணல் ஒட்டாத பழம் சுடாத பழம் என்றும் அவன் வேடிக்கையாக விளக்கிக் காட்டிய பின்னர்த்தான் ஔவையாருக்குக் கண் திறந்தது.

ஆகவே, இவ்வளவிலும் உண்டான கோளாறு என்ன? அறியாமையைக் கண்டு ஏற்பட்ட அச்சம். 'தெரியாது' என்று ஒப்புக்கொண்டுவிட்டால் குறைந்து போய் விடுவோமே என்று எல்லோருக்குமே அச்சந்தான். இந்த அச்சம் அவசியம்தானா? இது நியாயமாகுமா?

உலகம் எவ்வளவோ விரிந்து கிடக்கிறது. அதிலுள்ள பொருள்களின் வகை, தொழில்களின் வகை எத்தனை எத்தனையோ. மக்களுடைய ஆயுட்காலம் மிகமிகக் குறைவுதான். ஒருவர் எவ்வளவு தான் அறிவிற் சிறந்தவராயிருந்த போதிலும், ஆற்றல் மிகுந்தவரா யிருந்த போதிலும், எவ்வளவு தான் அவர் அறிந்து கொள்ள முடியும்? கல்வி கரையில, கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கில் பிணி பல என்பது பழைய வாக்கியம். பிணி பலவற்றுக்கு இரையாகாமல் இருந்தாலும், ஒருவர் பலவற்றையும் அறிதல் இயலாத காரியம். அப்படியே, ஒரு பொருளைப்பற்றி யுள்ளவை யனைத்தையும் முடியக் கண்டேன் என்று சொல்வதும் ஒருவருக்கு இயலாத காரியந்தான்.

செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது என்ற மாதிரி எத்தனையோ ஆயிரம் செலவு செய்து தான் பட்டம் கிடைத்தது. உண்மைதான். ஆனால், படித்து அறிந்திருக்கிறேன் என்று உறுதியாக நான் எண்ணியிருந்த விஷயத்தில், கேவலம் ஒரு சிறுபெண் எவ்வளவு அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறாள்! அவள் பெற்றிருக்கும் அறிவை நோக்கும் போது, நான் அறிந்துள்ளது ஒன்றுமே யில்லைதானே? ஆனால், அவள் அறிந்துள்ளதுதான் அவ்வளவு அதிகமாகுமா? கவனித்துப் பார்த்தால் இல்லையென்பது தெரியவரும். மல்லிகையைப் பற்றிச் சிறு பெண்ணாகிய அவளுக்குத் தெரிந்திருப்பதைவிட, அதே தொழிலில் நெடுங்காலமாய் ஈடுபட்டிருக்கும் தோட்டக்காரனை அவளுடைய தந்தைக்கு எவ்வளவு அதிகமாகத் தெரியும்? அவனோடு ஒப்பு நோக்க, அவளுக்குத் தெரிந்தது சொற்பந்தான்.

இப்படியே நெடுகிலும் சொல்லிக்கொண்டு போகலாம். ஒருவரை நோக்க ஒருவர் அறிவு மிகுதியாகிக்கொண்டே யிருப்பதைக் காண, முன்னவருக்கு வெட்கமும் அச்சமும் உண்டாகாம லிருக்க முடியாது. நம்மவர்கள் இதைக்குறித்து மிகவும் சிந்தித் திருக்கிறார்கள். சிந்தித்துச் சிந்தித்து, இந்த அறியாமையைக் குறித்து யாரும் பின்னடைய

வேண்டுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

கலைகள் யாவற்றுக்கும் தலைவியான கலைமகளைப் பற்றிய கற்பனையை இங்கு நினைவு கூர்வோமானால், இதன் உண்மை விளங்கும். சரசுவதியின் திருவுருவத்தைப் பார்த்தால், ஒரு கையில் ஏட்டுச்சுவடியிருப்பதைக் காணலாம். இந்திய நாட்டுமக்கட் சமுதாயம் தோன்றிய காலந் தொட்டு வழிபட்டு வருகின்ற சரசுவதி தேவியே 'இன்னும் கைமீதிற் புத்தகமேந்தி'க் கற்று வருகின்றாள் என்பது நம்மவர் கற்பனை. கற்றது அவ்வளவும் சொற்பந்தான். கற்கவேண்டியதோ மிக அதிகம்.

"கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு என்று உற்ற கலை மடந்தை ஓதுகிறாள்" என்ற தனிப்பாடல் மேற்கூறிய கற்பனையின் உட்கருத்தை நமக்குத்தெரிவிக்கிறது. ஆகவே, கலைமகளோ மேலும் கற்று வருகின்றாள் என்ற கருத்து வழங்கும் போது, அறியாமையைக் கருதி அஞ்சவேண்டியதில்லை.

இனி, கடைசியாக, முதலில் நாம் தொடங்கிய சமயத் துறைக்கே வருவோம். உலகியல் பற்றியே இந்த அறியாமை நம்மை இந்த நிலையில் வைத்திருக்கும்போது, சமயத் துறையில் இதன் ஆதிக்கத்தைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? இறைவனை எண்ணுவோம், அவன் திருவருளை வேண்டித் தொழுவோம் என்று எண்ணினால், இந்த அறியாமை வந்து குறுக்கிடுகிறது. அஞ்ஞான மேலீட்டினாலே ஒருவன் தான் என்பதை அறவே விலக்கிவிட முடியவில்லை. தான் என்பது எப்போது அகலவில்லையோ, அப்போது அங்குத் தலைவனுக்கு இடமேது?

இதை எண்ணி எண்ணி ஒரு பக்தர் பெரிதும் கவலையடைந்தார். விண்ணுலகத்தையும் பூவுலகத்தையும் தன் இரண்டு திருவடிகளால் அளந்து ஆட்கொண்ட நாராயணனை வழிபடுவதற்கு இவ் வறியாமை வந்து குறுக்கே நிற்கிறதே என்று எண்ணிப் பார்த்தார். இவ் வறியாமைக்கு என்ன செய்யலாமென்று ஆலோசித்தபோது, அவருக்கு எளிதான ஒரு வழி புலப்பட்டது.

இறைவனை வழிபடுவதற்கு பூவும் இலையுமா வேண்டும்? அல்லது தூபதீபங்களா வேண்டும்? கனிவகைகளும் பிற நைவேத்தியங்களுமா வேண்டும்? இவை கிடைக்கவில்லையே என்று அஞ்சவேண்டுமா?

இவை யொன்றும் வேண்டுவன அல்ல. அவனே கருணைக்

> **சுலபமான யுக்தி**
>
> "சமுத்திரத்தில் இந்த சப்மரின்கள் படுத்தும் பாடு சகிக்கவில்லை. அவைகளின் உபத்திரவத்தை எப்படி ஒழிப்பது?" என்று, யாரோ ஒரு ராணுவ அதிகாரி கேட்டார்.
>
> "சமுத்திரத்தையே தீப்பற்றி எரியச் செய்துவிட்டால், சப்மரின்கள் அடியோடு ஒழிந்து போகும்" என்று யுக்தி சொன்னார் வில் ரோகர்ஸ் என்ற நடிகர். "அழகாய்த் தான் இருக்கிறது. ஆனால், அதை நீர் எப்படிச் செய்வீர்?"
>
> "இதோ பாரும். நான் உமக்கு யோசனை தான் சொல்லமுடியும். அதை எப்படிச் செய்வது என்பதெல்லாம் உங்கள் வேலை" என்று பதிலளித்தார் ரோகர்ஸ்.

கடல், பயனை எதிர்நோக்காது உலகுக்கு உதவியே செய்துவரும் கருமேகத்தின் நிறத்தை யல்லவா நாராயணமூர்த்தி தன் நிறமாய்க் கொண்டிருக்கிறுன்? எனவே, கவலை எதற்கு? அவனை ஆராதிப்பதற்குத் தமக்கென்று ஒன்று இல்லாமலா போய் விட்டது? இந்த உடல் பொருள் ஆகிய யாவும் அவன் தந்தது. ஆகவே, அவன் தந்ததை அவனுக்கே தருவது, வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி நைவேத்தியம் செய்வது ஒக்கும். எனவே, ஆராதனைக்கு வேறு பொருள் வேண்டும்.

இறைவனே, அறிவு மயமாயிருப்பவன். ஞான மயனை அவனிடம் அஞ்ஞானம் பொருந்தாது. ஆகவே தம்மிடமுள்ள அஞ்ஞானமாகிய அறியாமை தமக்கே சொந்தமான பொருள். ஆராதனைக்கு இப்பொருளைத் தவிர, வேறு சிறந்த பொருள் ஒன்றும் இருக்க முடியுமா?

நாராயணாய
நம என்று விண்ணேடு
பாராளும் பாதம்
பணிந்தேத்து மா(று)அறியேன்
காராரு மேனிக்
கருணுகர மூர்த்திக்(கு)
ஆராதனை என்
அறியாமை ஒன்றுமே!

எவ்வளவு அருமையான ஆராதனை!

கருணுகர மூர்த்திக்(கு)
ஆராதனை என்
அறியாமை ஒன்றுமே!

✲

நரகம் எப்படி இருக்கும்?

ஒரு கோடீசுவரர் திடீரென்று செத்துப் போனுர். அவர் சுறு சுறுப்பானவர். கஷ்டப்பட்டு உழைத்து நல்ல நிலைமைக்கு வந்தவர். அவர் மேலுலகத்துக்குப் போனதும், அங்கே ஒரு தேவதூதன் வந்து, அவரை ஒரு விசாலமான மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போய், "எஜமான், நீங்கள் இங்கே தங்கியிருக்கலாம். இதோ ஒரு மணி இருக்கிறது. உங்களுக்கு எது வேண்டுமானுலும் இந்த மணியை அடியுங்கள். உடனே கொண்டு வந்து விடுவேன்" என்றுன். தமக்குச் சொர்க்க போகங்கள் கிடைக்குமென்று அவர் மகிழ்ந்தார்.

ஒரு மாதம் கழிந்தது. பூலோக கோடீசுவரர் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் சிகரெட்டு, தீப்பெட்டிக் கட்டுகள் சிதறிக் கிடந்தன. ரேடியோ அலறிக் கொண்டிருந்தது. மேஜை மேலே மதுவும் பாட்டிலும் இருந்தன. பூலோகத்தில் அநுபவித்த சௌகரியங்களுக்கு ஒன்றுகூடக் குறைவு இல்லை. ஆனுல், அவருடைய முகத்தில் உற்சாகமோ, சந்தோஷமோ இல்லை. அவர் மணியை அடித்தார். வேலைக்காரன் வந்து முன்னுல் நின்றுன்.

"இதோ பார், எனக்கு ஏதாவது வேலை வேண்டும். ஆம், ஏதாவது ஒரு வேலை. சும்மா உட்கார்ந்திருக்கச் சங்கடமாயிருக்கிறது."

"மன்னியுங்கள், எஜமான்! அது தான் இங்கே கிடைக்காது."

"கிடைக்காதா? – அப்படியானுல், இங்கே இருப்பதைக் காட்டிலும் நரகத்துக்குப் போய்த் தொலையலாமே!"

"பின்னே இதை என்ன என்று நினைத்தீர்கள்? சொர்க்கம் என்ரு? இல்லை. நரகம் தான் இது."

பேய் உலகப் பேச்சு

பேய் நம்பர் 1: "என்னவோ மனிதர்கள் என்று சிலர் இருக்கிறுர்களாமே; அதை நீ நம்புகிருயா?"

பேய் நம்பர் 2: "முட்டாள்! இந்த மூட நம்பிக்கை யெல்லாம் நீ வைக்காதே."

கம்யூனிஸம்

வெ. சாமிநாத சர்மா

கம்யூனிஸ்வாதிகளின் லட்சியம் என்ன? தொழிலாளர் ஆதிக்கமே அவர்களின் முடிவான லட்சியமா? கம்யூனிஸம் தானாய் வருமா? சமுதாயப் போக்கின் இயற்கையான மாறுதல் அதற்கு அனுகுணமாகுமா? இந்த விஷயங்களைச் சுருக்கமாய், தெளிவாய், இங்கே சர்மாஜி ஆராய்கிறார்.

சோஷலிஸத்தின் வளர்ச்சியே கம்யூனிஸம்; அல்லது அதன் மறுபுறம் என்று சொல்லலாம். சோஷலிஸத்தைச் சாஸ்திரீய திருஷ்டி கொண்டு, அதாவது கார்ல் மார்க்ஸ் வகுத்த முறைகளைக் கொண்டு பார்க்கிறபோது, அது கம்யூனிஸமாகப் புலப்படுகிறது. ஆனால் லெனின்தான், கம்யூனிஸம் என்ற பெயரைப் பிரபலப் படுத்தியவன்; தத்துவ அளவோடு இருந்த இதனை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தவன். இதனாலேயே இப்போது கம்யூனிஸத்தை ஒரு லட்சியமாகவும் அந்த லட்சியத்தை யடையும் சாதனமாகவும் வைத்து அறிஞர்கள் பேசுகிறார்கள்.

பொருள்கள் உற்பத்தி யாவதற்கு மூலமாயுள்ள நீர், நிலம், காடு, சுரங்கம் முதலியவைகளையும், இவைகளிலிருந்து பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்களையும் அதாவது யந்திர வகைகள், மின்சார சக்தி முதலியவைகளையும், உற்பத்திசெய்யப்பட்ட பொருள்கள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய மாதிரி செய்ய என்னென்ன சாதனங்கள் உண்டோ அவைகளையும், அதாவது ரெயில், கப்பல் முதலிய போக்கு வரத்து சாதனங்களையும் சமுதாயத்திற்குப் பொதுவான சொத்துக்களாக்கிவிட்டால் இவைகளையுடையவரென்றும் இல்லாதவரென்றும் வேற்றுமையே இராது. இதனால் சொத்துடையவர்கள் சுரண்டுகிறார்கள் என்பதும், சொத்தில்லாதவர்கள் அதிகமான உழைப்பைக் கொடுத்துக் குறைவான கூலி பெற்று வாழ்க்கை நடத்துகிறார்களென்பதும் அற்றுப் போகிறது. அதாவது வர்க்கப் பிரிவினைகளற்ற, ஏற்றத் தாழ்வுகளில்லாத சமுதாயம் அமைகிறது. இப்படிப்பட்ட சமுதாயத்தை அமைப்பதுதான் லட்சியம்.

இந்த லட்சியத்தை எப்படி அடைவது? சமுதாயத்தை இப்பொழுதுள்ள நிலையிலிருந்து, அதாவது முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து, அவரவருடைய தேவைகளும் பூர்த்தியடைவதற்கு மூலாதாரமாயுள்ள பொதுவுடைமை நிலைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமானால், அது பலாத்காரத்தினால்தான் முடியும்; ஒரு பெரிய புரட்சி ஏற்படவேண்டும்; அப்படிப் புரட்சி ஏற்பட்டு, சமுதாயமானது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுகிற இடைக்காலத்தில், சமுதாயத்தின் அரசியல் விவகாரங்கள், அதாவது அரசாங்க நிருவாகம் தொழிலாளர்களின் ஆதிக்கத்துக் குட்பட்டே இருக்கும்; இந்தத் தொழிலாளர்கள் ஆதிக்கத்தின் மூலமாகத்தான் மேற்படி மாற்றத்தைச் செய்ய முடியும் என்றெல்லாம் பல முறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன.

இவைகளின் தொகுப்பே சாதனம். இந்த லட்சியமும் சாதனமும், சேர்ந்தாற்போல் கம்யூனிஸம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

உலகத்தில் ஆதிகாலந்தொட்டு மானிட சமுதாயமானது எப்படி இயங்கிக்கொண்டு வருகிறதென்பதைப் பற்றியும், அப்படி இயங்கிக் கொண்டு வரும் சமுதாயத்தில், பொருள்களை உற்பத்தி செய்து அதன் மூலமாக ஒரு சிலர் பணக்காரர்களாகிக் கொண்டு போவதற்கும், பெரும்பாலோர் ஏழைகளாகிக் கொண்டு வருவதற்கும் அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பற்றியும் மார்க்ஸ் ஆராய்ச்சி செய்து சில உண்மைகளை வெளியிட்டான். இவற்றுள் முக்கியமானவை இரண்டு: ஒன்று, சரித்திரத்தை லௌகிக திருஷ்டியில் பார்ப்பதென்பது; மற்றொன்று, மிஞ்சிய மதிப்பு என்பது. இவையிரண்டும், கம்யூனிஸத்திற்கு மையமாயுள்ள கோட்பாடுகள். இவை யென்ன வென்பதைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

மானிட சமுதாயத்தில் அவ்வப்பொழுது பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு தலைமுறையில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள் இன்னொரு தலைமுறையில் அடியோடு மறைந்து விடுகின்றன; அல்லது மாறுதல் அடைகின்றன. இதற்குக் காரணம் என்ன? மனித சக்திக்கு எட்டாத ஒரு காரணம் அல்ல: அதாவது ஏதோ தெய்விக சக்தியென்று சொல்கிறார்களே அந்தத் தெய்விக சக்தி, மனிதனுடைய முயற்சிகளுக்கெல்லாம் பின்னே யிருந்து கொண்டு சமுதாயத்தை இயக்கிக்கொண்டு வருகிறது, மாறுதல்களை உண்டுபண்ணிக் கொண்டு வருகிறது என்பதல்ல. சமுதாயத்தின் பொருளுற்பத்தி முறையைப் பொறுத்தே அந்தச் சமுதாயத்தின் சகல விவகாரங்களும் நடைபெறுகின்றன என்று, மார்க்ஸ் ஆராய்ச்சி பூர்வமாக நிரூபித்துக் காட்டுகிறான். குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய பொருள்கள் எந்த வகையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அந்த வகையிலேயே அந்தச் சமுதாயத்தின் அரசியல், மதம், சட்டம் முதலிய அனைத்தும் இருக்கின்றன; அந்தப் பொருளுற்பத்தி முறை மாறினால், இந்த அரசியல் மதம் முதலியன யாவும் மாறுபாடடைகின்றன என்பது மார்க்ஸின் சித்தாந்தம். சமுதாயம் இயங்கிக் கொண்டு வருவதற்கும், அதில் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களுக்கும் அடிப்படையாயுள்ளது அதன் பொருளாதார அமைப்பே. இதையே, 'சரித்திரத்தை லௌகிக திருஷ்டியில் பார்ப்பது' (Material Conceptiry of History) என்று கூறுகின்றனர்.

சமுதாயமானது பல மாறுதல்களை யடைந்துகொண்டு வருகிறதல்லவா? அப்படி மாறுதலடைந்து கொண்டு வருகிற ஒரு நிலையில், தொழில் செய்துபிழைப்பதைத் தவிர வேறு வழியில்லாமலிருக்கிற ஒரு கூட்டத்தார் தோன்றுகிறார்கள். இவர்கள் பழைய காலத்து அடிமைகளைப் போன்றவர்களல்லராயினும், தாங்களே சுயமாகப் பொருள்களை உற்பத்திசெய்து விநியோகிக்கிற சக்தியும் இவர்களுக்கு இல்லை. அதாவது இவர்களுக்குப் பொருள்களை உற்பத்தி செய்யக்

கூடிய சக்தி இருக்கிறது; ஆனல் அதற்குரிய சாதனங்கள் — கருவிகள் முதலாயின — இல்லை. எனவே இவர்கள், தங்களுடைய உழைப்புச் சக்தியை வேருெருவனுக்கு விற்றுத்தான் ஆகவேண்டியிருக்கிறது; அப்படி விற்பனை செய்துதான் பிழைப்பு நடத்தவேண்டியிருக்கிறது.

பொருளுற்பத்திக்கான கருவிகள் முதலிய சாதனங்களையுடைய முதலாளி, மேற்படி உழைப்புச் சக்தியை விலை கொடுத்து வாங்குகிருன். இந்த விலைக்குத்தான் கூலியென்று சொல்கிருேம். அப்படி வாங்கித் தன்னிடத்திலேயுள்ள கருவிகள் மீது உபயோகப் படுத்துகிருன். இந்த உபயோகத்தினல் உண்டாகிற பொருள்களை, தன்னிடத்திலேயுள்ள கருவிகளின் கிரயம், தான் தொழிலாளர்களுக்குக் கொடுத்தகூலி ஆகிய இவைகளைக் காட்டிலும் அதிகமான விலைக்கு விற்கிருன். அதாவது, தொழிலாளர்களுடைய உழைப்புச் சக்தியானது, முதலாளிக்கு அதிகமான லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கிறது. தன்னிடத்திலேயுள்ள கருவிகளைக்கொண்டு மட்டும் இவன் - இந்த முதலாளி - பொருள்களை உற்பத்தி செய்ய முடியாதல்லவா? தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை அவைகளின்மீது பிரயோகியாவிட்டால், அந்தக் கருவிகள் பிரயோஜனப் படமாட்டா. அவைகளுக்கு மதிப்பே கிடையாது. ஒரு பொருளின் உற்பத்திச்சக்தியைக் கொண்டுதானே அதற்கு மதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, இந்த மதிப்பு என்பது, மனித உழைப்பின் அளவைப் பொறுத்தே இருக்கிறது. ஆனல், இந்த மனித உழைப்புக்குக் கிடைக்கிற கூலி குறைவாகவும், இது உற்பத்தி செய்து கொடுக்கிற பொருளின் விலை அதிகமாகவும் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை 'மிஞ்சிய மதிப்பு' (Surplus Value) என்கிருன் மார்க்ஸ். சுருக்கமாக லாபத்தையே குறிக்கிருன். இந்த லாபத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்தது எது? தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி. ஆனல், இந்த லாபத்தில் அவர்களுக்குப் பங்கு இல்லை. இந்தப் பங்கு இல்லாமற் செய்து அவர்களுடைய உழைப்பைக் குறைவான கூலி கொடுத்து உபயோகப்படுத்திக் கொள்கிருேமே அதற்குத்தான் 'சுரண்டுதல்' என்று சொல்கிருேம்.

இந்த லாபஞ் சம்பாதிக்கிற முறை எதுவரையில் அங்கீகரிக்கப்படுகிறதோ, எதுவரையில், அனுஷ்டானத்தில் இருந்து வருகிறதோ அதுவரையில் சமுதாயத்தில் ஏழை - பணக்காரன் என்றும், உள்ளார் - இல்லார் என்றும், உயர்ந்தோர் - தாழ்ந்தோர் என்றும் பலவிதமான வேற்றுமைகள் இருந்து கொண்டிருக்கும். இந்த வேற்றுமைகள் காரணமாகச் சச்சரவுகளும் இருந்து கொண்டிருக்கும். வேற்றுமைகளும் சச்சரவுகளும் நீங்க வேண்டுமானல் மேற்படி லாபஞ் சம்பாதிக்கிற தூண்டுதலே இல்லாமற் செய்துவிடவேண்டும்; அதாவது முதலாளித்துவம் மறைய வேண்டும்.

இந்த முதலாளித்துவமானது, தன்னிடத்தே கொண்டுள்ள முரண்பட்ட பல சக்திகளின் காரணமாக, தானே அழிந்து போகுமென்று மார்க்ஸ் நிரூபித்துக் காட்டியிருக்கிருன். முதலாவது, முதலாளித்துவம் வளர வளர அதற்கு விரோதமாகத் தொழிலாளர் இயக்கமும் வளர்

கிறது. இரண்டாவது, நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு முதலாளித்துவமானது அதிகமான பொருள்களை உற்பத்தி செய்த போதிலும், அவற்றை வாங்குஞ் சக்தி ஜனங்களுக்குக் குறைந்து போகிறது. அதாவது பெரும்பாலோரிடத்தில் பணம் இல்லாமற்போய், ஒரு சிலரிடத்தில் மட்டும் அது சென்று குவிகிறது. இங்ஙனம் ஜனங்களுடைய வாங்குஞ் சக்தி குறைவதால், முதலாளித்துவமானது, தான் உற்பத்தி செய்த பொருள்களை எப்படியாவது விற்பனை செய்துவிட வேண்டுமென்று முயல்கிறது; புதிய மார்க்கெட்டுகளைத் தேடுகிறது; புதிய நாடுகளைக் கைப்பற்றுகிறது; அவற்றின் மீது அரசியல் ஆதிக்கத்தைத் திணிக்கிறது. இதையே ஏகாதிபத்தியம் என்று சொல்லுகிறோம். முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் ஏகாதிபத்தியம்.

மற்ற நாடுகளைக் கைப்பற்றுவது அவைகளின்மீது ஆதிக்கஞ் செலுத்துவது என்கிற நிலை ஏற்படுகிறபோது, ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் சண்டை உண்டாகிறது. இது கடைசியில் உலக யுத்தத்தில் கொண்டுவிடுகிறது. 1914-ஆம் வருஷத்து ஐரோப்பிய மகாயுத்தத்தை முதலாளித்துவ அழிவின் ஒருபரிணாமமாகவே கம்யூனிஸ்டுகள் சொல்கிறார்கள். உலகயுத்தம் ஏற்பட்டு முதலாளித்துவமானது தன்னையே தான் அழித்துக் கொள்கிற நிலைக்கு வந்து விடுகிறது. இதைத் துரிதப்படுத்துகிற வகையில், தொழிலாளர் சக்தியும் வளர்கிறது. தாங்கள் சுரண்டப் படுவதினின்று எப்படியாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நிலைக்குத் தொழிலாளர்கள் வருகிறார்

பண்டிதர்கள் வேலை

மிக்கீ மௌஸ் முதலிய அபூர்வமான கார்ட்டூன் படங்களைத் தயாரித்தவர் வால்ட் டிஸ்னீ என்ற அமெரிக்கர். அவரைப் பிரபல ஆங்கில நாவலாசிரியரான ஆல்டஸ் ஹக்ஸ்லி ஒரு முறை சந்தித்துப் பேசினார்.

"உங்கள் படங்களிலே அற்புதமான தத்துவங்கள் உள்ளடங்கியிருக்கின்றனவே; அந்தத் தத்துவங்களெல்லாம் உங்கள் மனதிலே எப்படி உதித்தன?" என்று நாவலாசிரியர் கேட்டார்.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குப் படங்களைப் பிடிக்கத் தான் தெரியும். எங்கள் மனதிலே தோன்றியிருக்கக்கூடிய தத்துவங்களை எல்லாம், புரொபஸர்கள் கண்டு பிடித்துச் சொல்லுவார்கள்" என்று பதிலளித்தார் டிஸ்னீ!

கள். தங்களைச் சுரண்டுவோர் யாரோ அவர்களை அப்புறப் படுத்தினால் தான், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று தீர்மானிக்கிறார்கள். இதற்குப் பலாத்காரத்தின் துணையை நாடுகிறார்கள். புரட்சி நடைபெறுகிறது. முதலாளித்துவம் முடிகிறது; தொழிலாளர் ஆதிக்கம் தோன்றுகிறது. இங்ஙனம் முதலாளித்துவத்தை அழித்துவிடுவதோடு, தொழிலாளர்கள் சும்மா யிருந்து விடுகிறார்களா? இல்லை; மறுபடியும் முதலாளித்துவம் தலையெடுப்பதற்கு வழியே இல்லாமற் செய்து விடுகிறார்கள். அதாவது முன்னே சொன்னபடி பொருளுற்பத்திக்கான சாதனங்களை யெல்லாம் பொதுவுடைமையாக்கி விடுகிறார்கள்; பொருளுற்பத்தி முறையில் லாபஞ் சம்பாதிப்பது என்கிற தூண்டுதலே இல்லாமற் செய்து விடுகிறார்கள். இவைகளுக்குத் தகுந்தபடி அரசாங்கத்

தையும் அமைத்துக் கொள்கிருர்கள். அதாவது தொழிலாளர் நலத்தை நாடுகிற, தொழிலாளர் ஆதிக்கத்தையுடைய அரசியல் அமைப்பு ஏற்படுகிறது.

இந்தத் தொழிலாளர் ஆதிக்கத்தை யுடைய அரசியல் அமைப்பை ஏற்படுத்துவது கம்யூனிஸ்டுகளின் லட்சிய மல்ல. வர்க்கப் பிரிவினைகளே இல்லாத, அதாவது ஆள்வோர் – ஆளப்படுவோர் என்ற வேற்றுமைகூட இல்லாத ஒரு சமுதாயத்தை நிர்மாணம் செய்ய வேண்டுமென்பதே அவர்கள் லட்சியம். இந்த லட்சியத்தை அடைவதற்கான ஒரு சாதனமாகவே, தொழிலாளர் ஆதிக்கங் கொண்ட அரசாங்க அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். புதுமையைச் சிருஷ்டிப்பதற்காகப் பழமையை அழிக்கவேண்டுமென்ற முறையிலேயே இந்த அரசாங்க அமைப்பு இருக்கிறது. இதனுல் இது ஒரு சிறிது காலம் வரையிலாவது சர்வாதிகார ஆட்சியாகவே இருக்கும். அப்படித்தான் இருக்க முடியுமென்று மார்க்ஸ், லெனின் முதலியவர்கள் சொல்லிப் போயிருக்கிருர்கள். சோவியத் ருஷ்யாவின் ஆட்சி முறை, ஆரம்பத்தில் இந்த மாதிரிதான் இருந்ததென்பதை நேயர்கள் அறிவார்கள்.

✲

நிர்ணயம்

ஓர் ஓட்டலில் சாப்பிட வந்தவர், "பையா, வாழைக்காய்ப் பஜ்ஜி கொண்டுவா" என்ருர்.

பையனும் அப்படியே ஒரு தட்டுப் பஜ்ஜியைக் கொண்டுவந்து வைத்தான்.

வந்தவர் சாப்பிட ஆரம்பித்து, உடனே முகத்தைச் சுளித்துக்கொண்டு தலையை நிமிர்ந்து, "என்ன பஜ்ஜி, அப்பா, இது ?" என்று கேட்டார்.

ஓட்டல் பையன் : "ருசி எப்படி இருக்கிறது ?"

வந்தவர் : "ஒரே கசப்பாய் இருக்கிறது."

பையன் : "அப்படியானுல், வாழைக்காய்ப் பஜ்ஜிதான்; கத்தரிக்காய்ப் பஜ்ஜி என்ருல் புளிக்கும்."

யார் குற்றம் ?

மார்லீன் டீட்ரிச் என்ற நடிகை ஏற்கெனவே, 'அல்லாவின் தோட்டம்' என்ற படத்தில், ஆடம்பர அலங்காரங்களோடு நடித்துப் புகழ்பெற்றவள். இப்போது அவள் ஒரு புதிய படத்தில் நடித்துக்கொண்டிருந்தாள். ஒரு பகுதி பிடித்ததும், பிடித்த வரையில் படத்தைத் திரையிட்டுப் பார்த்தார்கள்.

படத்தைப் பார்த்த நடிகை, காமிராக்காரரைப் பார்த்து, "எனக்கு இந்தப் படத்தில் என் தோற்றம் பிடிக்கவில்லை. அல்லாவின் தோட்டம் என்ற படத்தில் அற்புதமா யிருக்கும் என்னை, இதில் ஏன் இவ்வளவு மோசமாய்ப் படம் பிடித்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டாள்.

காமிராக்காரர் சாதுர்யமாக, "என்ன செய்வது அம்மா! நான் அப்போதை விட இப்போது பத்து வயது அதிகக் கிழவன் ஆகிவிட்டேன் அல்லவா ?" என்ருர் !

அதாவது, "என்ன செய்வது, அம்மா! நீ அப்போதைவிட இப்போது பத்து வயது அதிகக் கிழவி ஆகிவிட்டாய் அல்லவா ?" என்று அர்த்தம்!

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர்:

டி. எஸ். ஆர். & கோ

கும்பகோணம்

ஸ்டாக்கிஸ்ட்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி, மதராஸ்

MADRAS
SEP 1944

இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் பாஸிசத்திற்கு விரோதிகள். ஜப்பானில் இருப்பது போல ஒரு சர்வாதிகாரி, சுதந்திர இந்தியாவிற்கு இருக்கமுடியாது. இராணுவம் வியாபாரம் என்னும் இரட்டை சர்வாதிகாரியால் ஆளப்பட்டு வரும் ஒரு நாடு சுயேச்சை வழங்குவதாகக் கூறுவது கேலிக் கூத்தாகும். அது ஒரு சுத்தப்பொய். ஜப்பானியரிடமிருந்து எவ்வித உதவியும் நமக்கு வேண்டாம்.

வெற்றி வழியே விடுதலை

AAA 1018TM

மிகப் பத்திரமுள்ள சேமிப்புத் திட்டம்

யுத்தம் நின்று, சமாதானம் நிலவும்போது சேமித்த பணமெல்லாம் மாயமாக மறையுமென்றால், வருங்காலத்திற்காக சேமிப்பதின் பயன் என்ன? தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் வாங்குவதில் உங்கள் சேமிப்பை முதலிட்டால், உங்கள் பணத்திற்கும் இக் கதிதான் நேரும். இப்பொழுதிருந்த இந்தப் பொருள்களின் அநியாய விலைகள் சாதாரண அளவுக்கு இறங்குமென்று எதிர்பார்க்கலாம். உங்கள் சேமிப்பு அப்பொழுது என்ன ஆகும்?

யுத்த காலத்தில் விஷயம் தெரியாதவர்கள் விலையேற்றத்தைக் கவனியாமல் தங்கம், வெள்ளி, வீடு, வாசல்களை கண்ணை மூடிக்கொண்டு வாங்குவதால் ஏராளமான பணத்தை இழக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறியவேண்டியது அவசியம். நீங்கள் இம்மாதிரியான நஷ்டத்திற்கு ஈடாகாதீர்கள். மிச்சப்படுத்தும் பணத்தைக்கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு அதன் உத்தரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை பணமாக மாற்றிக்கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்கிச் சேமித்த பணம் என்றும் பத்திரமானது

பதிவுசெய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு

அஸ்ஸாம், வங்காளம், பிஹார், ஒரிஸ்ா, சென்னை மாகாணவாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவுசெய்துகொள்ளலாம், இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணமற்போனாலும் சரி, அழிந்துவிட்டாலும் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்

C. P. U. 415

பொருளாதார அராஜகம்

வெ. ராமசாமி

பொருளாதாரம் என்பது பௌதிகம், ரசாயனம் போன்ற ஒரு சாஸ்திரம். அதிலும், தற்காலப் பொருளாதார முறை முதலாளித்துவ அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதற்கு அரசியலை யொட்டிய பொருளாதாரம் (Political Econonmy) என்ற பெயர் வழங்குவதும் உண்டு.

பொருளாதாரத்தைச் சமுதாய சம்பந்தமான சாஸ்திரம் என்று சொல்வது வழக்கம். உண்மை உயிர்த்தத்துவ மில்லாத கல், மண் போன்ற இயற்கைப் பொருள்களைப் பற்றி இது ஆராய வில்லை; மரம், செடி, கொடி போன்ற தாவர வர்க்கத்தைப் பற்றியும், ஆடு, மாடு, போன்ற பிராணி இனத்தைப் பற்றியும் இது ஆராயவில்லை; தனிப்பட்ட மனிதனைப் பற்றியும் இது ஆராய வில்லை. சமுதாய வாழ்க்கையில் மக்களிடையே ஏற்படுகிற சம்பந்தா சம்பந்தங்களைப் பற்றியே இது ஆராய்கிறது.

மனிதன் கூட்டமாகக் கூடி வாழுகிற பிராணி. இனத்தாரோடு சேராமல், தன்னந்தனியாக வசிக்கிற மனிதனைப் பற்றி நாம் இதுவரையில் பார்த்ததும் இல்லை, கேட்டதும் இல்லை. காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்திலும் கூட, மனிதன் தன் இனத்தாரோடு கூடியேதான் வாழ்ந்திருக்கிறான். ஒருவரோடு ஒருவர் கூடி வாழும் இயல்பினாலே சமுதாய வாழ்க்கை உருவாகிறது என்று சொன்னால், அது மிகையாகாது. இந்தக் கூட்டு அல்லது சமுதாய வாழ்க்கையின் காரணமாக மக்களிடையே தோன்றுகிற தொடர்புகள் மிக மிக முக்கியமானவை. அவை சமுதாய அமைப்பையே மாற்றி விடுகின்றன என்று சொல்லலாம்.

ஆனால், சமுதாய வாழ்க்கையில் மக்களிடையே எத்தனையோ விதமான தொடர்புகள் ஏற்படுகின்றன. குடும்ப சம்பந்தமான தொடர்புகள், வர்க்கப் போராட்டத்தின் காரணமாகக் கிளம்புகிற அரசியல் சம்பந்தமான தொடர்புகள், பண்பாடு சம்பந்தமான தொடர்புகள் என்று அவை பல விதமாய் இருக்கின்றன. இந்தத் தொடர்புகள் எல்லாவற்றையும் பொருளாதார சாஸ்திரம் ஆராய்கிறது என்று சொன்னால், அது உண்மையாகாது. அதனுடைய நோக்கம் இன்னும் குறுகலானது. மக்கள் ஒன்றுகூடி உழைத்துப் பொருளை உற்பத்தி செய்கிறார்கள். இப்படி உற்பத்தி செய்கிற காலத்திலும், உற்பத்தியான பொருளை விநியோகிக்கிற காலத்திலும் மக்களில் ஒருவருக்கொருவர் இடையே ஏற்படுகிற தொடர்புகளைப் பற்றி மட்டுமே இந்தச் சாஸ்திரம் ஆராய்கிறது.

கண்ணை மூடிக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். தேவைப்பட்டவருக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதில்லை. உழைத்தவன் வெறுங்கையோடு நிற்கிறான். இந்தச் சீர்குலைவு தீர என்ன மார்க்கம்? பொருளாதார சாஸ்திரத்தை, ஸயன்ஸ் ரீதியில் ஆராய்ந்து, நியாய வழி கோலுவது அவசியம் அல்லவா?

சமுதாயத்தோடு சேராமல் தனியாக வாழும் மனிதன் எங்காவது இருக்கிருனு? அத்தகைய மனிதனைக் காண்பதே கஷ்டம். அதேமாதிரி, சமுதாயத்திலிருந்து கொண்டு, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டவனுய், அவர்கள் செய்யும் பொருளுற்பத்தியில் கலந்து கொள்ளாத மனிதனைப் பார்ப்பது கஷ்டம். அவன் பொருளுற்பத்தியில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டுமென்கிற அவசியம் இல்லை. நேரடியாகக் கலந்து கொள்ளாத காரணத்தினுல், பொருளை உற்பத்தி செய்வதற்கு அநுகுணமான முறையில் அவன் மற்றவர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. தானே உழைக்காவிட்டாலும் உணவு, ஆடை, இவைபோன்ற இன்னும் பல தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு, அவன் பிறருடைய உழப்பை நம்பியே இருக்கிருன்.

ஜாலவித்தையினுல் பொருளை உற்பத்திசெய்துவிட முடியாது. உழைப்பு ஒன்றினுலேதான் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். தனக்குத் தேவைப்படுகிற பொருள்களை யெல்லாம் தன் சொந்த உழைப்பின் மூலம் உற்பத்தி செய்துகொள்ளா விட்டாலும், பிறருடைய உழைப்பின் மூலமாவது அவைகளைப்பெற்றுத் தான் ஆகவேண்டும். தன் சொந்த உழைப்பினுலன்றி, பிறருடைய உழைப்பினுல் வாழுகிற காரியம் புதுமையானதல்ல. பொருளுற்பத்திக்குரிய சாதனங்களைப் படைத்த முதலாளிமார்களும், பாங்கில் பணத்தைப் போட்டிருப்பவர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களே. ஆனுல், இவர்களும் எப்படியும் பிறருடைய உழைப்பில்லாமல் வாழ முடியாது; பொருளை உற்பத்தி செய்வதையும் அதை விநியோகிப்பதையும் அடிப்படையாகக்கொண்டு மற்றவர்களோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் வாழமுடியாது என்பதுமட்டும் முடிவான விஷயமாகும்.

பொருளை உற்பத்தி செய்கிற முறைகள் பலவாகும். அவற்றின் காரணமாக மக்களிடையே தோன்றுகிற தொடர்புகளும் வெவ்வேருன இயல்புடையவை. வெவ்வேருன இயல்புடைய இந்தத் தொடர்புகள் எல்லாவற்றையுமே தற்காலப் பொருளாதார முறை ஆராய்கிறதா என்ருல், திரும்பவும், இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

உதாரணமாக, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பண்டைக் காலத்துப் பொருளாதார முறையை எடுத்துக் கொள்ளுவோம். இந்தப் பொருளாதார முறையில் பண்டம் மாற்றிக் கொள்ளுகிற பழக்கமும், விற்பது வாங்குவது என்கிற பழக்கமும் ஏற்படவில்லை. அவரவர்கள் தேவைகளை அவரவர்களே திருப்தி செய்து கொண்டார்கள். இந்தப் பொருளாதார முறையில் மக்களிடையே ஏற்பட்டதொடர்புகள் விசேஷமான ரகத்தைச் சேர்ந்தவை. குடும்பத் தலைவன், ஆண்களும் பெண்களும் வயது வந்தவர்களும் குழந்தைகளும் இன்னின்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று கட்டளை யிட்டான். வேலையை இப்படிப் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் உருவாக்கப் பட்ட பொருளாதார முறையே

இது. குடும்பத் தலைவன் சொல்லுக்கு எல்லோரும் கட்டுப்பட்டு நடந்தார்கள்.

ஆனால், இந்த முறையில் ஒருவருக்கொருவர் இடையே ஏற்பட்ட தொடர்புகள் தாமாக ஏற்பட்டவை அல்ல; இந்தத் தொடர்புகளைக் குடும்பத் தலைவனே ஏற்படுத்தினான். குடும்பத்திற்கு என்னென்ன பொருள்கள் தேவை யென்பதை முதன் முதலில் அவன் அந்தாஸாகத் தெரிந்து கொண்டான். பிறகு, அதற்குத் தகுந்த முறையில் உற்பத்தி செய்யும் திட்டத்தை அவன் தயாரித்தான். எந்த நிலத்தில் நெற்பயிர் செய்ய வேண்டும், எந்த நிலத்தில் சோளம், கம்பு முதலியவைகளைப் பயிர் செய்யவேண்டும், ஒரு குறிப்பிட்ட நிலத்தில் எத்தனை பேர் வேலை செய்ய வேண்டும் என்பனபோன்ற காரியங்களை யெல்லாம் அவனே தீர்மானித்தான். இந்தப் பொருளாதார முறையில் மக்களிடையே ஏற்படும் தொடர்புகள் சிக்கலானவை அல்ல. இவற்றைத் தெரிந்துகொள்ள விசேஷமான ஆராய்ச்சியோ, சாஸ்திரமோ தேவையில்லை.

இனி, பொதுவுடைமைச் சமுதாயத்தை எடுத்துக் கொள்ளுவோம். இந்தச் சமுதாயத்தில் மக்கள் கூட்டுழைப்பின் மூலம் பொருளை உற்பத்தி செய்து கொள்ளுவார்கள். தங்களுக்கு என்னென்ன பொருள்கள் தேவைப் படுகின்றன என்று தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த முறையில் உற்பத்தித் திட்டத்தைப் போட்டுக் கொள்ளுவார்கள். உற்பத்திசெய்த பொருளைத் தேவைக்குத் தகுந்தவாறு விநியோகிக்கவும் ஏற்பாடு செய்வார்கள். உற்பத்திசெய்வதற்குச் சாதனமான கருவிகளும் இதர பொருள்களும் ஒவ்வொரு தொழிற் சாலைக்கும் எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதைக் கணக்கெடுத்து, அதன்படி அவைகளை அந்தந்தத் தொழிற்சாலைக்குக் கொண்டு சேர்ப்பார்கள்.

இந்தப் பொருளாதார முறையில் பண்டங்களை மாற்றிக் கொள்வது, விலைக்கு வாங்குவது, விற்பது என்கிற காரியமில்லை. எனவே, பொதுவுடைமைச் சமுதாயத்தில், தேவைக்குத் தகுந்தவாறு பொருளை உற்பத்தி செய்யத் திட்டம் வகுத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை ஒழுங்காகவும் நடத்துவார்கள். விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பண்டைக் காலத்துப் பொருளாதார முறையைப்போல, இந்தப் பொருளாதார முறையிலும் மக்களிடையே ஏற்படும் தொடர்புகள் தாமாகவே ஏற்படாமல், மக்கள் எல்லோரும் சேர்ந்து வகுத்த திட்டத்தின்படி ஏற்படுத்திக் கொண்டனவாக இருக்கும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைக்கும், பொதுவுடைமைப் பொருளாதார முறைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. என்றாலும், ஒரு முக்கியமான அம்சம், இரண்டிற்கும் பொதுவானதாக இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு முறைகளிலும் தேவைக்குத் தகுந்த அளவு உற்பத்தி செய்வதற்குரிய திட்டத்தை வகுத்துக் கொண்டு, அந்தத் திட்டப்படி எல்லாக் காரியங்களும் செய்யப்படுகின்றன.

முதலாளித்துவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தற்காலப் பொருளாதார முறையைப் பற்றி இப்போது கவனிப்போம்.

தனிப் பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில்களை யெல்லாம் ஒன்று திரட்டிப் பார்த்தால், அது தற்காலப் பொருளாதார அமைப்பாகக் காட்சியளிக்கும். இந்தப் பொருளாதார முறையில், ஆயிரக் கணக்கான தொழிலாளர்களை வைத்து வேலை வாங்கும் பெரிய முதலாளிகளுக்குப் பக்கத்தில், ஏதோ ஒரு கைத்தொழிலைக் கற்றுக் கொண்டு தன்னளவுக்குச் சம்பாதித்துக் கொள்ளுகிற எண்ணற்ற தொழிலாளிகளும், கோடிக்கணக்கான குடியானவர்களும் இருப்பதைக் காண்கிறோம். இவர்கள் நடத்தும் பெரிதும் சிறிதுமான எண்ணற்ற தொழில்களெல்லாம் பொதுவான ஒரு நிர்வாக சக்தியினால் ஒழுங்குபெற நடத்தப் பெறாமல், தாமாகவே இயங்குவன போலத் தோன்றுகின்றன. மக்களின் தேவைகளுக்குத் தகுந்த முறையில் ஒரு திட்டத்தை வகுத்து, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் அங்கங்கே தொழில் நிலையங்கள் அமைத்து உற்பத்தி செய்கிற காரியம் இங்கே இல்லை.

சொந்த முதலாளிகள் தங்கள் மனம்போனவாறு கண்ணை மூடிக் கொண்டு உற்பத்தித் தொழிலில் ஈடு படுகிறார்கள். தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு எவ்வளவு தேவையாயிருக்கும் என்பதைப் பற்றியும் இதே பொருளை இன்னும் எத்தனைபேர் உற்பத்தி செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. சமுதாயம் முழுவதற்கும் என்ன தேவையாய் இருக்கிறது என்பதைப் பற்றிச் சிந்தை செய்யாமல், தங்கள் சொந்த சிரத்தைகளைக் கவனிப்பதிலும், தங்கள் சொந்த லாபத்தை அதிகரிப்பதிலுமே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். இது காரணமாகவே, முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட இந்தச் சமுதாயத்தில் ஓர் ஒழுங்கை நாம் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக அராஜகமான ஒரு போக்கையே நாம் காண்கிறோம்.

> **வேலையற்ற வேலை!**
>
> அமெரிக்க யுத்த மந்திரி காரியாலயத்தில், உபயோகமற்ற பழைய தஸ்தாவேஜிகள் அடங்கிய பெரிய கட்டு ஒன்று கிடந்தது. இதை அழித்துவிடலாமா என்று, மேலதிகாரிக்கு ஒரு குமாஸ்தா எழுதினார். அதுபற்றி மேலும் கீழும் பல கடிதப் போக்குவரத்து நடந்து, அதுவே ஒரு பெரிய கட்டாகி விட்டது. இந்த நிலையில் பழைய உபயோகமற்ற கட்டை அழித்து விடலாம் என்று ஒரு மேலதிகாரி கடைசியாக உத்தரவு போட்டார். அவருக்கும் மேற்பட்ட இன்னோர் அதிகாரி, "சரி; அழித்து விடுங்கள். ஆனால், அழிக்குமுன், பூரா தஸ்தாவேஜிகளுக்கும் சரியான நகல்கள் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு ஷரத்து விதித்தார்!

அராஜகப் போக்கையுடைய இந்தச் சமுதாயம் எப்படிச் செவ்வையுற இயங்க முடியும்? தேவைகளுக்குத் தகுந்த வண்ணம் பொருளை எப்படி உற்பத்தி செய்ய முடியும் என்ற கேள்விகள் இயல்பாகவே தோன்றலாம். முதலாளித்துவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சமுதாயத்தில், மக்களிடையே ஏற்படுகிற தொடர்புகள் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் திட்டப் படுத்தப் பெறாத ஒரு காரியமாயிருப்பினும், இவைகளைத் திட்டப் படுத்தச் சில நியதிகள் இருக்கத்தான்

செய்கின்றன. இந்த நியதிகள் உற்பத்தியில் ஈடுபடுகிறவர்களின் விருப்பத்தையும் முயற்சியையும் பற்றிய எண்ண மின்றி, தன் பாட்டுக்குச் செல்லும் இயல் புடையவையாய் இருக்கின்றன. இது காரண மாகவே, தேவை களுக்குத் தகுந்த முறையில் திட்டம் வகுத்துக் கொண்டு அதன் படி உற்பத்தி செய்வதில் ஈடு படும் சமுதாயத்தின் நியதிகளி னின்றும், ஒரு திட்டமும் இன் றித் தாமாக இயங்கும் இந்த நியதி கள் பெரிதும் மாறுபடுகின்றன. முதலாளித்துவத்தை யடிப்படை யாகக் கொண்ட நமது சமுதாயத் தில் பொருளுற்பத்தியைத் திட் டப் படுத்துகிற இந்த நியதிகளின் இயற்கையை ஆராய்வதே தற் காலப் பொருளாதார சயன்ஸின் வேலையாகும்.

ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலத்தில் காணப்படும் பொரு ளாதார அமைப்பை ஆராயப் புகும்போது, விருப்பு வெறுப்பு என்கிற உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. உண்மைக ளைக் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் எப்படிக் கணிதம் ரசாயனம் போன்ற சயன்சுகளை நாம் அலசி ஆராய்கிறோமோ, அதே முறையில் பொருளாதாரம் என்கிற சயன்சையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். ஓர் உண்மை யைச் சொல்லும்போது, அது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின ரைப் பாதிக்கிறது என்பதற்காக அதை மறைத்துக் கூறுவதோ, திரித்துச் சொல்வதோ சாஸ்திர விரோதமான காரியமாகும். எனி னும் இந்தத் துர்ப்பாக்கியம் மற் றெல்லா சயன்சுகளையும் விடப் பொருளாதார சயன்சுக்குத் தான் விசேஷமாக நேர்ந்திருக்கி றது. எனவே, இந்தக் குற்றச் சாட்டுக்கு இடம் கொடாமல் சயன்ஸ் என்கிற முறையிலேயே தற்காலப் பொருளாதார அமைப் பைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

✲

யுத்தமும் காதலும்

ஓர் ஊரில் வளர்த்த புறுவை, எத்தனை மைல் தூரம் கொண்டுபோய் விட்டாலும், அது தன் கூண்டுக்குத் திரும்பி விடும். இம்மாதிரி வளர்த்த புறுக்களை யுத்த களத்துக்குக் கொண்டுசென்று, அதன் கழுத்திலோ இறக் கையிலோ செய்திச் சீட்டைக் கட்டி, ஊருக்கு அனுப்புவது வழக்கமா யிருந்து வருகிறது. இது பலருக்கும் தெரிந்திருக்கும்.

ஆனால், இந்தப் புறுக்களின் வேகத்தை அதிகரிக்க இப்போது ஒரு யுக்தி செய்கிறார்களாம். புறுக்கள் ஒரு பெண்ணை ஓர் ஆணே காதலிக்கும். காதல் பொறுமையும் அவைகளுக்கு உண்டு. ஒரு ஜோடி ஆண் பெண் புறுக் களில், ஆணைப் பிரித்துவெளியே கொண்டுபோகும் போது, மற்றோர் ஆணை அந்தப் பெண் புறுவிடம் மூக்கினால் கொத்திக் கொஞ்ச விடுகிறார்கள். சொந்த ஆண் இதைப் பார்த்து வயிற்றெரிச்சல் படும். அப்படியே அதை அயலூருக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். அங்கே போய்ச் செய் தியை அதன் கழுத்தில் கட்டி விட்டால், புறு தன் வழக்கமான வேகத்தை விடக் கால்பங்கு அதிக வேகத்துடன் ஊருக்குப் பறக்கிறது. தன் போட் டிப் புறுவைத் தொலைக்கும் ஆத்திரமே இந்த வேகத்தின் காரணம்!

பத்தொன்பதாம் வரி

பரதன்

ஓர் ஊரில் ஓர் ஏழை இருந்தான். அவன் பெயர் ராமன். அவன் நன்றாக வேலை செய்வான். ஆனால் வேலை கிடைக்க வில்லை. அவனுக்கு மனைவியும் நான்கு குழந்தைகளும் இருந்தார்கள்.

அவனுடைய மனைவி கொல்லைப் புறத்திலே பூசனிக்கொடி போட்டிருந்தாள். ஒரு நாள் அவள் தன் கணவனைப் பார்த்து, "இதோ பாருங்கள். இங்கே பன்னிரண்டு பூசனிக் காய்கள் இருக்கின்றன. சந்தைக்குப் போய் இவைகளை விற்றுவிட்டு, அரிசி பருப்பு வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

ராமன் ஒரு பெரிய கூடையில் பூசனிக் காய்களை எடுத்துப் போட்டுக்கொண்டு சந்தைக்குப் போனான். அங்கே, கூடையை ஓர் இடத்தில் இறக்கி வைத்து விட்டு, வாங்க வருபவர்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் கழிந்தது. சந்தை வரி வசூல் வாங்க ஒருவன் வந்தான். அவன் கையில் ஒரு பெரிய தடி வைத்திருந்தான். தலையில் பெரிய தலைப்பாகை அணிந்திருந்தான். பார்ப்பதற்கு முரடன் போல இருந்தான். தடியை ஆட்டிக் கொண்டு, "எங்கே, சந்தை வரிக்காக ஒரு பூசனிக்காய் கொடு" என்றான். ராமன் ஒரு பூசனிக்காயை எடுத்து அவனுக்குக் கொடுத்தான், சற்று நேரம் கழிந்தது. மற்றொருவன் தடியை ஊன்றிக்கொண்டு அவன் முன்னே வந்து நின்று, "சந்தை வரிக்கு ஒரு பூசனிக் காய் கொடு" என்றான். ராமன் அவனுக்கும் ஒரு பூசனிக்காய் கொடுத்தான். அவன் போன பிறகு இன்னொருவன் வந்தான். ராமன் அவனுக்கும் ஒரு பூசனிக் காய் கொடுத்தான். இந்த மாதிரியாக, பன்னிரண்டு பேர் வந்து பன்னிரண்டு பூசனிக்காய்களையும் வரிவசூலுக்காக என்று வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள். கூடை காலியாயிற்று.

பொதுவாக, சந்தையில் பதினெட்டு வகையான வரி கொடுக்கவேண்டும். கூடை காலியானதும், ராமன் வீட்டுக்குப் புறப்பட்டான். மீதி ஆறு பேர் வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். ராமனிடம் என்ன இருக்கிறது, கொடுப்பதற்கு? அவர்கள் அவனை வரி வசூல் குத்தகைக்காரனிடம் அழைத்துக் கொண்டு போனார்கள்.

ராமனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அவன் குத்தகைக் காரனைப் பார்த்து, "பன்னிரண்டு பூச

அவன் பனிரண்டு பூசனிக்காயோடு சந்தைக்குப் போனான். எல்லாம் பறிபோயிற்று; தடியும் துணிமணியும் கூடப் போய்விட்டது. அநியாய வரிவசூல் நடக்கும் சந்தையில், அக்கிரம யுக்திதானே செய்ய வேண்டும்? அதை அவன் மனைவி சொல்லிக்கொடுக்கிறாள்.

னிக்காய் கொண்டு வந்தேன். உங்கள் வேலைக்காரர்கள் வந்து ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். போதாத குறைக்கு, இன்னும் ஆறு பேர் கேட்கிறார்கள். இது நியாயமா, நீங்களே சொல்லுங்கள்'' என்றான்.

குத்தகைக் காரருக்குக் கோபம் உண்டாயிற்று. அவர் தம் வேலைக்காரர்களைப் பார்த்து, "பதினெட்டு வகை வரி வசூலிக்க வேண்டும் என்பது விதி. அந்த வரியைக் கொடுக்க யாராவது மறுத்தால், அவனுடைய சட்டை வேஷ்டியைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்று உங்களிடம் சொல்லி யிருக்கிறேனே, ஏன் அப்படிச் செய்யவில்லை?'' என்றார்.

இவ்வளவு சொன்னால் போதாதா? வேலைக்காரர்கள் ராமனுடைய கூடையையும் துணி மணிகளையும் பிடுங்கிக் கொண்டு அவனை வெளியே துரத்தினார்கள்.

ராமன் மிக்க வருத்தமாக வீட்டுக்குப் போனான். அவனுடைய மனைவி அவனை ஆவலாக எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றாவது வயிறு நிறைய உணவு கிடைக்கு மென்று குழந்தைகள் கனவு கண்டு கொண்டு இருந்தன. அவன் வெறுங் கையுடன் திரும்பியதைப் பார்த்து, அவன் மனைவி திகிலடைந்தாள். என்ன விஷயம் என்று கேட்டாள். ராமன் நடந்த விவரத்தை எல்லாம் சொன்னான். அவனுடைய மனைவி பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பிறகு, "சந்தையில் பதினெட்டு வகையான வரிகளை வசூல்செய்வதாகச் சொல்லுகிறீர்களே; நீங்கள் பத்தொன்பதாவது வரியை வசூலித்தால் என்ன?'' என்று கேட்டாள்.

அவன் சற்று நேரம் யோசித்தான். திடீரென்று அவன் முகத்தில் சிரிப்பு உண்டாயிற்று. 'நல்ல யோசனை' என்றான்.

மறுநாள் காலை எழுந்ததும், கையில் ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு, தலையில் ஒரு பாகை கட்டிக் கொண்டு, வெளிப் பார்வைக்கு முரடன் போலவேஷந் தரித்துக்கொண்டு, சந்தைக்குப் போனான். ஒவ்வொரு கடைக்கும் முன்பாக நின்று, "வரி கொடு" என்று அதிகார தோரணையில் கேட்டான். "இதென்ன, புதிய வரியாயிருக்கிறது" என்று சிலர் கேட்டார்கள். ராமன் சிரித்துக் கொண்டே, "நான் ராணியுடைய மனைவியின் தம்பி, தெரியாதா?" என்றான். உடனே மரியாதையாக, அவன் கேட்ட வரியைக் கொடுத்தார்கள். அவனுடைய தோற்றமும் பேச்சும், அவன் நிஜமாகவே ராணிக்குச் சொந்தம்போல இருந்தன. ஆகையால், யாரும் அவன்மேல் சந்தேகப்படவில்லை.

இந்த மாதிரியாக இரண்டு மூன்று மாதம் வரி வசூல் பண்ணினான். அவனுக்கு ஏராளமான பணம் சேர்ந்தது. அவனுடைய வறுமையும் கவலையும் மறைந்தது.

பதினெட்டு வரிக்கும் மேலாக, பத்தொன்பதாவது வரியும் கொடுப்பது சில கடைக்காரர்களுக்குச் சங்கடமா யிருந்தது. அவர்கள் ராணிக்கு மனு எழுதினார்கள். "மகாராணியாகிய உங்கள் மனைவியின் தம்பி செய்து வரும் கொடுமை சகிக்க முடியவில்லை. புதிய வரியை ரத்துச் செய்யுங்கள்" என்று அந்த மனுவில் எழுதியிருந்தார்கள்.

ராணி மனுவை வாசித்துப் பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பு உண்டாயிற்று. "என்ன, இவர்களுக்குப் பைத்தியமா? எங்காவது ராணிக்கு மனைவி இருப்பாளா? இதை விசாரிக்க வேண்டும். அந்தமாதிரி சொல்லிக் கொண்டு வரி வசூல் செய்பவனை இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

காவலாளர்கள் ராமனை அழைத்துக் கொண்டு வந்தார்கள். ராமன் ராணியை வணங்கிவிட்டு, தன்னுடைய கதை முழுவதையும் சொன்னான். வரி வசூல்காரர்கள் தன்னுடைய பன்னிரண்டு பூசனிக் காய்களைப் பிடுங்கிக் கொண்டதும் அல்லாமல் துணிமணிகளையும் பிடுங்கிக் கொண்டு விரட்டியதையும் உருக்கமாகச் சொன்னான். ராணிக்கு அவன்மேல் மிக்க இரக்கமும் நம்பிக்கையும் உண்டாயிற்று. அவள் தன் மந்திரியை அழைத்து "இன்று முதல் என் மனைவியின் தம்பியாகிய இவனே வரி வசூல் வேலையைப் பார்த்துக் கொள்வான். வேறு யாரும் வரி வசூல் செய்யக் கூடாது. முக்கியமான இரண்டொரு வரிகளைத் தவிர வேறு வரி எதையும் வசூல் செய்யக் கூடாது" என்றாள்.

அன்று முதல் ராமன் சந்தை வரி வசூலை ஒழுங்காகப் பார்த்து வந்தான். எல்லாக் கடைக்காரர்களுக்கும் அவன்மேல் மிக்க அன்பு உண்டாயிற்று. அவர்கள் அவன் "ராணியுடைய மனைவியின் தம்பி" என்று வேடிக்கையாக அழைத்து வந்தார்கள்.

*

பிரார்த்தனை

ஒரு சிறுமி பின்வருமாறு கடவுளைப் பிரார்த்தித்தாள்: "பகவானே! கெட்ட மனிதர்களை நல்லவர்களாகச் செய்; நல்லவர்களை மனதுக்கு உவந்தவர்களாகச் செய்."

— எச். இ. பாஸ்டிக்

புத்தக உலகம்

பழநித் தல வரலாறு : ஆசிரியர் : ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை கிடைக்குமிடம் : ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி. விலை அணா 10.

இந்த நூலில் பழநி ஸ்தலத்தின் பண்டைய வரலாறும், சிற்பநுட்பங்களும் பொதுவாக, பழநியைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கியிருக்கின்றன. பல படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முருகன் இசையமுதம் : ஆசிரியர் : ஏ. சுருளியாண்டிப் பாவலர். கிடைக்குமிடம் : முருக நிலையம், கோம்பை, மதுரை ஜில்லா. விலை அணா 6.

இதில் பக்திரசமான 32 கீர்த்தனங்கள் அடங்கியிருக்கின்றன. முருகக் கடவுளைத் துதிப்பவை.

குழலோசை : ஆசிரியை : சரோஜா ராமமூர்த்தி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை : சாதாரண பைண்ட் ரூ. 2-0-0. உயரிய பைண்ட் ரூ. 2-8-0.

சிறுகதை இலக்கியத்தில் முன்னணியில் நிற்கக்கூடிய ஒரு தொகுப்பு இது. ஆசிரியையின் கதைகள், மலரைப்போல் லளிதமாய் அமைந்திருக்கின்றன. வர்ணம் நிறைந்த கற்பனைகள். மனதை இளக்கும் உணர்ச்சிகள். மதுரமான நடை.

தொண்டன் சிறுகதைத் தொகுதி : வெளியிட்டோர் : தொண்டன் பிரசுராலயம், வேளுக்குடி P. O. தஞ்சை ஜில்லா. விலை ரூ. 1-4-0.

பன்னிரண்டு சிறு கதைகள் அடங்கிய ஒரு கதைத் தொகுதி. வழக்கமாகச் சிறுகதைகள் எழுதும் பல எழுத்தாளர்கள் இதில் எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியான முறையில் அமைந்திருக்கிறது.

பொன்னுலகு கண்டேன் : ஆசிரியர் : பி. ஸி. ஜோஷி. மொழிபெயர்த்தவர் : வா. ரா. கிருஷ்ணன். வெளியிட்டோர் : ஜனசக்தி பிரசுராலயம், சென்னை.

சென்ற மார்ச் மாதம் பெஜவாடாவில் நடந்த அகில இந்திய கிசான் சபை மகாநாட்டைப் பற்றி எழுதப்பட்ட சிறுநூல். விரிவாகவும் உணர்ச்சியூட்டும் முறையிலும் எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு சாண் வயிறு : ஆசிரியர் : கி. வா. ஜகன்னாதன். வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை : ரூ. 1—4—0.

மொத்தம் பதினாறு கட்டுரைகள் இதில் இருக்கின்றன. பொழுது போக்கி இன்பமாய்ப் படிக்கத்தக்க முறையில், பொருள் செறிவோடு எளிய நடையில் அமைந்திருக்கின்றன அத்தனை கட்டுரைகளும். இலக்கியம் என்றால் என்ன? பாட்டுத்தானா? கதை, கட்டுரைகளும் இலக்கியத்தில் சேர்ந்தவை யில்லையா? இவ்விஷயத்தை விளக்கி, ஆசிரியர் நேர்த்தியாய் வரைந்துள்ள 'இலக்கியக் கட்டுரை' என்ற வியாசத்தை, இலக்கியம் என்றால் என்னவோ என்று மயங்கும் அனைவரும் படிப்பது அவசியமாகும்.

அற்புதப் பெண்மணி : ஆசிரியர் : ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர் : அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 1.

ரேடியம் என்ற அபூர்வப் பொருளைக் கண்டு பிடித்து உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானிகளான கூரி தம்பதிகளின் வரலாற்றை விவரிக்கிறது இந்த நூல். ஸ்ரீமதி கூரி, பற்பல கஷ்டங்களையும் தைரியமாகச் சமாளித்து, இரு முறை நோபல் பரிசை எவ்வாறு பெற்றாள் என்பதை ஆசிரியர் ரசமாகச் சொல்லுகிறார்.

கிளிக் காதல். ஆசிரியர் : பண்டித ரத்னம். வெளியிட்டோர் : ஸ்டார் பிரசுரம், காரைக்குடி. விலை அணா 8.

காதலனின் பிரிவாற்ருமையால், தான் பெற்ற இன்பத்தை மீண்டும் சிந்தித்துத் தன் அருகிலிருக்கும் கிளியிடம் சொல்லி ஆறுதலடையும் முறையில் இந்தச் சிறு நூல் அமைந்திருக்கிறது. இதில் மொத்தம் நூறு பாட்டுக்கள் இருக்கின்றன.

ஆசியாவின் எதிர்காலம் : ஆசிரியர் : ஏ. ஜி. வெங்கடாச்சாரி. வெளியிட்டோர் : ஆசிய ஜோதிப் பிரசுரம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூபாய் 1—4—0.

இந்த யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவின் நிலைமையும் ஆசியாவின் எதிர்காலமும் என்ன ஆகும் என்பது ஒரு ரசமான பிரச்னை. அதைப் பற்றித் தமது அபிப்பிராயத்தை, ஆசிரியர் விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிருர்.

கதைக் கனிகள் : மூல ஆசிரியர் . ஆண்டர்ஸன். தமிழாக்கியவர் : எம். எல். சபரிராஜன். வெளியிட்டோர் : நவயுகப்பிரசுராலயம், காரைக்குடி. விலை ரூ. 1.

யோகினிக் கதைகள், மனித உள்ளங்களை ஒரு மந்திரஜால உலகத்துக்குக் கொண்டுபோய்ப் பரவசப்படுத்தும் சக்தி பெற்றவையாகும். அத்தகைய கதைகள் எழுதுவதில் பெருங்கீர்த்தி பெற்றவர் ஆண்டர்ஸன். அவருடைய ஐந்து அரிய கதைகளை மதுரமான நடையில் சபரிராஜன் இங்கே தமிழ்ப் படுத்தியிருக்கிருர்.

காதல் கீதம் : ஆசிரியர் : ஐவான் டர்ஜனீவ். மொழிபெயர்த்தவர் : ரா. ஆறுமுகம். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணு 8.

டர்ஜனீவ் எழுதிய சிறு கதைகளுள் இந்தக் 'காதல் கீதம்' பிரபலமானது. மயிர் சிலிர்க்க வைக்கும் பயங்கரக் கதை. கீழ் நாட்டுச் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. மொழிபெயர்ப்பு இனிய தமிழ் நடையில், சுவை குன்ருமல் இயன்றிருக்கிறது.

கலிமாவின் காதல் முதலிய **கதைகள் :** ஆசிரியர் : சுவாமி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர் : அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 1.

இதில் ஆறு கதைகள் இருக்கின்றன. இவை யனைத்தும் உண்மைக் காதலை விளக்கும் கலைச் சித்திரங்கள் என்று பதிப்புரை கூறுகிறது. தற்காலத்துச் சிறு கதைகளுக்கும் இவற்றுக்கும் வெகு தூரம் என்ருலும் இவையும் படிப்பதற்கு ரசமாகவே அமைந்திருக்கின்றன.

தமிழிசையும் தமிழிசைத் தந்தையும் : ஆசிரியர் : புனிதன். வெளியிட்டோர் : தமிழிசைப்பள்ளி, தேவகோட்டை.

தமிழிசையைப் பற்றியும் தமிழிசை பரவுவதற்குக் காரணஸ்தராக இருந்து வரும் ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்களைப் பற்றியும் புனிதன் எல். பவர் எழுதிய பத்து வெண்பாக்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

நூர்ஜஹான் : ஆசிரியர் : துவிஜேந்திரலால் ராய். தமிழாக்கியவர் . ப. கி. விஜயராகவன். வெளியிட்டோர் : புத்தக நிலையம், திருச்சி. விலை ரூ. 2—4—0.

இது பிரபல நாடகாசிரியரான துவிஜேந்திரலால் ராய் என்பவர் எழுதிய நாடகம். மொகலாயர் காலத்தை ஆதாரமாக வைத்து எழுதியிருக்கிருர். பிற்காலத்திலே பாரத ராணியாக விளங்கிய நூர்ஜஹானை நம் கண் முன்பு கொண்டு வந்து காட்டுகிருர் ஆசிரியர். ஆரம்பம் முதல் கடைசி வரை மிக்க ரசமாக அமைந்திருக்கிறது. மொழிபெயர்ப்பு மிக்க இனிமையாய்ச் செல்கிறது.

பக்திரஸக் கீர்த்தனைகள் : இயற்றியவர் : இராயவரம் சுப. இராமநாதன் செட்டியார்.

ராயவரம் உச்சினி மாகாளி அம்பிகையின் மீது தோத்திரமாகப் பாடிய பதினைந்து கீர்த்தனைகளுக்கு மேல் ராக தாளங்களோடு இதில் அடங்கியிருக்கின்றன.

டோங்ரே

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்

பற்கள் வளர
உதவி செய்கிறது



நீங்கள்

இன்ஷ்யூர் செய்ய

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்
எஸ்பிளனேட், :: மதராஸ்

இந்தியா முழுதும் கிளைகளும்
ஏஜன்ஸிகளும்:

தமிழ் நாடு ஏஜெண்டுகள்:—
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் : : மேலக்கோபுர வீதி - மதுரை

அது ஒரு காலம்!

நாலைந்து வருஷங்களுக்குமுன்புதான். நீங்கள் எந்த ஸ்டேஷனுக்கும் சுலபமாகவும் அதிகச் செலவில்லாமலும் போகமுடியும். இப்பொழுது பிரயாணச் செலவு ஒன்றுக்கு நாலாகிவிட்டது. தாமதமின்றி டிக்கட்பெறும் காலமும் ஒன்று இருந்தது. இப்பொழுதோ அரைமணி நேரத்துக்கு மேலாக குஸ்தியிட்டு டிக்கட்டு பெறவேண்டியிருக்கிறது; சார்ஜும் அதிகமாகி விட்டது. ஒரு அணாவுக்கோ அரை அணாவுக்கோ உங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய கூலிகள் தயாராக நின்றிருந்த காலமும் இருந்தது. இப்பொழுது ஆளகப்படுவதே கஷ்டம். உங்களிஷ்டப்படியே வண்டியும், வண்டியில் உட்காரும் இடமும் சுலபமாகப்பெறும் காலமும் இருந்தது. இன்று வண்டியில் நுழைய முடிந்தாலே அதிர்ஷ்டம்தான். பல தடவைகளில் ரயிலைப்பிடிக்க முடியாமலே போய்விடுகிறது. உள் நுழைய முடிந்தாலும், பல மணி நேரம் நிற்கவேண்டியும் நேரிடுகிறது. இந்த கலாட்டாவில் உங்கள் சாமான்களை இழக்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன், உங்கள் குடும்பத்தாரிடமிருந்தே பிரிந்து விடும்படி நேரிட்டாலும் நேரிடலாம். உங்கள் பெண்ஜாதி, மக்களுக்கு பிரயாணம் இன்று முன்போல சௌகரியமானதல்ல.

புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். சௌகரியமான காலம் வரும்வரை நீங்களும் உங்கள் குடும்பமும் ரயில்வேபோக்குவரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

பிரயாணத்தைக் குறையுங்கள்

A 678 TM

இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல
நிறமும், குறைந்த விலையும் உள்ள
லிப்டன்ஸ் தேயிலை
பெண் தேயிலைகள்
இதர தேயிலைகளை
விட சிறந்தவை.

லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

பி.ஏ.ராஜுசெட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்
M.S.DORAI

பூர்ணப் பொலிவு

அஜாந்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூர்ணப பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. பானம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

தயாரிக்கும் முறை :– சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

குடும்பத்திற்கு ஏற்ற

ஒரே பானம் இந்தியத் தேயிலை

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்ட்டரால் வெளியிடப்பட்டது IK-200B-T

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan

க்தி

419 419

தாரண ௵
ஆவணி ௴

-18



2 SEP 1944
MADRAS
10-5

கவிஞர்

சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்

எழுதிய

மலரும் மாலையும்

மூன்றும் பதிப்பு:
புதிய கவிதைகளும்
அழகிய மூவர்ணப்
படங்களும் சேர்க்கப்
பெற்றுள்ளன

விரைவில் வெளிவரும்

புதுமைப் பதிப்பகம்

லிமிட்டெட்

காரைக்குடி

காந்தி மலர் 2

'பெண்களுக்கு'

✲

பெண்கள் சம்பந்தமாகவும், அவர்கள் செய்யவேண்டிய சேவை, கடமை ஆகியவை பற்றியும் அவர்களுக்குரிய உரிமை, மேன்மை ஆகியவை பற்றியும் காந்திஜி இந்தப் புத்தகத்தில் நன்கு விளக்கி இருக்கிறார். 'மாணவருக்கு' என்ற புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்த வெ. ராமசாமி, அ. லெ. நடராஜன் ஆகிய இருவருமே இந்தப் புத்தகத்தையும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள். – –

கதர்ப் பைண்டு - அழகிய பதிப்பு
காந்திஜியின் படமும் சேர்ந்தது

விலை ரூ. 6/-

புதுமைப் பதிப்பகம்

பூரண விற்பனை உரிமையாளர்:

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி

Godrej



கோத்ரெஜுக்கு நன்றி பாராட்டு

தீயையும் கொள்ளைக்காரரையும் எதிர்த்து நின்று நீண்ட காலமாக வெற்றிக் கொடி நாட்டியவர் கோத்ரெஜார். அவர்கள் வெகுமானித்து வரும் பாராட்டு பத்திரங்களுக்கு ஒரு கணக்கில்லை; இப்பொழுதும், புதிது புதிதாக வாழ்த்துக்கள் வந்து குவிகின்றன. சமீபத்தில் பம்பாயில் நிகழ்ந்த, உள்ளத்தை கலக்கும் வெடி விபத்தைத் தொடர்ந்து வந்து பெருங்கேடு விளைத்த கோரத் தீயில் கோத்ரெஜ் பேழைகளின் தீரச் செயல்களைப் பாராட்டும் எத்தனையோ நற்சாட்சிப் பத்திரங்களில் ஒன்றை மாத்திரம் (அதிகம் சேர்க்க இடமில்லாமையால்) இங்கே காணலாம். தினசரி பத்திரிகைகளில் வேறு எத்தனையோ கோத்ரெஜ் பேழைகளின் தீரச் செயல்களைப் பற்றிய வரலாறுகள் வெளிவருகின்றன. சுக்கு நூருக்கும் வீழ்ச்சிகள், நாள் கணக்காக அக்னியில் மூழ்கிக் கிடத்தல், எரிந்து விழுவதும், வெடி மருந்தால் இடித்துத் தள்ளப்படுவதுமான கட்டடக் குவியல்களினிடையே, தீயணைக்கும் இயந்திரங்களின் சகாயம் பயன் படாததால், புழுங்குதல் — இது போன்ற, கோர குண்டு வீச்சிற்கு சமானமானதும், கற்பனையை கடத்ததும், அறவே எதிர்பார்க்க முடியாததுமான இன்னல்களைக் கடந்து, அவற்றுள் சேமிக்கப்பட்டுள்ள விலையுயர்ந்த பொருட்களை காப்பாற்றி வர முடியுமென்று, எந்த பேழை செய்வோனும் நம்பி யிருக்க மாட்டான்.

SHA NARANDAS VALJI

முடி பஜார், பம்பாய், 3,
தேதி 9—5—1944.

கோத்ரெஜ் அண்டு பாய்ஸ்
மாங். கோ., லிட்.,
லால்பாக், பரெல், பம்பாய்.

ஐயன்மீர்!

காண்பதற்கரிய ஓர் ஆச்சர்ய சம்பவத்திற்கு உங்கள் பேழை காரணமாயிருந்தது. ஏப்ரல் மாதம் 14-ம் தேதி ஆரம்பித்த, மறக்கமுடியாத பயங்கரத் தீயில், இந்த பேழை அகப்பட்டுக் கொண்டது. கொழுந்து விட்டெரியும் அக்னி ஜ்வாலைகளில் பலநாட்களும், அதற்குப்பின் இன்னும் அதிக நாட்கள் கொதிக்கும், இடிந்த கட்டடக் குவியல்களிலும் கிடந்தது. நேற்று, அதாவது 25 தினங்களுக்குப் பிறகு, பேழையை அப்புறப்படுத்தியபோது, அதன் சூட்டைத் தணிப்பதற்கு குடம் குடமாக தண்ணீர் ஊற்ற வேண்டியிருந்தது. இவ்வளவுக்கும் பிறகு பேழையைத் திறந்து, எங்கள் நகைகளையும் ரூபாய் நோட்டுக்களையும் வைத்தது போலவே கண்டது ஆச்சர்யமாகத்தானிருந்தது.

பேழை எங்களுக்குச் செய்த சேவைக்காக உங்களை மிக்வும் பாராட்டுகிறோம்.

இப்படிக்கு, தங்கள் விதேயன்,
நரன்தாஸ் வால்ஜி மர்சாவாலாவிற்காக,
(Sd) பகவான்தாஸ் வால்ஜி

கோத்ரெஜ் & பாய்ஸ்
மாங். கோ., லிட்.

நாடெங்கும் ஆபீஸ்களும், ஏஜென்ஸிகளும்

சென்னை : 164, பிராட்வே.

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

88847
தாரண
மலர் 10

சக்தி

ஆவணி
இதழ் 5
1944
MADRAS

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

பர்மாவில் பட்ட கடன்

அசாதாரணமான விபரீதங்கள் நிகழும்போது, சாதாரணச் சட்டங்களையும் தர்மங்களையும் முரட்டுப் பிடியாய்ப் பிடித்துக்கொண் டிருக்கக் கூடாது. யுத்தம் என்பது, தனி மனிதர்கள் சம்பந்தப்பட்டமட்டில், ஓர் அசாதாரண சம்பவமே யாகும். அதனால் தனி மனிதர்களுக்கு நேரும் சங்கடங்களில், கருணையும் அனுதாபமுமே நாம் காட்டவேண்டும். இதற்கு நேர்மாருக நடக்கும் சில இரக்கமற்ற நிகழ்ச்சிகளைக் கேட்கும் போது, எவரும் மனம் பதைக்கத் தான் வேண்டும்.

ஜப்பானியர் வந்து புகுந்ததால், ஏராளமான சொத்துச் சுதந்திரங்களை யெல்லாம் அப்படியே போட்டது போட்டபடி போட்டுவிட்டு, பர்மாவிலிருந்து பல இந்தியர்கள் இந்தியாவுக்கு ஓடிவந்துவிட்டார்கள். இப்படி வந்தவர்கள்மீது, இங்கே வியாஜ்யங்கள் நடக்கின்றனவாம். அங்கே பட்ட கடனை இங்கே கொடு என்று, ஷைலக் என்ற யூதனைப்போல், சிலர் நெரிக்கிருர்களாம். இது பற்றி நண்பர் ராம. சீனிவாசன், தினசரிகளில் விடுத்துள்ள அறிக்கை, சர்க்கார் கவனத்துக் குரியதாகும்.

பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்கத் தானே வேண்டும் என்று சட்டம்பேசுவது முறையல்ல. 'வெனிஸ் வர்த்தகன்' என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் வரும் ஷைலக்மாதிரி எவரும் விரும்புவது தர்மமல்ல; அழகல்ல. பத்திரத்தில் கண்ட அபராதமான ஒரு 'ராத்தல் சதை'யே வேண்டும் என்று, ஈர இரக்கமற்று அவன் கேட்பதுபோல, நடக்கலாகாது. இத்தகைய கடும் சந்தர்ப்பங்களில், கருணைதான் முக்கியம். "கருணை வானின்று சொரிவது; ...மன்னனின் மணிமகுடத்தைவிட, அதிகமாய் அவனை அணி செய்வது கருணையே...சட்டத்தைக் கண்டிப்பாய் ஆண்டவன் பிரயோகித்தால், நம்மில் எவரும் விமோசனம் அடைய முடியாது. ஆண்டவனின் கருணைக்கே நாம் மன்ருடுகிருேம்" என்கிருள் ஷேக்ஸ்பியரின் போர்ஷியா. இந்த வார்த்தைகள் இங்கே மிக மிகப் பொருத்தமாகும்.

பர்மாவி லிருந்து வெளியேறிய எல்லா இந்தியர்களின் நிலைமையும் ஒரே விதமாய் இருக்கும் என்று நாம் சொல்லவில்லை. ஒவ்வொருவர் நிலையும் வெவ்வேறு விதமாய்த்தான் இருக்கும். அங்கே கடன் வாங்கிய சிலர், இங்கே ஏதோ சொற்ப சொத்துள்ளவர்களா யிருக்கலாம். அப்படிப் பட்டவரின் அற்ப சொத்தையும் கடன்காரர் பறித்துக்கொண்டு போய் விட்டால், அவர்கள் நிலைமை நிர்க்கதியாகிவிடும். கடன் வாங்கிய மற்றும் சிலருக்கு, இங்கேயும் நல்ல சொத்து இருக்கக்கூடும். அவர்களுக்கு அங்கே கடன் கொடுத்துவிட்டு இங்கே வந்திருப்பவர்களே இப்போது சொத்தில்லாதவர்களா யிருக்கவும் கூடும். இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில், கடனைப் பூராவும் திருப்பிக்கொடுத்து விடும்படி செய்வதுதான் முறை. ஆகையால், பர்மாவில் ஏற்பட்ட

கடன் விஷயத்தில், ஒரே மட்டமாக எந்த நடவடிக்கையும் எடுப்பது சரியாகாது.

விசேஷ சந்தர்ப்பங்களில் விசேஷமான ஏற்பாடுகள்தான் செய்யவேண்டும். தனித்தனியான ஒவ்வொரு கேசிலும் அந்தந்த நிலைமைக் கேற்ற பரிகாரம் அளிக்கத்தக்க முறையில்தான் ஏதேனும் விதிகள் வகுக்கவேண்டும். கடனைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியுள்ளவர்கள், கொடுத்துவிடும்படி செய்யவேண்டும். அரை குறையான சக்தியுடையவர்கள், சிறுகச் சிறுகக் கடனைத் தீர்ப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யவேண்டும். சக்தியே இல்லாதவர்கள் விஷயத்தில், பர்மா சொத்து என்ன ஆயிற்று என்று முடிவான நிலைமை தெரியும்வரையில், கடனைத் திருப்பித் தரும்படி நிர்ப்பந்தம் செய்யாமல், கடனை ஒத்திவைப்பதும் அவசியமாகும். இந்த முறையில், சிம்லாவிலுள்ள பர்மிய சர்க்காரும், டில்லியிலுள்ள இந்திய சர்க்காரும் உடனே நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது முக்கியமாகும்.

பர்மாவில் பட்ட கடனுக்கு, இந்தியர்வில் வியாஜ்யம் வந்தால், சர்க்கார் செய்யக்கூடிய திட்டமான உதவிகள் தான் யாவை? நமக்கு மூன்று யோசனைகள் தோன்றுகின்றன :

1. பிரதிவாதி, பர்மாவில் விட்டு வந்த சொத்துக்களை ஈடாகப் பதிந்து கொண்டு, அவருடைய கடனைத் தீர்க்க, சர்க்காரே பண உதவி செய்யலாம்.

2. பிரதிவாதிக்கு இந்தியாவில் உள்ள சொத்து நிலைமைகள் என்ன என்பதை, ஸ்தலப் பிரமுகர்கள் கொண்ட ஒரு பஞ்சாயத்தின் மூலமோ ஒரு கடன் சமரச போர்டு மூலமோ நிர்ணயித்து, பிரதிவாதியின் சக்திக்கு இயன்ற அளவிலும் முறையிலும் கடனைத் தீர்க்க ஏற்பாடு செய்யலாம்.

3. காலாவதி தோஷத்துக்குப் பயந்தே, சிலர் வழக்குத் தொடுக்கிறார்கள். ஆகையால், பர்மாவில் ஏற்பட்ட கடன்களுக்கு, பர்மா திரும்பவும் பிடிபடும் வரையில், காலாவதி தோஷம் கிடையாது என்று ஓர் அறிக்கை பிறப்பிக்கலாம்.

இந்திய - பர்மிய சர்க்கார்கள் இந்தப் பரிகாரங்களைச் செய்தாலும் சரி, செய்யா விட்டாலும் சரி; கடன் கொடுத்தவர்கள், தாராள மனோபாவத்தோடு நடந்து கொள்ளுவதே அழகாகும். இம்மாதிரி அவந்தரை வழக்குகள் பெரும்பாலும் தனவணிக நாட்டில், அதிலும் முக்கியமாய்ப் புதுக்கோட்டை சமஸ்தானத்தில்தான், நடைபெறுவதாய் அறிகிறோம். சமஸ்தான தர்பார், எதிலும் தூங்கி வழிந்து பின்தங்கி நிற்பதுபோல் இந்த விஷயத்திலும் இருந்து விடாமல், தங்களால் இயன்ற பரிகாரங்களை உடனே தேட முயல்வது தான் நேர்மையாகும். தர்பார் அந்தர தர்பாராய் இல்லாமல் ஏதாவது செய்யுமா?

பொருள் அடக்கம்

	பக்கம்
பர்மாவில் பட்ட கடன்	... 251
காலச் சுழல்	... 253
கதம்பம்	... 254
புது டில்லிப் பூசாரிகள் —தி. ஜ. ர.	... 255
மகாகவி பாரதி —வ. ரா.	... 259
பெற்றோர் இன்பம் —பாரதி தாசன்	... 261
கடைசி அடகு —மஞ்சேரி ஈச்வரன்	... 264
அற்புத மருந்து —மருத்துவன்	... 269
படங்கள்	... 271
சிப்பாய் சுப்பு —வேணு	... 277
அனார்க்கிஸம் —வெ. சாமிநாத சர்மா	... 285
ஆவேசக் கவிதை —நீலாவதி ராம சுப்பிரமணியம்	... 288
புத்தக உலகம்	... 291

காலச்சுழல்

2 SEP 1944
MADRAS

கஸ்தூரிபாய் நிதி: கஸ்தூரிபாய் நிதிக்கு, சென்னை நகரமும் தமிழ்நாடும் ஏழு லட்ச ரூபாய் வசூல் செய்யவேண்டி யிருக்கிறது. ஆனால், இதுவரை அதில் பாதிப் பணங்கூட வசூலாக வில்லை. அக்டோபர் இரண்டாம் தேதிக்குள் முழுத் தொகையையும் வசூல் செய்தாகவேண்டும். இந்த நிதி ஒரு சிறந்த லட்சியத்துக்காகப் பயன்படப் போகிறது என்பதையும், அதன் மூலம் ஒரு சிறந்த இந்தியப் பெண்மணியை நாம் கௌரவிக்கப் போகிறோம் என்பதையும் தமிழர்கள் உணரவேண்டும். தமிழ்நாடு இந்த நிதிக்கு உதவுவதில் முன்னணியில் நிற்கும் பாக்கியம் பெறவேண்டும். அங்கங்கே நண்பர்கள் இது விஷயத்தில் தீவிர முயற்சி செய்ய வேண்டுகிறோம்.

வேவல் குண்டு: காந்திஜி-ஜின்னா சந்திப்பு நடக்கப்போகிறது என்று கேட்டவுடனேயே, வைஸிராய் வேவல் பிரபு ஒரு குண்டு போட்டு வைத்தார். "யுத்தம் முடியும்வரையில், ராணுவ நடவடிக்கையிலிருந்து, சர்க்காரின் இதர பொறுப்புக்களைப் பிரிக்க முடியாது" என்று அவர், கூறியிருக்கிறார். இதன் அர்த்தமென்ன? காங்கிரஸ்-லீக் ஒற்றுமையோ வேறு எதுவோ ஏற்பட்டாலும் ராஜ்ய நிருவாகத்தை இப்போது இந்தியரிடம் கொடுக்க, பிரிட்டன் தயார் இல்லை என்றுதான் அர்த்தம். தங்களுக்குள் சமரசம் ஏற்பட்டுத்தான் பலன் என்ன என்று, காந்திஜியும் ஜின்னாவும் மனம் தளரட்டும் என்பது இதன் கருத்தா?

அந்தச் சந்திப்பு: ஆவலுடன் சிலரும் ஏக்கத்துடன் பலரும் ஊக்கமாய் காந்தி-ஜின்னா சந்திப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், திடீரென்று ஜின்னாவுக்குக் காய்ச்சல் வந்து, அந்தச் சந்திப்பை ஒத்திப்போகும்படி செய்தது. செப்டம்பர் 10-ஆம் தேதி இருவரும் சந்திக்கலாம் என்று இப்போது மறுபடியும் ஒரு ஹேஷ்யம் வந்திருக்கிறது. சந்திப்பு இப்படித் தாமதித்ததும் ஒரு நன்மைக்குத்தான் என்று நாம் எண்ணலாம். இந்த இடைக்காலத்தில், ராஜாஜி திட்டம்பற்றிச் சாதகமும் பாதகமுமான பல தீவிர அபிப்பிராயங்கள் நாடெங்கும் வெளிப்பட் டிருக்கின்றன. இரு தலைவர்களும், விருப்பு வெறுப்பின்றியும் பழைய சொந்த அபிப்பிராயங்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிராமலும் ஹிந்து-முஸ்லீம் பிரச்னையை அலசிப்பார்க்க, மேற்கண்ட பலதரப்பட்ட அபிப்பிராயங்களும் உதவியாயிருக்கும். காந்திஜி எப்போதும் திறந்த மனதுடனேயே எந்தச் சந்தர்ப்பத்திலும் நடந்துகொள்வார். ஜின்னா எப்படியோ?

சர்ச்சிலும் சுதந்தரமும்: சுதந்தரம் என்பது என்ன? அதை விளக்கச் சில சோதனைகள் சொல்லுகிறார் சர்ச்சில்: "இன்று ஆட்சியிலுள்ள சர்க்காரை எதிர்க்கவும் கண்டிக்கவும் சுதந்தரமாய் அபிப்பிராயங்கள் வெளியிடவும் உரிமை உண்டா? ஜனங்கள் தங்களுக்குப் பிடிக்காத சர்க்காரை அகற்றும் உரிமையும், தங்கள் இஷ்டத்தைத் தெரிவிக்கச் சட்ட ரீதியான சாதனங்களும் உண்டா? நிர்வாக அதிகாரிகளின் பலாத்காரத்துக்கு உட்படாமலும் ராஜீயக் கட்சிகளின் சம்பந்தமில்லாமலும், நீதி பரிபாலனம் நடக்கிறதா? ஏழைக்கும் பணக்காரனுக்கும், சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஜனங்களுக்கும் சம நியாயம் வழங்குகிறதா?"—பாஸிஸத்தினின்றும் விடுபடும் சுதந்தர இத்தாலிக்கு, இந்த வைபவங்களெல்லாம் ஏற்படப் போகின்றன என்று, ஆசை காட்டுகிறார் சர்ச்சில். இதே கேள்விகளை, இந்தியா விஷயத்தில் சர்ச்சிலைக் கேட்டால், சரியான பதில் கிடைக்குமா?

கதம்பம்

எழுத்தாளர் சங்கடம்: சர்க்காரின் காகிதக் கட்டுப்பாட்டு உத்தரவால் எழுத்தாளர்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களைப் போக்கப் பலர் பலவிதமான யோசனைகளைச் சொல்லுகிறார்கள்: (1) எழுத்தாளர்களின் கதைகளையும் நாடகங்களையும் ஒலி பரப்பி, அ. இ. ரேடியோ அவர்களுக்கு உதவி புரியலாம்; (2) எழுத்தாளர்கள் முன் காலத்துப் புலவர்களைப் போல, முச்சந்தியில் நின்று தங்கள் கையெழுத்துப் பிரதிகளை ஜனங்களுக்கு வாசித்துக் காட்டிவிட்டுச் சில்லரை வசூல் செய்யலாம்; (3) புத்த தருமத்தைக் கல் தூண்களில் அசோகன் பொறித்ததைப்போல, எழுத்தாளர்களுடைய கதைகளையும் நாவல்களையும் பாறைகளில் பொறித்து வைக்கலாம்; (4) எழுத்தாளர்கள் தங்கள் கையெழுத்துப் பிரதிகளைத் தூக்கிக் கொண்டு போய், ரஸ்தா ஓரமாக ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, 'இதெல்லாம் நான் எழுதியது' என்று ஓர் அட்டையிலே எழுதி அதை மார்பிலே தொங்க விட்டுக்கொண்டு, போவோர் வருவோரிடம் உண்டியல் வசூல் செய்யலாம் இவை யெல்லாம் 'ஸவுண்ட்' பத்திரிகையில், 'ஸாபா' சொல்லும் யோசனைகள். கேலி ஒருபுறம் இருக்கட்டும். உண்மையிலேயே நிலைமை மோசம் தான். அதற்குச் சரியான பரிகாரம் யார் சொல்லப் போகிறார்கள்? செய்யப்போகிறார்கள்?

குரங்காய் மாறினான்: இது நிஜமாய் நடந்ததாம்: பெல்ஜியத்தில், எல்லா வாலிபர்களையும் தங்களுக்கு அடிமையாய் வேலை செய்யும்படி, நாஜிகள் நிர்ப்பந்தம் செய்கிறார்களாம். இதற்கு அஞ்சிய ஒரு தாய், ஒரு குரங்குத் தோலை எடுத்தாள். தன் மகனை அதற்குள்ளே வைத்துத் தைத்தாள். தன் சகோதரனின் மிருகக் காட்சிச் சாலையிலே, பையனை ஒரு கூண்டுக்குள் விட்டாள். பையனும் குரங்கு மாதிரியே பாசாங்கு செய்துகொண்டிருந்தான். ஒரு நாள், தாய் அவனைப் பார்க்க வந்தாள். தான் கற்ற குரங்குச் சேஷ்டைகளை, தாய்க்குக் காட்ட விரும்பினான் பையன். கூண்டின் மேற்புறக் கம்பிமீது ஜம் என்று தாவினான். பாவம்! கை தவறி விட்டது. கீழே விழுந்தான். எங்கே? தன் கூட்டுக்குள் அல்ல; பக்கத்திலிருந்த சிங்கக் கூட்டுக்குள். தாய் திகிலடைந்து, "ஐயோ! அபாயம்!" என்று கத்தத் தொடங்கினாள். ஆனால், அந்தக் கூட்டிலிருந்த இரண்டு சிங்கங்களும் இவள் கூச்சலைக் கேட்டு நடுங்கிவிட்டன. அவை கம்பியோரமாய் வந்தன; "தாயே! கத்தாதீர்கள். கத்தினால், எங்கள் மூவரையும் காட்டிக்கொடுத்து விடுவீர்கள்!" என்று அவை இவளைக் கெஞ்சவும் தொடங்கின!

ஊருக்கொரு புத்தகசாலை: இந்தியா மீது, அமெரிக்கக் கிறிஸ்தவப் பாதிரிகளுக்குத் திடீரென்று கடாட்சம் விழுந்திருக்கிறதாம். இந்தியாவின் ஏழு லட்சம் கிராமங்களிலும், ஊருக்கொரு கிறிஸ்தவப் புத்தகசாலை ஏற்படுத்த, அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம். அந்த ஒவ்வொரு புத்தகசாலையிலும், மூன்று டாலர் விலையுள்ள புத்தகங்களை வைக்க, அவர்கள் உத்தேசித்திருக்கிறார்களாம். புத்தகங்களில் பின் வருவதுபோன்ற விஷயங்கள் இருக்குமென்று எதிர்பார்க்கலாமா? "பாவிகளை ரட்சிக்க ஏசு பெருமான் பூவுலகத்துக்கு வந்தார். கறுப்பர்களை ரட்சிக்க, வெள்ளையர்களை, ஆண்டவன் மண்ணிலே படைத்திருக்கிறார். அமெரிக்கச் சாமான்களே தலை சிறந்தவை, உறுதியானவை, மலிவானவை. ஆமென்!"

சுகத்துக்குக் காரணம்: பட்டாளத்தில் சேர்ந்த ஒரு பால்காரன் தன் மனைவிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினான்: "இந்தப் பட்டாளத்து வாழ்க்கை ரொம்ப இன்பமா யிருக்கிறது. இங்கே 5-30 மணி வரையில் நன்றாகத் தூங்கலாம்."

புது டில்லிப் பூசாரிகள்

தி. ஜ. ர.

கடவுள் கல்லாயிருக்கிறார்; பூசாரி அட்டகாசம் செய்கிறான். கடவுள் மாத்திரம் கொஞ்சம் உயிரும் உடம்புமாயிருந்தால், இத்தனை பூசாரிகள் கிளம்ப மாட்டார்கள். புது டில்லியிலே கோயில் கொண்டிருக்கும் தெய்வம்—அது தான் இந்திய சர்க்கார்—, இப்போது பல பூசாரிகள் சூழ்ந்து நிற்கிறது. சாமியை ஜனங்களிடமோ, ஜனங்களைச் சாமியிடமோ, அண்டவிடாமல் தடுப்பது தான் பூசாரிகளின் தொழில். இந்தத் தொழில் இப்போது இந்தியாவில் கன கச்சிதமாய் நடைபெற்று வருகிறது. இந்த முடிவு தான், நாங்கள் சமீபத்தில் டில்லிக்குச் சென்று வந்த காலத்திலிருந்து, என் மனதில் உறுத்திக் கொண்டிருக்கிறது.

இந்நாட்களில் ரயில் பிரயாணத்தைப் பற்றி வர்ணிக்கத் தேவையில்லை. ஸ்டேஷனுக்கு ஐந்தாறு நாள் படையெடுப்பு நடந்த பிறகு தான், எங்களுக்கு டிக்கட் கிடைத்தது. நாங்கள் புறப்பட்ட கம்பார்ட்மெண்டில் (இரண்டாம் வகுப்பு) கீழே இரண்டு ஸீட்; மேலே இரண்டு பெர்த். பெஜவாடா செல்லும் வரையில், எல்லாம் சௌகர்யமாய்த் தான் இருந்தது. அங்கே போனதும் பிடித்த சனியன், டில்லி வரையில் விடவில்லை. நாலு பேர் படுக்க வேண்டிய வண்டியில் ஒன்பது பேர்; தவிர, குறுக்கும் நெடுக்குமாய்ப் பெட்டிகளும் படுக்கைகளும் பரப்பிக் கிடந்தன. மூச்சுவிட முடியவில்லை. இரண்டாம் வகுப்பே இப்படி என்றால், 'இன்டர்' என்ற திரிசங்கு வகுப்பும் மூன்றாம் வகுப்பும் எப்படியிருக்கும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். ஏதோ ஒருவாறு உயிரோடு டில்லி போய்ச் சேர்ந்தோம். இந்தப் பிரயாண வைபவத்தை விரிவாய் வர்ணித்துச் சொல்ல, எனக்கு ஆசை தான். ஆனால், எழுத வந்தது வேறு விஷயமாயிற்றே; இதை வளர்த்த வேண்டாம்.

டில்லிக்குப் போனதும், தமிழ் நாட்டிலிருந்தே எங்கள் மாதிரி இன்னும் சிலரும் டில்லிக்கு வந்திருக்கக் கண்டோம். ஆஹா! சர்க்காரின் காகிதக் கட்டுப்பாட்டு உத்தரவின் பெருமையே பெருமை!

ஊரான் ஊரான்
தோட்டத்திலே
ஒருவன் போட்டது
வெள்ளரிக்காய்;
காசுக் கிரண்டு
விற்கச் சொல்லி - ஒரு
காகிதம் போட்டாண்டி
வெள்ளைக்காரன்

என்ற பாட்டை எனக்குள் நானே பாடிக் கொண்டேன். ஏன் பாடினேன், அந்தப் பாட்

காசிக்குப் போனால், சில பண்டாக்கள் வந்து சூழ்ந்துகொள்ளுவார்களாம். அந்த மாதிரி, புது டில்லி சர்க்காரைப் பல பூசாரிகள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நாடகம் தொலையவேண்டும். ஒன்று, ஜனங்களுக்குப் பொறுப்புள்ள சர்க்கார் வேண்டும்; அல்லது, சர்க்கார் தன் சுய ரூபத்தோடு தனித்து நிற்கவேண்டும். தரகு வியாபாரங்கள் கூடாது; கூடாது.

டுக்கும் இந்தச் சந்தர்ப்பத்துக்கும் ஏதும் சம்பந்தமுண்டா என்ற காரண காரியங்களைக் கேட்டால், எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது. மனிதனுடைய மனது, தர்க்க சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டா வேலை செய்கிறது? அதைத் தான் பெரியவர்கள் 'பேய்க் குரங்கு'க்கு உவமை சொல்லியிருக்கிறார்களே. ஆகையால், அந்தப் பாட்டுக்கும் இந்தச் சந்தர்ப்பத்துக்கும் சம்பந்தமேயில்லை யென்று நான் சொல்லுவதாகவும் எண்ணி விடாதீர்கள். அதுவும் எனக்குத் தெரியாது.

நானுவது கொஞ்சம் தேவலை. 'சக்தி' உரிமையாளர் வை. கோ. மகா மோசம். எதற்காக நாம் டில்லிக்கு வந்தோம்? ஏன் வர வேண்டும்? இதென்ன புண்ணிய யாத்திரையா? சர்க்கார் செய்யும் நிர்ப்பந்தங்களை நம்மிச்சைப்படி சமாளிக்க முடிந்தால் சமாளிப்போம். இல்லையானல் சும்மா இருப்போம். சிபார்சுகளும் விண்ணப்பங்களும் எதற்கு? இவ்விதமெல்லாம் சள்ளைப்பட்டது அவர் மனம். நானும் யோசித்துப் பார்த்தேன். ராஜாங்கம் எப்படி நடக்கிறது? யுத்த காலத்தில், யுத்தத்திலே சம்பந்தப் பட்ட நாடுகள் அனைத்திலும் பலவிதக் கட்டுப்பாடுகள் இருக்கத்தான் இருக்கும். ஆயினும், அந்தர தர்பாராய் எதுவும் நடக்காது; நடக்கமுடியாது. இந்தப் பாரத பூமியில், எல்லாம் விந்தையா யிருக்கிறது என்று என்னென்னவோ எண்ணங்கள் என் மனதில் எழுந்தன.

இது ஜனநாயக காலம் என்கிறார்கள். ஜனங்களின் சுதந்தரத்தைக் காப்பாற்றவே யுத்தம் நடக்கிறது என்கிறார்கள். ஆனல், யுத்தம் நடக்கும்போது பொது ஜனங்களின் யோக க்ஷேமங்களைப் பற்றிக் கவலைப்படவே தேவையில்லை என்பதுபோல் தான், நம் தேசத்தில் காரியங்கள் நடக்கின்றன. ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் நேரடியான தொடர்பு இல்லை. ஜனங்களின் செல்வாக்கைப் பெற்ற தலைவர்களின் ஆதரவு சர்க்காருக்குக் கிடையாது; சர்க்காரின் அபிமானத்தைப் பெற்றவர்களிடமோ ஜனங்களுக்குப் பற்றுதல் கிடையாது. இந்த நிலையில், சில பூசாரிகள் தோன்றுகிறார்கள். காசியிலே யாரோ பண்டாக்கள் இருக்கிறார்களாமே அந்த மாதிரி, இவர்கள் சர்க்கார்த் தெய்வத்தின் முன்னிலையில் போய் நிற்கிறார்கள்; ஜனங்களுக்குத் தாங்களே பிரதிநிதிகள் என்பதுபோல அங்கே நடிக்கிறார்கள். ஜனங்களின் முன்னிலையில் வந்து நிற்கிறார்கள்; தாங்கள் செய்யும் பூசனைகளையே சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்பது போல இங்கே நடிக்கிறார்கள். இவர்களால் சர்க்கார் நமது மனதைத் தெரிந்து கொள்வதில்லை; நாம் சர்க்கார் திருவுள்ளப் பாங்கையும் தெரிந்து கொள்வதில்லை. ஆனல், இந்தப் பூசாரி நாடகம் மாத்திரம் ஒழுங்காய் நடந்து கொண்டிருக்கிறது. பூசாரிகளுக்கு ஏதாவது தனி லாபம் இருக்குமோ என்னவோ, நாம் அறியோம். நமக்கும் சர்க்காருக்கும் மட்டில் ஒரு பயனு மில்லை.

அகில இந்தியப் பத்திராசிரியர் மகாநாடு என்கிறார்களே, அதில் சேர்ந்த ஒருவரை டில்லியிலே சந்தித்தேன். காகிதக் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பேச நேர்ந்தது. "ஏதோ பம்பாயில் ஒரு மகாநாடு நடந்ததாமே; அதன் தலைவரிடம், குறையுள்ளவர் தங்கள் குறைகளைத் தெரிவித்தால், தீர்த்து

வைப்பாராமே. ஏதாவது பிரயோசனப்படுமா?'' என்று கேட்டேன். "அதெல்லாம் ஒரு பிரயோசனமு மில்லை. பார்த்தாயா, நான் பெரியவன் என்று சர்க்காரிடம் ஜம்பம் சொல்லிக் கொள்ளுவதற்காகவே, அந்த மகாநாட்டுத் தலைவர் இந்த வேலை செய்திருக்கிறார். நீங்கள் இதை யெல்லாம் நம்பாதீர்கள்'' என்றார் அகில இந்தியப் பத்திராசிரியர். ஓ! அந்தப் புதிய பூசாரியைக் கண்டு, இந்தப் பழைய பூசாரிகளுக்குப் பிடிக்கவில்லையாக்கும்! விஷயம் இதுதான்!

ஆனால், இந்தப் பத்திராசிரியர் மகாநாடு மாத்திரம் என்ன வாழ்ந்தது? இதுவும் அது மாதிரியே ஒன்றுதானே? சுமார் இரண்டு வருஷத்துக்கு முன்னே என்று ஞாபகம். 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன் இதன் தலைவரா யிருந்த காலம். அப்போது, அவரை நான் கண்டு பேசிய போது, இந்தப் பத்திராசிரியர் மகாநாட்டை ஏன் ஜனநாயக முறையில் நடத்த லாகாது என்று கேட்டேன். ஸ்ரீ. சீனிவாசன் குழந்தை சுபாவமுடையவர். நாம் அவரிடம் உரிமையோடு சண்டைபோடலாம். துளியும் முகம் கோணாமல் பதில் சொல்லுவார். அவர் சொன்னார்: "இந்த மகாநாட்டில் யார் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால், எதற்காக எல்லாரும் சேரவேண்டும்? நாங்களே உங்கள் உரிமைகளையும் பாதுகாக்கிறோமே'' என்றார். சமாதானம் சரியாய்த்தான் இருந்தது.

என்றாலும், உண்மையில் இந்த அகில இந்தியப் பத்திராசிரியர் மகாநாடு அகில இந்தியாவிலுமுள்ள சகல பத்திரிகைகளின் பிரதிநிதியாகவும் இருக்கத் தக்க பின்பலம், இதற்கு உண்டா? ஏன் இதை மாகாணவாரிச் சங்கங்களாக அமைத்து, அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு ஸ்தாபனமாக நிர்மிக்கலாகாது? அப்படிச் செய்தால், பிரதிநிதித்துவம் வாய்ந்ததும், சகல பத்திரிகைகளும் பங்கெடுத்துக் கொண்டதுமான பலங் கொண்ட அகில இந்தியப் பத்திராசிரியர் மகாநாடு அமையுமே? இல்லாத பட்சத்தில் இன்று போல் சில 'பெரிய பீரங்கி'கள் மாத்திரமே இதில் இடம் பெற்றிருக்க முடியும். 'பெரிய பீரங்கி'கள் கோட்டை கொத்தளச் சண்டைக்கு மாத்திரம்தான் பயன்படும். நித்தியப் போராட்டத்தில் துருப் பிடிக்கத்தான் செய்யும்.

ஜனநாயக முறையில் எதுவும் அமையாத வரையில், பொறுப்பற்ற சர்க்காருக்குக் கொண்டாட்டம். வைஸிராய் நிர்வாக சபை, பிரதம பூசாரிகளின் கூட்டமாயிருக்கிறது. பிறகு, யுத்தப் பிரசாரக் கமிட்டிகள், அது இது என்று பல பூசாரிகளின் கோஷ்டிகள் அமைந்திருக்கின்றன. இவை போதா என்று பிரசுரகர்த்தர்கள் சங்கம், பத்திராசிரியர் மகாநாடு என்று நாமும் பல பூசாரிக் கூட்டங்களைச் சிருஷ்டிக்க வேண்டுமா? ராஜாங்கம்தான், ஜனப் பிரதிநிதித்துவத்தையே லட்சியம் செய்யாமல், ஜனங்களின் இயற்கையான தலைவர்களை உதாசீனம் செய்து, நடைபெற்று வருகிறது. வெவ்வேறுதொழில்களையும் சார்ந்தோராவது, 'கில்டு'கள் மாதிரி ஜனநாயக முறையில் சங்கங்களாய் அமையக் கூடாதா? அவர்களில் முகாமையாய் உள்ளவர்களும், சர்க்கார் போக்கையேதான் பின்பற்றவேண்டுமா?

தண்ணீரிலே யிருக்கிறது முதலையின் பலம். ஜனங்களின் மூட நம்பிக்கையிலே யிருக்கிறது பூசாரிகளின் பலம். இன்ப துன்பங்கள் தராசுமுனைபோல் சமமாய் நின்றுகொண்டு, முன்னும் பின்னுங் கோணாது இயக்கமற்ற வாழ்விலேதான் மூட நம்பிக்கைகள் நிலைத் திருக்கும். இன்று வாழ்க்கையின் ஒவ்வொரு துறையும், கலங்கி அதிர்ச்சி அடைந்து வருகிறது. மீன் பிடிக்கும் கொக்கைப்போல் கண் மூடி வாழ்ந்துவரும் மனிதர்களை யன்றி, மற்ற எவரும் விழிப் படைந்துதான் வருகிறார்கள்.

இன்ப அனுபவங்கள், போகப் புலன்களுக்குத் திருப்தி தந்து, உன்னத உணர்ச்சிகளின் ஊற்றுக் கண்ணை அடைத்து, இதயத்தை மரத்துப்போகச் செய்யலாம். ஆனால், துன்பங்கள் அப்படியல்ல. துன்பத்தின் பரிசு கண் விழிப்பு; அறிவுப் பிரகாசம்; ஆவேச எழுச்சி. ஜனங்களின் துன்பங்கள் வரவர அதிகரித்து வருகின்றன. அது எங்கே கொண்டுபோய்விடும் என்று யார் சொல்ல முடியும்?

காலம் மாறி வருகிறது; நாம் எண்ணுவதைவிட வேகமாய் மாறிவருகிறது. உலகெங்கும் ஜனங்களின் வாழ்க்கை நிலைமைகள் மாறி வருகின்றன; அதற்கேற்ப வாழ்க்கை முறைகளும் மாறி வருகின்றன. ''யுத்தத்துக்கு முன்னே, பல அதர்ம குணங்களை நாம் புகழ்ந்துகொண்டிருந்தோம். பணம், மோசடியால் வந்த கீர்த்தி, முரட்டுத்தனம், வாய்ச்சாலக்கு ஆகியவைகளைப் புகழ்ந்தோம். கோடீசுவரர்களும், குஸ்திப் பயில்வான்களும், சங்கீத கேஸரிகளும், விளம்பரதாரிகளுமே நம் வீரர்களா யிருந்தார்கள். அதெல்லாம் இன்று மாறிவிட்டது. யார் தேசத்துக்கு மிக அதிக சேவை செய்கிறார்களோ, அவர்களையே நாம் இன்று மதிக்கிறோம்'' என்று லார்டு எல்டன் என்பவர் ஒரு கட்டுரையில் கூறுகிறார். இதெல்லாம் இங்கிலாந்தைப் பற்றி. இதைப் போலவேதான், சுதந்தரமுள்ள நாகரிகமான வேறு எந்த நாடும் இப்போது மாறி வந்திருக்கும். இந்தியாவிலோ மனித மதிப்பு, என்றையும் விட இன்று மிகவும் கீழான நிலையி லிருக்கிறது. ஆனால், இது நீடித்திராது; நீடித்திருக்க முடியாது.

பூசாரிகளுக்கு மனித மதிப்புக் கிடையாது. சாமியை வரங்கேட்கும் வரையில்தான் பூசாரிகளுக்கு இடமுண்டு. சர்வ போகங்களுக்கு மிடையே குறைகள் ஒன்றாய் இரண்டா யிருந்தால், சாமியிடம் வரங் கேட்கலாம். குறைகளின் வெள்ளத்திலே மூழ்கும் மனிதர்களுக்கு வரங் கேட்கும் தேவையே கிடையாது. பிரளய காலத்திலே, சாமி க்ஷீராப்தியில் மிதக்கச் சென்றுவிடுவார். பூசாரிகளுக்கு ஒண்டவும் இடங்கிடைக்காது. ஐயோ! இந்தப் பூசாரிகள் என்றாவது அதை நினைப்பதுண்டா?

ஓவியர் உபத்திரவம்

ஓவியர்களால் நேரும் ஓர் உபத்திரவம் என்ன என்றால், என் படத்தில், தங்கள் சாயலையே அதிகமாய்த் தீட்டி விடுகிறார்கள். நான் குடிகாரன் போல் தோன்றும் காரணம் இது தான்.

— பெர்னாட் ஷா

மகாகவி பாரதி

வ. ரா.

லோகமான்ய திலகர் ஒன்று சொல்லுவ துண்டு. தேசபக்தன் ஒருவன் தீவிரவாதியாகவோ, அல்லது புரட்சிக்காரனாகவோ தனது வாழ்க்கையை துவக்கி, தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றியைக் காணாமல் போனால், அவன் மிதவாதியாகிவிடுகிறான்; அல்லது ராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்து, வெள்ளக் கஷ்ட நிவாரண வேலையிலும் பஞ்ச நிவர்த்தி வேலையிலும் ஈடுபடுகிறான் என்று திலகர் மனக் கிலேசத்தோடு சொல்லுவதுண்டு. இந்தக் கோஷ்டியைப் பாரதியார் சேர்ந்தவரல்ல.

பாரதியார் ஆத்ம விசாரம் செய்யும் கழைக்கூத்தாடி அல்ல. அவர் சாகா வரம் கேட்டால், அது இந்த மண்ணில் கீர்த்தியோடு வாழவேண்டும் என்பதற்காகத்தான். விரைவில் பரலோக யாத்திரை சித்திக்க வேண்டும் என்று ஜபம் செய்துகொண்டிருக்கும் சோம்பேறிகளின் கூட்டத்தைக் கண்டால், பாரதியார் சீறிவிழுவார். தனி ஒருவனுக்கு உணவில்லை யெனின், ஜகம் இருப்பது எதற்காக என்று கேட்ட பாட்டை, பாரதியாரின் வாழ்க்கையில் கடைசிப் பாட்டாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தப் பாட்டிலே, அசட்டு வேதாந்தம் எதுவுமில்லை. 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்று பிரகடனம் செய்யும் பாரதியார், தோல் ஆண்டி அல்ல, வையத் தலைமையை வேண்டி நின்ற பாரதியாரை, சிலர் அர்த்தமில்லாமல் வேதாந்த வீரர்களின் கோஷ்டியில் சேர்ப்பது வருந்தத் தக்கது.

பாரதியார் கடைந்து எடுத்த தேசபக்தர். அவருக்குக் கலைகளில் அபரிமிதமான நம்பிக்கை. "கலைப் பெருக்கும் கல்விப் பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடரெல்லாம், விழிபெற்றுப் பதவிகொள்வார்" என்று கணீர் என்று பாடியிருக்கும் பாட்டில் அசட்டு வேதாந்தம் ஏதேனும் தொனிக்கிறதா?

வேதாந்தத்தின் அடிப்படையான கொள்கையான மாயையைக் கண்டால், பாரதியார் சீறி விழுவார். 'நடுக் கூடத்தில், உன்னோடு உரையாடிக்கொண்டிருக்கும் உன் மனைவி மாயையா? தங்க விக்கிரகங்களைப்போல விளையாடிக் கொண்டிருக்கும் உன் குழந்தைகள் மாயையா?' என்று பாரதியார் ஆத்திரத்தோடு கேட்கிறார். எனவே, பாரதியாரை வேதாந்தி என்று அழைப்பது பெரும் பிழையாகும்.

பாரதியாருடன் வாழ்ந்து பழகி, அவருடைய கவிதைகளின் ரசனையைப் பூரணமாகப் பருகிய அறிஞர்களுள் வ. ரா. மிக முக்கியமான ஒருவர். **மகாகவி பாரதியார்** என்ற தலைப்புடன் பாரதியாரின் சரித்திரம் ஒன்று அவர் எழுதியுள்ளார். 'சக்தி' பிரசுரங்களில் ஒன்றாக இது அச்சாகி வருகிறது. அதில் இருந்து எடுத்த ஒரு பகுதி இந்தக் கட்டுரை.

மேலும், இறுதியில், இந்த நாட்டில் ஒருவர் வேதாந்தியாகப் பழுப்பது இந்நாட்டுப் பண்புக்கு ஒவ்வினது என்று சிலர் சொல்லுகிறார்களே, அதனாலே எத்தனையோ விபரீதங்கள் விளைந்து விட்டன. தான் எடுத்த காரியத்தில் வெற்றி பெறாமல் போய், தோல்வியையே, அடுத்தடுத்து அனுபவிக்க நேர்ந்தால், அப்பொழுது, ஒவ்வொருவனும் தோல்வி மனப்பான்மை என்ற பேய்க்கு ஆளாகிறான். அந்தப் பேயின் மூலமாகத்தான், அவன் வேதாந்தியாகப் பழுக்கிறான் போலும்!

ஒன்று அகப்படாததால் ஏற்படக்கூடிய விரக்திக்கு, ஒழிவு என்று பெயர் கொடுக்க முடியாது. அது, 'சீ! இந்தத் திராட்சைப் பழம் புளிக்கும்' என்று, கிடைக்காத பழத்தைப் பற்றி நரி விரக்தியோடு பேசின கதையைப்போன்றதுதான். ஒன்றைப் பூரணமாக அனுபவிப்பதன் மூலமாக ஏற்படும் ஒழிவுதான் உண்மையான ஒழிவு.

நமது நாட்டில், தரித்திரம் அதாவது எளிமையான வாழ்க்கையும் விரக்தியும்தான் நமது நாகரிகத்தின் அடிப்படைகள் என்றும் அப்பேர்ப்பட்ட நாகரிகத்துக்கு உலகத்திலேயே ஈடு எதுவும் சொல்ல முடியாது என்றும், மேடைப் பிரசங்கிகள் சொல்லுவது தவறு. வெள்ளைக்காரர்கள் செல்வ நாகரிகத்தையும் சுகபோகக் கருவிகளையும் இந்நாட்டுக்குக் கொண்டுவந்ததும், நமது பண்டை எளிமை வாழ்க்கையும் விரக்தியும் எங்கேயோ பறந்துபோய்விட்டன.

எனவே, விரக்தியை, இந்நாட்டு மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வில்லை யென்றும் அது அவர்களின் பேரில் கட்டாயமாகச் சுமத்தப்பட்டதால், திக்கற்ற நிலைமையில், அதை அவர்கள் தலைமுறை தலைமுறையாகத் தூக்கித் திரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும் தக்க சமயம் வந்தவுடன், விரக்தி வழியை உதறித் தள்ளிவிட நம்மவர்கள் தயாரா யிருந்தார்கள் என்பதும் இப்பொழுது வெட்ட வெளியாகிவிட வில்லையா?

எல்லாம் மாயை என்ற தத்துவத்தின் மூலமாக, இந் நாட்டு மக்கள் மதிமயக்கம் கொண்டு, பல நூற்றாண்டுகளாக, இகலோகப் பிரவிருத்திகளுக்கும் பரலோக விரக்திக்கும் ராஜி செய்துகொண்டு வாழ எத்தனித்து, அது முடியாமல் போய், மனந்தடுமாறி, செய்யும் காரியம் இதுதான் என்று தெரிந்துகொள்ள வகையறியாமல், பராதீனப்பட்டுப்போய், சுதந்திரத்தை இழந்து வாழ்கிறார்கள். இது சரித்திரம்.

எனவே, தோல்வி மனப்பான்மையின் மூலமாக, யாரும் வேதாந்தியாகப் பழுக்க வேண்டாம் என்று, ஹிந்துக்களின் பல நூற்றாண்டு அடிமை வாழ்வு அவர்களை எச்சரிக்கை செய்கிறது. விதுரன் திருதராஷ்டிரனைப் பற்றிச் சொன்னதைப் போல, 'அண்ணே! கேட்கும் காதையும் இழந்துவிட்டால்—!'

பாரதியார் ஆஷாடபூதி வேதாந்தியே அல்ல. அவர் மகாகவி. அவர் இணையற்ற கவிஞன். உலகத்தை ஆண்டு அனுபவிக்க வந்த உத்தமன். எனவே, சிலர் செப்பிடுவித்தை செய்து, பாரதியாரை வேதாந்தச் சிமிழிலே போட்டு அடைக்கவேண்டாம்.

✲

கரப்பான் வியாதி தீர

எக்ஸ்-மா (X-MA)வை

உபயோகிக்கவும்

மற்றொரு சமீபகால நற்சாட்சி பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

தங்கள் அரிய எக்ஸ்-மா ஆயின்ட்மெண்டால் குணமடைந்து, நான் இதை பம்பாயிலுள்ள ஒரு ஸ்திரீக்கு வெகுவாக சிபார்சு செய்கிறேன். பம்பாயில் உங்களுக்கு பிராஞ்சு இருந்தால், அவளுக்கு ஒரு புட்டி கொடுக்கும்படி செய்யவும். இல்லையேல் உங்களது மதராஸ் ஆபிஸிலிருந்து அவளுக்கு அனுப்பவும்.

உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)..

உபயோகிக்கும் விதம்

காலையிலும் மாலையிலும் சொறி கண்டவிடத்தில் நன்றாகத் தடவ வேண்டும். சொறிமீது காற்றுப் படாமலிருக்க மெல்லிய துணி போட்டு மூடுவது நலம்.

இந்த மருந்து தயாரிப்பவர்கள்

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

ஒன்றுதான்

கரப்பான் சொறி போன்ற சரும வியாதிகளுக்குத் தக்க மருந்து ஸ்பென்ஸரின் எக்ஸ்-மாதான். இது கீழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றது. எல்லா நாடுகளிலும் அதை வாங்கியவர்கள் பரம திருப்தி அடைந்துளர். ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்த வண்ண மிருக்கின்றன. அதன் அபார விற்பனையே அதன் குணத்திற்குச் சான்று. இதற்குமுன் இதை 'ஸ்மித்ஸ்' அன்குவென்டம் டெடெர்ஜென்ஸ்' (Smiths unguentum Detergens) என்றழைத்தார்கள். சரும வியாதிகளின் நிவாரணியான இதற்கிணை வேறெதுவுமில்லை. 'கரப்பான், வண்ணான்சொறி, எரிநிமா போன்ற சரும வியாதிகளுக்கு எரிச்சல் கொடாத மருந்து எக்ஸ்-மா ஒன்றுதான்.

கைக்கு அடக்கமான புட்டி

ரூ. 1-4-0

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள் கோரப்படுகின்றன:

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமி.,

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ், சென்னை

SPENCER & CO., LTD., MADRAS.

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் :

டி. எஸ். ஆர். & கோ

கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி, மதராஸ்

தமிழ் நாடு ஏஜெண்டுகள்:—

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் : : மேலக்கோபுர வீதி - மதுரை

பெற்றோர் இன்பம்



பாரதிதாசன்

கூடத்து நடுவில் ஆடும் ஊஞ்சலில்
சோடித்து வைத்த துணைப்பொற் சிலைகள்போல்
துணைவனும் அன்புகொள் துணைவியும் இருந்தனர்!
உணவு முடிந்ததால், உடையவள் கணவனுக்குக்
களிமயில் கழுத்தின் ஒளிநிகர் துளிரும்,
சுண்ணமும், பாக்குத் தூளும் கமழும்
வண்ணம், மடித்து மலர்க்கையால் ஏந்தினள்.
துணைவன், அதனை மணிவிளக் கெதிரில்
மாணிக்கத்தை வைத்தது போல் உதடு
சிவக்கச் சிவக்கத் தின்று கொண்டிருந்தான்.
ஆயினும் அவன்உளம் அல்லலிற் கிடந்தது.

"கேட்டான் நண்பன்; சீட்டு நாட்டின்றி
நீட்டினேன் தொகையை! நீட்டினன் கம்பி!
எண்ணூற் றைம்பது வெண்பொற் காசுகள்
மண்ணாயின என் கண்ணே" என்றான்.

தலைவன் இதனைச் சாற்றி முடிக்குமுன்
ஏகாலி அவர் எதிரில் வந்து
கூக்கூ என்று குழறினன்; அழுதான்.
உழைத்துச் சிவந்ததன் உள்ளங் கைகள்
முழுக்க அவன்து முகத்தை மறைத்தன.
மலைநிகர் மார்பில் அலைநிகர் கண்ணீர்

அருவிபோல் இழிந்தது. "தெரிவி அழாதே
தெரிவி" என்று செப்பினன் தலைவன்.

"நூற்றிரண் டுருப்படி நூல் சிதையாமல்
ஆற்றில் வெளுத்துக் காற்றில் உலர்த்திப்
பெட்டி போட்டுக் கட்டி வைத்தேன்.
பட்டாளத்தார் சட்டையும் குட்டையும்
உடன் இருந்தன. விடிந்தது பார்த்தேன்.
உடல் நடுங்கிற்றே. ஒன்றும் இல்லை"
என்று கூறினன் ஏழை ஏகாலி.

அல்லல் மலிந்த அவ்விடத்தில்,
வீட்டின் உட்புறத்து விளைந்ததான
இனிய யாழிசை கனிச்சாறு போலத்
தலைவன் தலைவியைத் தழுவ லாயிற்று.

"நம் அரும்பெண்ணும் நல்லியும் உள்ளே
கும்மாளமிடும் கொள்ளையோ" என்று
தலைவன் கேட்டான். தலைவி "ஆம்" என்று
விசையாய் எழுந்து வீட்டினுட் சென்றே
இசையில் மூழ்கிய இருபெண் களையும்
வருந்தப் பேசி வண்தமிழ் இசையை
அருந்தா திருக்க ஆணை போட்டாள்.

தலைவன்பால் வந்து தலைவி குந்தினள்.
மகளொடு வீணை வர்சித் திருந்த
நாலாவது வீட்டு நல்லி எழுந்து
கூடத்துத் தலைவர் கொலுவை அடைந்தாள்.
"என்ன சேதி?" என்றான் தலைவன்.
நல்லி ஓர்புதுமை நவில லுற்றாள்:

"'கடலின் அலைகள் தொடர்வது போல
மக்கள் சந்தைக்கு வந்து சேர்ந்தார்கள்.
ஆடவர் பற்பலர் அழகுப் போட்டி
போடுவார் போலப் புகுந்தனர் அங்கே!
என்விழி அங்கொரு பொன்மலர் நோக்கி
விரைந்தது பின்அது மீளவில்லை.
பின்னர் அவன்விழி என்னைக் கொன்றது;
என்னுளம் அவனுளம் இரண்டும் பின்னின.
நானும் அவனும் தேனும் சுவையும்
ஆனோம்-இவைகள் அகத்தில் நேர்ந்தவை.

மறுநாள் நிலவு வந்தது கண்டு
நல்லிக்காக நான், தெருக் குறட்டில்
காத்திருந்தேன்; அக்காளே வந்தாள்.
தேனுள் வீட்டின்'எண்' தெரிவி என்ருன்.
நான்கு-எனும் மொழியை நான் முடிக்குமுன்,
நீயா என்று நெடுந்தோள் தொட்டுப்
பயிலுவ தானுன் பதட்டன் என்றன்
உயிரில் தன்உயிர் உருக்கிச் சேர்த்து
மறைந்தான்' என்று மங்கை என்னிடம்
அறைந்தாள். உம்மிடம் அவள் இதைக் கூற
நாணிஞள். ஆதலால் நான்இதைக் கூறினேன்"
என்று நல்லி இயம்பும் போதே,
இன்னலிற் கிடந்த இருவர் உள்ளமும்
கன்னலின் சாற்றுக் கடலில் மூழ்கின.

"நல்லியே நல்லியே நம்பெண் உன்னிடம்
சொல்லியது இதுவா? நல்லது நல்லது.
பெண்பெற்ற போது பெருமை பெற்ருேம்
வண்ணமேனி வளர வளர, எம்
வாழ்வுக்கு-உரிய வண்மை பெற்ருேம்;
ஏழ்நரம்பு கொள் யாழ்போல் அவள்வாய்
இன்ஞன் இடத்தில் என் அன்பென்று
சொன்னதால் இன்பம் சூழப் பெற்ருேம்.
என்மகள் உளத்தில் இருக்கும் தூயனின்
பொன்னடி தனில்எம் பொருளெலாம் வைத்தும்,
இரந்தும், பெண்ணை ஏற்றுக் குடித்தனம்
புரிந்திடச் செய்வோம் போ" என்றுரைத்தான்.

தலைவி சாற்றுவாள் தலைவனிடத்தில்:
"மலைபோற் சுமந்தஎன் வயிற்றில் பிறந்தபெண்
நல்லி யிடத்திற் சொன்னுள். இதனைச்
சொல்லும் போதில்என் செல்வியின் சொற்கள்
முல்லை வீசினவோ! முத்துப் பற்கள்
நிலா வீசினவோ! நீல விழிகள்
உலவு மீன்போல் ஒளி வீசினவோ!
நான் கேட்கும்பேறு பெற்றிலேன்" என்று
தேன் கேட்கும் வண்டெனச் செப்பினுளே!
மகள் தன் மணுளனைக் குறித்ததில்
இவர்கட்கு இத்தனை இன்பம் வந்ததே!

✻

கடைசி அடகு

மஞ்சேரி ஈச்வரன்

இதயத்திலிருந்து புறப்படும் ரத்தக் குழாயைப் போல் நகரின் நடுவிலே தொடங்கி, பஸ்களும் டிராம்களும் கார்களும் மனிதர்களும் ஓயாமல் நடமாடிக் கொண்டிருக்கும் நீண்ட ராஜ பாட்டையாக விளங்கும் மவுண்ட் ரோடு. அதன் இரு புறங்களிலும் குறுக்கும் நெடுக்குமாய், நாடி நரம்புகளின் வலைப் பின்னல் மாதிரி, சிறுசிறு தெருக்களும் சந்துகளும் பரவிச் செல்லும். அவைகளிலே, சீர்குலைந்த வீடுகளும் அல்ப மண் குடிசைகளும், கட்டி தட்டிய கரு ரத்தம் போல் விகாரமாய் நிற்கும். அப்படிப்பட்ட ஒரு குடிசையின் திண்ணையில்தான், ரிக்காப்தாஸ் பதேமுல், தன்து அடகுக் கடை வியாபாரத்தை நடத்திவந்தான். கடை, ஒரு பெரிய தள்ளுவண்டி அளவுதான் இருக்கும். அங்கே, சாயம் போனதும் போய்க் கொண்டிருப்பதுமான பலவிதத் துணிகளும் பட்டுகளும் தொங்கும். ஒரு மூலையில், களிம்பேறிய மட்ட ரகமான பித்தளைப் பாத்திரங்கள் குவிந்திருக்கும். தூசி படர்ந்து, விரல்களின் வேர்வை பட்டு மங்கிய ஒரு கண்ணாடிப் பெட்டியிலே, பல தங்க வெள்ளி கில்ட் நகைகள், மூச்சு விட முடியாமல் திணறுவதுபோல் சாம்பல் பூத்துக் கிடக்கும்.

அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குப் பின்னே, பதேமுல், ஒரு மொகலாயச் சக்கரவர்த்தி மாதிரி, அங்குள்ள பண்டங்களையெல்லாம் ஆர்வத்தோடு கண்ணோட்டம் விட்டுக்கொண்டு அரியாசனம் வீற்றிருந்தான். அவன் உடம்பு, பிரம்மாண்டமான ஒரு பீப்பாயைப்போல் ஒரே வயிறுமயமா யிருந்தது. அழுக்கேறிய ஒரு பஞ்சணை மேல், அந்தச் சரீரம் சாய்ந்துகிடந்தது. நெட்டையான தூண்களைப்போல் நிமிர்ந்து நின்ற தலையணைகள் மீது, குடுக்கை போன்ற அவன் தலை சாய்ந்திருந்தது. இங்கே ஒரு சங்கதியை மறந்துவிடக்கூடாது: அவன் சரீரம் நாள் பூராவும் சலனமற்று அசையாத மலை போல் கிடந்தாலும், இ. பி. கோ. 411-ஆவது பிரிவு மாத்திரம் அதற்கு எந்நேரமும் பிரஞ்ஞையுண்டு; ஒரு போலீஸ்காரன் அழுத்தமாக நடை போட்டுக் கொண்டு ஜோராய்க் கண்ணைச் சிமிட்டிய வண்ணம் எந்தச் சமயத்திலே உள்ளே வந்தாலும், பதேமுல்லின் சரீரம், தன்னிச்சையாகவே துள்ளி யெழுந்து, புரண்டு சலனமடையத் தொடங்கிவிடும். புள்ளி நிறைந்த பாம்புபோல், சுருள் சுருளாய் வளைந்து உயர்ந்த பதேமுல்லின் தலைப்பா, அவன் தலையின் சுபாவத்தை விளம்பரம் செய்யும் சின்னம்போல் விளங்கியது.

ரிக்காப்தாஸ் பதேமுல், மார்வார் தேசத்திலிருந்து வந்தவன். மார்வாரிகளுக்குப் பணம் என்றால் உயிர். மார்வாரியின் பணத்தை வாங்கிச் செலவழிப்பதிலே, சென்னை வாசிகளுக்கு

'கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கம்பன பாட்டில்லை என்கிறார்கள். யார் பாடினால் என்ன? கடன்படும் வேதனை தாள முடியாததாகும். அதிலும் இந்த ஏழைத்தாயின் நிலைக்கு இரங்காத உள்ளம், பேய் உள்ளமாகத்தான் இருக்கமுடியும். அந்த மார்வாரியின் உள்ளம் அப்படிப்பட்டதுதானே?

ஒரு பைத்தியம். மார்வாரி கடன் கொடுப்பது அநியாய வட்டி வாங்கவே என்று அறிந்தும், கண் தெரிந்த குருடர் போல் அவனிடம் இவர்கள் விழுகிறார்கள். பதேமுல்லின் வாடிக்கைக்காரர்களோ, பெரும்பாலும் பெண்கள்தான்.

2

மப்பும் மந்தாரமுமான காலை நேரம். சிலு சிலு என்று காற்று வீசிக் கொண்டிருந்தது. தெருவிலே போவோரைத் தான் அது வாட்டியதே ஒழிய, மார்வாரியிடம் அதன் ஜம்பம் சாயவில்லை. சற்றுநேரத்துக் கொருதரம்அவன் தன் தோளைக் குலுக்கிக் கொண்டான். "ஏதோ உடம்பு விறைச்சுப் போற மாதிரி தான் வீசுது இந்தக் காற்று! ஆனால், துளிக் குளிரைக்கூடக் காணோமே!" என்று பரிகசிப்பது போல இருந்தது அவன் முகத் தோற்றம். வடக்கே அவன்தேசத்திலே, அப்பாடா, எப்படியிருக்கும் குளிர்! இங்கேயோ, ஒரேபுழுக்கந்தானே! புழுக்கம்தான்—ஆனாலும், அத்தனைக் கத்தனை பணம் அல்லவா வருகிறது! இதையெல்லாம் நினைத்தவுடன், அவனது குரூப உடம்பு, பற்றி எரியும் முட் புதர் போல் கனன்றது; அவனுடைய அடகுக் கடை, அந்தத் தீ கனியும் சிறு காட்டைப்போல் ஜொலித்தது.

அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டேயிருக்கும் பூனைக் கண்களைப் படைத்த பதேமுல், பூனை மாதிரியே, தெருவை நோக்கினான். "இன்னிக்கு ஒருத்தனைக் கூடக் காணோமே?" என்று அவன் மனது முணுமுணுத்தது; அந்த எண்ணம், அல்பத்தனமான அவன் மனதிலிருந்து புறப்பட்டு மெல்ல வயிற்றுக்குள்ளே போய்ப் புகுந்து வேதனை செய்வதுபோல் தோன்றியது. ஆனால், அந்த வேதனை

........ஹோ என்று அலறிக்கொண் டிருந்தாள் ஒரு பெண்.

நெடுநேரம் அங்கே தங்கவில்லை. பதேமுல்லின் வயிற்றிலே, வேதனைகளுக்கு இடமேது?

வெளியே, மேகம் அடர்ந்து மப்பும் மந்தாரமுமாய்ச் சூரியனைச் சூழ்ந்து மறைத்தாலென்ன? பூமியிலே மற்றொரு சூரியன் உதயமாகி விட்டான். பதேமுல்லின் முகம்தான் அந்தச் சூரியன். அது மலர்ச்சி யடைந்தது. அதன் நெற்றிச் சுருக்கங்கள் ஒளிவிட்டன. யாரோ ஒரு பெண், வெகுவேகமாக இவனது கடையை நோக்கி வருவதை, பதேமுல் பார்த்து விட்டான். அவள் கைகளை ஏன் சேலைமடிப்புக் குள்ளே ஒளித்துக்கொண்டிருந்தாள் என்று அவனுக்குத் தெரியும்! அவள் முகம் ஏன் பாக்கைப் போல் சுண்டியிருந்தது, கண்மணிகள் ஏன் வெளுத்துப் பஞ்சடைந்த விழிகளிலே குறுகிச் சுருங்கின, தாடை எலும்புகள் ஏன் கல்லைப்போல் கூர்மையாய் மின்னின என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்.

அந்தப் பெண், தன் சேலையைத் தோளின் மேல் இழுத்து இறுக்கப் போர்த்துக் கொண்டாள். திண்ணை முனையிலே சார்ந்து நின்றாள். என்ன முடிவு செய்வது என்று தெரியாமல், ஏதோ யோசிப்பதுபோல் தோன்றினாள்; திக்கற்றவள் மாதிரி காணப்பட்டாள்.

"ரெண்டு ரூபா" என்று கண்டிப்பாய், ஒரே தீர்மானமாய்ச் சொன்னான் மார்வாரி. பின்பு, கத்திபோல் உதட்டைக் கூர்மையாய்ப் பிதுக்கிக் கொண்டு, "ரொம்ப மட்டமான தோடு இல்லே! வெறும் கண்ணாடிக் கல்லுக் கட்டியிருக்கு; பளபளப்பே இல்லியே" என்று முணுமுணுத்தான். அவன் குரல், இரும்பைவிடக் கடினமாயிருந்தது; அவன் முகம், ராட்சஸ பிம்பத்தைப் போல், துளியும் சலனமற்றிருந்தது.

பெண் பெருமூச் செறிந்தாள்; கொஞ்சம் கூடுதலாகக் கொடு என்று கடைசி முறையாகக் கெஞ்ச முயன்றாள். ஆனால், அவள் நா எழவில்லை. அவள் உள்ளம் வேதனையுற்று, எங்கேயோ அலைந்து கொண்டிருந்தது. அவள் முகத்தை மூடிக் கொள்ளவில்லை. சொல்ப துக்கமாயிருந்தால் அல்லவா அப்படி மூடிக்கொள்ளலாம்? நகருக்கு வெளியே, சின்னஞ் சிறு கூரைக் குடிசை ஒன்றில், ஆயுள் பூராவும் அசக்தனாகிப் படுத்துக் கிடக்கும் தன் புருஷனைப் பற்றி அவள் நினைத்தாள். அவன் ரோடு போடும் ஒரு கூலியாள். ஒரு நாள் ரோட்டில் ஊற்றுவதற்காகக் காய்ச்சிய தார், அவன் மீது பட்டுப் பொசுக்கி விட்டது. நகர சபையார் அவனிடம் கருணை கடாட்சம் செலுத்தி, 'முட்டாள் பயல்' என்று ஆசீர்வதித்து, ஏதோ கொஞ்சம் உபகாரதனம் அளித்தார்கள். என்னவோ தருமம் கொடுப்பதாகவே, அதை அவர்கள் மதித்தார்கள். ஏனெனில், குற்றம் அவன் பேரிலே தானாம். அவர்கள் கொடுத்த அல்பக் காசோ, தார் பூசிக் கறுத்தது போல் களங்கமுற்றிருந்தது. இவள், அந்தக் காசை, தன் கண்ணீரால் கழுவினாள்; என்றாலும், மார்வாரியின் காசைப் போல், அது குட்டி போடவில்லை. ரோட்டு வேலையை அவள் தொடர்ந்து செய்து வந்தாள். அப்போதெல்லாம், அவள் உள்ளத்தில் ஒரு பாதி, குடிசையிலே, ஆயுள் பூராவும் அசக்தனாய் விழுந்து கிடக்கும் தன் புருஷனிடம் பதிந்திருக்கும்; மற்றொரு

பாதி, சாலையோரத்தில் தொங்கும் ஒரு பழங் கந்தைத் தூளியிலே, சதா விழிப்புடன் அன்பு பொங்கப் பதிந்திருக்கும். ஆனால், அந்தத் தூளி, சென்ற சில நாட்களாய்ச் சாலையில் தொங்கவில்லை. ஏனெனில், கனத்த கவலையும் பயமும் தோய்ந்து, சஞ்சலம் நிறைந்தன இந்த நாட்கள்.

“ஏளு குளந்தைங்க பிறந்திச்சு எனக்கு. இவன் ஒருத்தந்தான் மிச்சம்” என்று கதறிய அவள், சட்டென்று நின்றாள். இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது, அவள் உடம்பு விசித்திரமாய் நடுங்கியது. அவைகளைக் குழந்தைகள் என்றே சொல்ல முடியாது; வளர்ந்து வளர்ந்து வாலிபத்திலே செத்தன. அவைகள், அவளுடைய சதையோடு சதையாய் வளர்ந்த ஏதோ கட்டிகள் போல் அவளுக்குத் தோன்றின; பாழுந் தெய்வம், அவைகளைச் சுட்டுப் பொசுக்குவதிலே ஓர் ஆனந்தம் அடைந்தது! அவள் மீண்டும் தொடர்ந்தாள்: “அவள் ரொம்ப மோசமாயிட்டாள்; வலி பொறுக்காமெ என்ன கத்துக் கத்தினாள்!” இங்கே அவள், திணறி நின்றாள்; அவள் தேகம் காற்றைப்போல் வெடவெட என்று ஆடியது. பின்பு, அவள் தங்கள் குல தெய்வத்தின் பெயரை உச்சரித்து, “என்னால் அதைத் தாங்கமுடியலே, ஐயோ! பெரிய மனசு பண்ணி நாலு ரூபாயாவது குடு” என்று கெஞ்சினாள்.

அவளுடைய உருக்கமான குரல் எழுப்பிய சோக அலைகள், மார்வாரியின் இதயப் பாறையிலே பளீர் என்று மோதின; ஆனால், அடுத்த கணம் அவை மெல்ல மெல்ல மலின மடைந்து, இறுதியிலே ஓய்ந்து அடங்கி விட்டன. பல குழந்தைகளை இழந்த துக்கத்தால் ஏக்கம் மிகுந்து, இதுவாவது தக்காதா என்று இரங்கிய ஒரு தாயின் பேராவல், அவள் முகத்திலே ஒளி செய்தது.

“வேணுமானா ரெண்டு ரூபா வாங்கிக்கோ. இல்லாதபோனா, பணமே கிடையாது” என்று சீறினான் மார்வாரி. அந்தத் தோடுகளை அவள் முன்னே வீசி எறிந்தான். தன் வேலையைக் கவனிக்கப் போகிறவனைப் போல், தன்னுடைய கந்தல் ஏடுகளையும் புழுதி படிந்த கணக்குகளையும் புரட்டத் தொடங்கினான்.

தோடுகள் இரண்டும் அநாதைக் குழந்தைகளைப்போல் கீழே கிடந்தன. பெண் ஒரு நிமிஷம் கண்ணை மூடிக்கொண்டாள். அவள் மூச்சுத் திணறியது. தேகம் முழுதும் ஒரே வேதனையால் துடித்தது. பின்பு, அவள், அவன் போட்டிருந்த இரண்டு ரூபாய்களையும் வெடுக்கென்று

சந்திரமண்டலத்தில் தங்கம்

அமெரிக்க ஜனாதிபதியாகிய குரூகர் என்பவருடன், அவருடைய நண்பர் ஒருவர் ஒருமுறை பேசிக் கொண்டிருந்தபோது, “சந்திர மண்டலத்தில் தங்கம் இருக்கிறதா, இல்லையா என்பது சரியாகத் தெரியவில்லையே” என்றாராம்.

ஜனாதிபதி சற்றும் யோசிக்காமல், “சந்திரமண்டலத்தில் தங்கம் இருக்காதென்பது நிச்சயம். இருக்குமானால், ஆங்கிலேயர்கள் இதுவரை அதைக் கைப்பற்றாமல் விட்டு வைத்திருப்பார்களா?” என்றார்.

தூக்கிக்கொண்டு, ஓரே ஓட்ட மாய்த் தெருவைக் கடந்தாள்.

ரிக்காப்தாஸ் பதேமுல், அந்த அழகான அடகு நகைகளைக கொஞ்சுவதுபோல தன் கைக வால் தடவிக்கொடுத்தான். அடுத்த தடவை போடப்போகும் ஏலத்தைப் பற்றி அவன் மனதில் எழுந்த கற்பனைக் காட்சி, அவன் கண் முன்னே ஒரு திரைபோல் மிதந்தது.

அதே நாள் மாலையில், ஒரு ஹக்கீமின் அறையில், செத்த குழந்தை ஒன்றின் முன்னே உட்கார்ந்து, ஹோ என்று அலறிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். ஹக்கீம் இரு காரியங்களுக்குப் புகழ்பெற்றவர்: அவர் வைத்தியத்தில் நிபுணர்; புலவு தின்பதிலும் அதேபோல் நிபுணர். அவருடைய இந்த இரண்டு புகழ்களில், எது இப்போது வலுத்தது? இவரை நம்பி ஒவ்வொரு தாயும், பெற்ற வயிறு நொந்து, இவரது வைத்தியத் திறமையைப் பழிக்கப் பழிக்க, முன்னையும் விட இனிப்பாய்த் தயாரித்த தம் ஆசைப் புலவை, ஹக்கீம் அதிகமதிகமாய் ருசித்துத் தின்னும் வழக்கம்தான் வலுத்தது.

✲

யார் சொல்வதைக் கேட்பது!

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னால், மானுவேல் குவெஸான் என்பவர் பிலிப்பைன் தீவுகளின் ஜனாதிபதியாயிருந்தார். மேல்நாட்டு டாக்டர்கள் சொல்லும் வைத்திய முறைகள், ஒன்றுக்கொன்று எவ்வளவு மாறுபடுகின்றன என்பதை அவர் கேலி செய்கிறார்:

"நான் பிலிப்பைனை விட்டுப் புறப்பட்டபோது, போதை மிக்க பானம் எதையும் குடிக்கக் கூடாது என்று டாக்டர்கள் கூறினார்கள். நான் ஜாவாவுக்குப் போனதும், ஒரு டம்ளர் பீர் சாப்பிடுவதால் கெடுதல் எதுவும் நேராதென்று அங்கிருந்த டாக்டர் கூறினார். நான் பாரிசுக்குப் போனதும் மற்றொரு டாக்டர் என்னைப் பார்த்து, 'நீர் பீர் சாப்பிடக்கூடாது; ஒயின் சாப்பிட வேண்டும்' என்றார். நான் நன்றியறிதலுடன் ஒயின் குடிக்கத் தொடங்கினேன். பிறகு, ஒரு பெரிய பிரெஞ்சு டாக்டர் வந்து 'நீர் ஷாம்பேன் மதுவையே பருக வேண்டும்' என்றார். நான் கொஞ்ச காலம் ஷாம்பேன் மதுவையே குடித்துக் கொண்டிருந்தேன். அப்புறம் நான் அமெரிக்காவுக்குப் போனேன். 'ஒயினையோ பீரையோ சாப்பிடாதீர்கள். விஸ்கி மாத்திரம் சாப்பிடுங்கள்' என்று அமெரிக்க வைத்தியர்கள் சொன்னார்கள். ஆகையால், இப்போது நான் ஏதாவது ஒரு பானம் பருக வேண்டும் என்று நினைத்தால், எந்த டாக்டருக்குக் கீழ்ப்படிவது என்பதை முடிவு செய்தால் போதும்."

நடு நிலைமையின் கதி

லயோனல் பீல்டன் என்ற ஆங்கிலேயர், இந்திய ரேடியோ கண்ட்ரோலராக இருந்தார். அவருக்கு இந்திய தேசீயத்திலே அநுதாபம் உண்டு. அவர் பலமுறை அந்த வேலையை விட்டுப் போக விரும்பினார். இது சம்பந்தமாக, ஒருமுறை அவர் காந்திஜியுடன் பேசிக் கொண்டிருந்த போது, காந்திஜி அவரைப் பார்த்து, "நீங்கள் இந்த வேலையை விட்டு விட்டு இங்கிலாந்துக்குப் போவதுதான் நலம். இங்கே இருப்பதாயிருந்தால், ஒன்று சர்க்கார் பக்கமாகவோ அல்லது ஜனங்கள் பக்கமாகவோ இருக்க வேண்டியதாயிருக்கும்" என்றார். பீல்டன் சிரித்துக் கொண்டே, "ரேடியோ வேலையைப் பொறுத்த வரையில், நடுநிலைமையாக இருந்து, இருதரப்புக்கும் நன்மை புரியவேண்டும்" என்றார். "அப்படியானால் இருதரப்பிலுமிருந்து உங்கள்மேல் கல்லைத் தான் எறிவார்கள்" என்றார் காந்திஜி.

அற்புத மருந்து

மருத்துவன்

ஆகாய விமானத்தில் பறந்து வந்தது அந்த மருந்து; ஆனால், அதற்குள், சதி கஸ்தூரிபாயின் நிலைமை மகாமோசமாகிவிட்டது. மருந்து கொஞ்சம் முன்னாலே வந்திருந்தால், அன்னை பிழைத்திருக்கவும் கூடும் என்று நினைப்போர் உண்டு. காலன் வாயில் சென்ற உயிரை மீட்கும் அமிர்தம் என்றும் அதை, சிலர் புகழ்கிறார்கள். அதுதான் பெனிஸிலின் என்ற அற்புத மருந்து. இந்த மருந்தின் கதை ஒரு விசித்திரமாகும்.

எச்சரிக்கை

ஓர் அற்புதமான நவீன மருந்தைப் பற்றிய செய்தி இது. மனித குலத்தை வருத்தும் கொடிய நோய்களை யெல்லாம் தீர்க்கக் கூடிய சஞ்சீவி இந்த மருந்து. ஆயினும், இது அனைவர்க்கும் கிடைக்கக்கூடிய அமோகமான அளவில் இன்னும் உற்பத்தியாகவில்லை. ஆகையால், இதைப் படிக்கும் எவரும் தங்கள் டாக்டர்களைத் தற்போது இதைக் கேட்காதிருக்க வேண்டுகிறோம். இந்த மருந்தின் ஆராய்ச்சி சம்பந்தமான படங்களை 271, 272, 273, 274-ஆம் பக்கங்களில் காணவும்.

பெனிஸிலின், மிகவும் நவீனமான ஒளஷதம். 1929-ஆம் வருஷம்தான், அதன் கதை ஆரம்பிக்கிறது. ஸயின்ஸ் உலகத்திலே, பல அகஸ்மாத் சம்பவங்கள், ஆச்சர்யமான பலன்களைத் தந்திருக்கின்றன. நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப் பட்டது, ஓர் அகஸ்மாத் சம்பவ பலன். பிளாட்டிங் காகிதம் ஓர் அகஸ்மாத் விளைவு. பெனிஸிலின் என்ற மருந்தும் அந்த இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான். ஆனாலும், இந்த அகஸ்மாத் சம்பவ காலங்களில், புத்தி தீட்சண்ய முள்ள விஞ்ஞானிகள், பக்கத்திலே யிருந்து கவனித்திராவிட்டால், இந்த அரிய விளைவுகளை நாம் இழந்திருப்போம். தெய்வம் வரங்கொடுக்கும்போது, அதைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள மனித அறிவு விழிப்பாயிருக்கவேண்டும். இல்லா விட்டால், தெய்வத்தின் வரம் பலிக்காது போய்விடும்.

டாக்டர் அலெக்ஜாந்தர் பிளெமிங் என்ற விஞ்ஞானி, லண்டன் யூனிவர்ஸிட்டியின் ரசாயன சாலையில்; 1929-ஆம் வருஷம் நோய்க்கிருமிகளைப் பற்றி ஆராய்ச்சிசெய்துகொண்டிருந்தார். ஒரு கண்ணாடித் தட்டில், கோடிக் கணக்கான நோய்க் கிருமிகளை வைத்து வளர்த்து, அவர் அவைகளைப் பலவிதப் பரிட்சைகள் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அந்தத் தட்டை வழக்கம்போல எடுத்து, பூதக் கண்ணாடி மூலம் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியபோது, நெளிந்து கொண்டிருந்த அந்த வெண்மையான நோய்க் கிருமிகளுக்கு நடுவே, ஒரு சிறிய பச்சைப் பொட்டு இருக்கக் கண்டார். இந்தப் பொட்டைச் சுற்றிலும் ஏதோ நீர் பொசிந்துகொண்டிருந்தது. என்ன ஆச்சர்யம்! இந்த நீரினால், அந்த நோய்க் கிருமிகள் மாய்ந்து கொண்டுமிருந்தன! இந்த அதிசயப் பச்சைப் பொட்டு எங்கே யிருந்து வந்தது? எப்படிப் பட்டது? இதை, அந்த டாக்டர், ஆராயத் தலைப்பட்டார். அந்தப் பச்சைப்

பொட்டு வேறொன்று மில்லை; நோய்க் கிருமிகளுக்கு நடுவே இயற்கையாய்ப் பூசணம் பூத்த ஒரு பூஞ்சக்காளத் துணுக்குத் தான் அது. அதிலிருந்து பொசி யும் நீர் நோய்க் கிருமிகளைக் கொல்லும் இயற்கை யுடையதா யிருந்தது. என்றாலும், அப்போது அதை லட்சியம் செய்வோரில்லை. காரணம் என்ன? இதுதான்:

சில வியாதிகள், நோய்க் கிருமிக ளாலேயே உண்டாகின் றன. அந்தக் கிருமிகளைக் கொல்ல, என்னென்னவோ ரசா யன மருந்துகளை, டாக்டர்கள் அந்தக் காலத்தில் பரிட்சித்துக் கொண் டிருந்தார்கள். நோய்க் கிருமிகளைச் சில ரசாயன மருந்து கள் வெற்றிகரமாய்க் கொல்லத் தான் கொன்றன. ஆனால், அவை நோயாளியையும் கூட வே கொன்று விட்டன. ஆகையால், ரசாயன மருந்துகளில் டாக்டர் களுக்கு நம்பிக்கை தளர்ந்து விட் டது. நோய்க் கிருமிகளால் வரும் வியாதிகளை, நோய்க் கிருமிகளின் மூலமே தடுப்பதற்கும் குணப் படுத்துவதற்கும் வேண்டிய வழி களை ஆராய்வதில் அவர்கள் அதிக மாய் ஈடுபட்டார்கள். அதனால் தான், இந்தப் பெனிஸிலின் என்ற பூசண வஸ்துவில் அவர் களுக்கு மோகம் விழவில்லை.

இவ்விதமாக, பத்து வருஷ காலம் பெனிஸிலின் என்ற அற்புத மான மருந்து அநாதரவாய் மறந்து கிடந்தது. 1940-ஆம் வரு ஷத்தில், ஆக்ஸ்போர்டு புரொப ஸர் ஹொவார்டு ப்ளோரி என்ப வர் மீண்டும் பெனிஸிலின் விஷ யத்தில் கவனம் செலுத்தினர்; ப்ளெமிங் அவர்களின் ஆராய்ச்சி யைத் தொடர்ந்து நடத்தினர். ப்ளோரியின் ஆராய்ச்சியில் பல அபூர்வமான பலன்கள் கிடைத் தன.

நோய்க் கிருமிகளைக் கொல் லும் ஏதோ ஓர் அம்சம் இந்தப் பூசணத்தில் இருப்பது வாஸ்தவம். ஆனால், அது எது என்று திட்ட மாய் அறிவதில் டாக்டர் ப்ளோ ரியும் அவருடைய சகாக்களும் ஈடு பட்டார்கள். பூசணத்தை அம்சம் அம்சமாக அலசிப் பிரித்து ஆராய்ந்ததில், மஞ்சள் பழுப்பு நிறப் பொடி ஒன்று காணப்பட்டது. அதுதான், நோய்க் கிருமிகளை அழிக்கிறது என்று, கடைசியாக அவர்கள் கண்டு பிடித்தார்கள். இந்த மஞ் சள் பொடியைச் சோதனைக் குழாய்களில், கிருமிகள் மீது பிர யோகித்துப் பரிட்சித்துப் பார்த்த போது, யாரும் பிரமிக்கத் தக்க ஓர் ஆச்சர்ய பலன் விளைந்தது; அதாவது, 16 கோடி மடங்கு அதிகமான நோய்க் கிருமிகளை ஒரே ஒரு மடங்குள்ள இந்த மஞ் சள் பொடி, வளர்ந்து பெருகா மல் தடை செய்வதை அவர்கள் கண்டார்கள்.

அடுத்தாற்போல் ஐம்பது எலி கள் மீது, ரண இசிவு விஷக் கிருமிகளைப் பிரயோகித்தார்கள். அவைகளில் இருபத்தைந்து எலி களுக்கு மட்டில், இந்தப் பெனி ஸிலின் என்ற மஞ்சள் பொடியை ஊட்டினார்கள். பெனிஸிலின் சிகிச்சை பெறாத 25 எலிகளும் 17 மணி நேரத்தில் எமலோகப் பிராப்தி அடைந்து விட்டன. இந்தச் சிகிச்சை பெற்ற மற்ற 25 எலிகளில், 24-தப்பிப்பிழைத்து விட்டன; ஒன்றே ஒன்றுதான் செத்தது.

1941-ஆம் வருஷம் பெனிஸி லினை, மனிதர்கள் மீதே பரிட்சித் துப் பார்க்க, டாக்டர் ப்ளோரி சித்தமாகி விட்டார். மகா கடுமை யான பல கேசுகள், அவர் பரிட்

2 SEP 1944
MADRAS

புரொபஸர் அலெக்ஸாண்டர் ப்ளெமிங்: பென்ஸிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டுபிடித்தவர் இவர் தான். (269-ஆம் பக்கம் கட்டுரையைப் பார்க்கவும்.) இவர் ஸ்காட்லாந்து தேசத்துக்காரர். லண்டன் சர்வகலாசாலையின் ஆராய்ச்சியாளர். பாடிங்டன் ஆஸ்பத்திரியில் சேவை புரிந்தவர். அந்த ஆஸ்பத்திரியில், ஒரு வார காலத்தில் வளர்ந்த பென்ஸிலின் பூசணத்தை அவர் ஆராயும்போது எடுத்தது இந்தப் படம்.

ப்ளெமிங் அவர்களின் முன்னே கண்ணாடித் தட்டுகளில் பென்ஸிலின் இருக்கிறது.





மேலே :

பென்ஸிலின் அடங்கிய சீசாக்கள்.

கீழே :

நன்ருய் வளர்ந்த பென்ஸிலின் பூசணத்தை ஒருவர் ஆராய்கிருர்.



இடது பக்கம் படத்தில் உள்ள ஆறு வட்டங்களுக்கும் நடுவே உள்ள பகுதிதான் பென்ஸிலின். முதல் வட்டத்திலுள்ள பொட்டு, பத்து வார காலத்தில் கடைசி வட்டத்திலுள்ள அளவுக்கு வளர்ந்து பரவி விடுகிறது.



முதன் முதலாக, 1929-ஆம் வருஷம் அலெக்ஸாண்டர் ப்ளெமிங் அவர்கள், இந்தக் கண்ணாடித் தட்டிலேயே பென் ஸிலின் பூசனத்தைக் கண்டார். தட்டின் ஒரு பக்கத்தில் காணும் பெரிய வெள்ளைத் திட்டுத்தான், பென்ஸிலின் பூசணம். இந்த அசல் பூசணத்திலிருந்தே, இனித் தயாராகும் பென்ஸி லின் பூசணம் அனைத்தும் தயாரிக்கப்படும்.

சையில் தேறிக் குணமடைந்து விட்டன.

பெனிஸிலின் மருந்தால், பல கடுமையான வியாதிகள் குணமடைகின்றன. ரத்தத்தில் விஷம் சேர்ந்து அழுகிப் போகக்கூடிய எந்த நோயையும் அது குணப்படுத்துகிறது. எலும்பிலே விஷக் கிருமிகள் புகுந்து அரித்தால், அதை, பெனிஸிலின் எளிதிலே சொஸ்தப்படுத்தி விடுகிறது. மேக சம்பந்தமான வியாதிகளை இந்த மருந்தின் அற்புத சக்தி படிய வைக்கிறது. வெட்டை நோய் 12-மணி நேரத்திலே இந்த மருந்தினல் அபூர்வமாய்க் குணமாகிறது. மனித தேகத்துக்கு, பெனிஸிலின் துளியும் தீங்கு இழைப்பதில்லை. குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். கொப்புளங்கள், பருக்கள், கண் வீக்கம், கக்குவான் முதலிய இன்னும் அநேக விதமான வியாதிகளை, இந்தச் சர்வசஞ்சீவி மருந்து எளிதிலே குணம் செய்து விடுகிறது. ஆனல், க்ஷயம், காசம், இளம் பிள்ளை வாதம், மலைக் காய்ச்சல் முதலிய வியாதிகளின் விஷயத்தில் இந்த மருந்து பலிக்கவில்லை. டைபாயிட், டைபஸ், கிரந்தி ஆகிய வியாதிகளை இது குணப்படுத்துமா என்பதும் நிச்சயமாய்த் தெரியவில்லை. இவை விஷயத்தில் இந்த மருந்து இன்னும் பரிட்சிக்கப்படவில்லை.

பெனிஸிலின் என்ற இந்த ஆச்சர்ய மருந்து, எப்படி வேலை செய்கிறது? அதை இன்னும் யாரும் திட்டமாய்ச் சொல்ல முடியவில்லை. என்ருலும், ஒன்று மாத்திரம் தெளிவாய்த் தெரிகிறது. சோதனைக் குழாய்ப் பரிட்சைகளில், கந்தக மருந்துகள் எப்படி வேலை செய்கின்றனவோ அதே மாதிரி தான் இதுவும் வேலை செய்கிறது. அதாவது, நோய்க் கிருமிகளை இது கொல்வதில்லை; அவைகள் வளர்ந்து பெருகாமல் மாத்திரம் தடுக்கிறது. நோய்க் கிருமிகள் வளராமல் ஒரே நிலையில் இருக்கும்போது, நமது ரத்தத்திலுள்ள வெண்மைநிற ஜீவ அணுக்கள், இந்தக் கிருமிகளுடன் சுலபமாய்ப் போராடி இவைகளை ஜயித்து அழித்து விடுகின்றன.

இங்கே நம் தேக சம்பந்தமான ஓர் ஆச்சர்யத்தை நினைவில் வைக்க வேண்டும். நம் ரத்தத்தில் இரண்டுவித ஜீவ அணுக்கள் இருக்கின்றன. ஒரு வகை அணுக்கள் சிவப்பு நிறம்; மறு வகை வெண்மை நிறம். சிவப்பு அணுக்கள் தான் ஜீவாதாரமானவை. அவை, நம் தேகத்தின் பல இடங்களுக்கும் காற்றைக் கொண்டு செல்லுகின்றன. இந்தச் சிவப்பு அணுக்கள் மாய்ந்தால், நாம் மரணமடைந்து விடுவோம். நம் தேகத்

84-மனைவி ; 362-குழந்தை!

எங்கேயோ ஒரு மூலையிலிருக்கும் தாய்லாந்தின் மன்னர்களுடைய பெயர்களைக் கேட்டால் அதிசயமா யிருக்கும். இப்போதுள்ள மன்னருடைய பெயர் ஆனந்தர். அவருடைய தந்தையின் பெயர் மகிதலன். பெரியப்பாவின் பெயர் பிரஜாதிபோக். எல்லாம் ஹிந்துப் பெயர்கள். தாய்லாந்து மன்னர்களுள் சூழாலங்காரன் முக்கியமானவர். அவருக்கு 84 மனைவிகளும் 362 குழந்தைகளும் இருந்தனர். அவருடைய புத்திரர்களின் பெயர்கள் மாத்திரம் ஒன்பதரைப் பக்கங்களுக்கு வருகின்றனவாம். இந்தச் சூழாலங்கார மன்னனுடைய மூத்த மகனுக்கு ஆறுவது ராமன் என்று பேர். அவர் 1910-ஆம் வருஷத்திலிருந்து 1925-ஆம் வருஷம் வரை தாய்லாந்தை ஆண்டார்.

துக்குள்ளே எவையேனும் நோய்க் கிருமிகள் புகுந்தால், இந்தச் சிவப்பு அணுக்களைத்தான் தாக்கிக் கொன்று பட்சணம் செய்ய, அந்த நோய்க் கிருமிகள் முயலுகின்றன. அந்தப் பகைவர்களை எதிர்க்கும் சக்தி, இந்தச் சிவப்பு அணுக்களுக்குக் கிடையாது. வெள்ளை அணுக்கள் இருக்கின்றனவே, அவை தான் நம் தேகத்திலுள்ள ராணுவ வீரர்கள். சத்துருக் கிருமிகளை எதிர்த்துப் போரிடும் வேலையை அவை ஏற்றுக் கொள்ளுகின்றன. வெள்ளை அணுக்களும் சிவப்பு அணுக்களும, நம்முடைய புஜ எலும்புகளுக்குள் உற்பத்தி ஆகிக் கொண்டிருக்கின்றன. எதிரிக் கிருமிகள் வளராமல் ஒரே அளவாய் இருந்தால், வெள்ளை அணுக்கள் மேலும் மேலும் உற்பத்தியாகிச் சத்துருக்களைச் சுலபமாக அழித்து விழுங்கி விடுகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னல், நமக்குச் சிற்றுயிர்ப் பிணி ஏதேனும் வரும்போது, நம் தேகத்துக்குள் ஒரு குருக்ஷேத்திரப் போர் நடக்கத் தொடங்கி விடுகிறது. எதிரிக் கிருமிகளை நம் வெள்ளை அணுக்கள், தாமாகவே அடித்து விழுங்கிவிட முயலுகின்றன. மருந்துகள், நம் தேக அணுக்களுக்கு உதவி மாத்திரமே செய்கின்றன. பெனிஸிலின் மருந்தும் இம்மாதிரி உதவிசெய்வதாகவே நினைக்கிறார்கள்.

பெனிஸிலின் மருந்து இப்போது உலகத்திலேயே ஏழெட்டு இடங்களில் தான் செய்யப்படுகிறது. மிகவும் சொற்ப அளவே உற்பத்தியாகிறது. ஆகையால், எல்லா நோயாளிகளுக்கும் இந்தமருந்து கிட்டவில்லை. இதை மிக ஏராளமாய்த் தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சமீபத்தில் தான் செய்து முடித்திருக்கிறார்கள். இன்னும் ஐந்தாறு மாதங்கள் கழிந்தால், ராணுவ வீரர்களுக்கும் சகல ஜனங்களின் தேவைகளுக்குமே கிடைக்கக் கூடிய அபரிமிதமான அளவு தயாரித்துவிடலாமென்று, எதிர்பார்க்கிறார்கள். தேவர்கள் கூட அமிழ்தம் கடைவதற்குப் பல காலம் காத்திருக்க வில்லையா?

✲

எதை எழுதுவது கஷ்டம்?

ஸ்டீபன் லீகாக் என்பவர் ஒரு பிரபல பிரிட்டிஷ் பொருளாதார சாஸ்திரி. அவர் பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாமல் இலக்கியத் துறையிலும் ஈடுபட்டு, பல அற்புதமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவர் சொல்லுகிறார்:

"பொருளாதார சம்பந்தமான கடுமையான பிரச்னைகளைப் பற்றி எழுதமுடியாமல் மூளை சோர்ந்து போயிருக்கும் சோம்பல் காலத்திலேயே, நான் தமாஷ் கட்டுரைகள் எழுதுவதாக என் நண்பர்கள் பலர் நினைத்திருக்கிறார்கள். ஆனல், என் சொந்த அனுபவம் அதற்கு முற்றிலும் நேர் மாருனதாகும்.

"புள்ளி விவரங்களையும் உண்மைகளையும் பாதுகாப்பு அரணாக வைத்துப் பெரிய விஷயங்களைத் தீவிரமாக விளக்கிச் சொல்லுவது மிக்க சுலபம். மத்திய சீன நாடோடி இலக்கியத்தைப் பற்றிச் சாஸ்திரீயமான முறையில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதோ, எட்வர்ட் தீவில் ஜனத்தொகை குறைந்து வருவதைப் பற்றிப் புள்ளி விவரங்களுடன் எழுதுவதோ சிரமம் அல்ல. ஆனல், வேறு கலப்பில்லாமல், சுயமாக, பொழுது போக்குவதற்கேற்ற முறையில் ஏதாவது எழுதுவதுதான், மிக்க சிரமமான வேலையாகும். பாக்கியசாலிகள் தான் அம்மாதிரி எழுத முடியும். அந்தப் பாக்கியமும் எப்போதும் கிட்டாது."

சிப்பாய் சுப்பு

வேணு

சுப்பு எப்போதுமே ஓர் உல்லாசப் பறவை. எல்லாருக்கும் ஆபீஸ் பத்துமணிக்கு என்றால், அவனுக்கு மாத்திரம் பதினொரு மணி. "ஏன் இப்படி நீ லேட்?" என்று கேட்டால், "பழைய மணி ஞாபகம், ஸார்" என்பான். ஆனால், சாயங்காலம் வீட்டுக்குப் போகும்போது மாத்திரம், புதிய மணி அவனுக்குப் பரிபூரணமாய் ஞாபகமிருக்கும். ஒரே ஒரு நிமிஷம் கூடப் பிசகாமல் வெகு கச்சிதமாய், மணி ஐந்துக்குப் புறப்பட்டு விடுவான்.

ஆபீசில், அவனது நாற்காலியில், ஒன்று - அவன் தூங்கி வழிந்து கொண்டிருப்பான்; அல்லது அவன் கோட்டுத் தூங்கி வழிந்து கொண்டிருக்கும். பெரும்பாலும், கோட்டை நாற்காலிக்குக் காவல் வைத்துவிட்டு, அவன் ஊர்கோலம்தான் சுற்றிக்கொண்டிருப்பான்.

அதிகாரிகளும் இதை எத்தனை நாள்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்? பல முறை எச்சரித்தார்கள். பயன்படவில்லை. கடைசியில் அவன் வேலைக்கே சீட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

"ஓ! இதைப்பற்றி அக்கறையில்லை" என்று சொல்லி, அவன் கம்பீரமாகவே, வெளியே நடந்தான். நாங்கள்தான் வருந்தினோம். அவன் துளிக்கூடக் கவலைப் படவில்லை.

இருந்தாலும் வாயுவைப் பட்சணம் பண்ணிக்கொண்டு வாழ முடியுமா? தவிர, சுப்பு உலகத்திலே ஒருபந்தமுமில்லாத ஏகாங்கியல்ல. அவனுக்கு ஒரு மனைவியும் சில குழந்தைகளும் உண்டு. குடும்ப காலக்ஷேபம் நடக்க வேண்டுமே? அது எப்படி? சுப்பு பெரிய சாமர்த்தியசாலி. அவன் எவ்வாறோ வெறுங்கையால் முழம் போட்டுக்கொண்டுதான் இருந்தான்.

வேலை அதுவாகப் போய்விட்டதாக யாரிடமும் அவன் சொல்லும் வழக்கமே கிடையாது. "வேலையை நான் விட்டுவிட்டேன். என்ன எழவு ஸார், வேலை! எப்பப் பார்த்தாலும் தூங்கி வழிஞ்சுகொண்டே யிருந்தால், மூளை கறையான் பிடிச்சுடும் போலே இருந்தது. தொலச்சு முழுகிப்பிட்டேன்" என்றுதான் சொல்லுவான்.

வேலை போன கொஞ்ச நாள் வரையில், பழைய நண்பர்களில் எவரைக் கண்டாலும் சுப்பு வெகு

சுப்பு சிப்பாயான கதை, ஏதோ மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போல் உங்களுக்குத் தோன்றும். ஆனால், அத்தனையும் நிஜமாகவே நடந்தது என்கிறார் கதையை எழுதியவர். பேரையும் ஊரையும்தான் மாற்றி யிருக்கிறாராம். அதைப்பற்றி நமக்கென்ன கவலை?

உரிமையாக, அவர்களின் தோளிலே கையைப் போட்டுக் கொள்வான். பிறகு சிரித்துக் கொண்டே, "என்னப்பா, ஜேபியிலே ஏதாவது பணம் இருக்கா?" என்று கேட்டு, பதில் வருவதற்கு முன்னே அவர்களுடைய ஜேபியில் தன் கையை விட்டு, அதில் என்ன இருக்கிறதோ அதை எடுத்துவிடுவான். எப்பேர்ப்பட்ட கண்டிப்புப் பேர்வழியும் அவனிடம் இந்த விஷயத்தில் தடை செய்ய முடியாது. அவ்வளவு உரிமையாய், அன்பாய், ஆதரவாய், காதலனை அணையும் மோஹினிபோல, அவன் நடந்து கொள்வான்.

சுப்புவின் இந்த வழக்கம், எல்லா நண்பர்களுக்கும் வர வர மிக்க உபத்திரவ மாகிவிட்டது. கடைசியில் ஒவ்வொருவரும் அவன் தலையைக் கண்டதும் தாங்களாகவே தங்கள் தங்கள் சக்தியானுசாரம், கால், அரை பணத்தைக் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளப் பார்த்தார்கள். சுப்பு இதைப் பற்றியும் கவலைப் பட்டவனாய்த் தெரியவில்லை. இதையே புதிய வாடிக்கையாகச் செய்து கொண்டு, எந்த நண்பனையும் பாக்கி விடாமல் ஒரு வாரத்துக்கு ஒரு தடவையாவது சந்தித்து, தண்டல்செய்து கொண்டு போனான்.

வாரத்துக்கு வாரம் கொடுப்பதென்றால், எல்லாருக்கும் கட்டுமா? "இந்தாப்பா; இப்படி அடிக்கடி தொந்தரவு செய்யாதே. சம்பளத் தேதிக்கு வா. ஏதாவது கொடுத்துவிடறேன்" என்று ஒருவர் சொன்னார். அவரைப் பார்த்து மற்றவர்களும் அதே முறையைக் கையாண்டார்கள். பருத்தி புடவையாய்க் காய்த்தது என்ற கதையாக, மாதா மாதம் சம்பளத்தேதியில் எல்லா நண்பர்களிடமும் வந்து வர்த்தனை வாங்கிச் செல்வது என்ற ஒரு நிரந்தரமான மாமூலை, இந்தப் பிரகாரமாகத் தானே சுப்பு ஸ்தாபிதம் செய்துகொண்டு விட்டான்.

ஆனால், எங்கள் ஆபீசில் வந்து பணம் தண்டும் வேலை மாதம் ஒரு நாள் தானே? பாக்கி நாட்களெல்லாம் வீணாய்ப் போகின்றனவே. அவைகளையும் பயன்படுத்தத் தொடங்கினான் சுப்பு. அங்கங்கே புதிய இடங்களுக்குப் போய், புதிய புதிய நபர்களிடம் பழக்கமாகி, வர்த்தனைகள் வாங்கி, தன் தொழிலை விஸ்தரித்துக் கொள்வதில் ஈடுபட்டான். எப்படியானாலும் சரி எங்கள் வர்த்தனைகளை மட்டில் அவன் வசூலிப்பதில் தவறுவதே யில்லை. எங்கள் சம்பளத் தேதி எங்களுக்கு மறந்தாலும், அவனுக்கு மறக்கவே மறக்காது. அவன் தலையைக் கண்டால், சம்பளத் தேதி கதிகலங்கிக்கொண்டு தானாகவே எங்கள் ஆபீஸில் வந்து நின்று விடும் என்று சொல்லலாம். அவ்வளவு கச்சிதம் சுப்புவின் மாமூல்.

இவ்வாறு யாசகம் பல மாதம் தொடர்ந்தது. சுப்புவின் தொழில் அமோகமாகவே நடந்தது. வர்த்தனை கொடுப்பவர் நடந்து சென்றாலும், அதை வாங்கும் சுப்பு, ரிக்ஷாவண்டியிலே சவாரி செய்யவும் தொடங்கிவிட்டான். ஆள் கொஞ்சம் வாட்டசாட்டமாய் வளர்ந்து, பருமனாகவும் தென்பட்டான். அவனுக்கு ஒவ்வோர் ஏழாந்தேதியும் ஓர் அணா தட்சணை கொடுக்கும் வழக்கமுடைய சுந்தரம், ஒரு நாள் லக்ஷ்மி ஓட்டலில் போண்டா சாப்பிட்டுக் கொண்டிருந்தானாம். அதே சமயம் சுப்பு உள்ளேபுகுந்து அல்வாவும், பாதம் கீரும் விழுங்குவதைக் கண்டு, சுந்தரம் அப்படியே

திகைத்துப் போனனும்! இந்த விவரங்களை அறிந்த நண்பர்களுக்கு, சுப்பு.விடம் வரவர வெறுப்புத் தட்டியது. என்றாலும், நேரே காணும்போது முகம் முறித்துப் பேச யாருக்கும் மனமில்லை. ஆகையால், அவன் காரியம் ஏதோ ஒருவாறு தொடர்ந்து நடந்து வந்தது. மாதாமாதம் தவருமல் அவன் வர்த்தனையும் நடந்துகொண்டுதான் இருந்தது.

இப்படி இருக்கையில் திடீரென்று ஒரு மாதம் சம்பளத் தேதியில் சுப்பு எங்கள் ஆபீசுக்கு வரவில்லை. "என்னடா இது! சுப்பு வரவில்லையே? மழைதான் வரப்போகிறது!" என்று நாங்கள் ஒருவரோடொருவர் ஆச்சர்யமாய்ப் பேசிக் கொண்டோம். அவன் வராதது எங்களுக்கு கொஞ்சம் சந்தோஷமாகவும்தான் இருந்தது.

அடுத்த மாதமும் சுப்புவைக் காணும். அவன் முகதரிசனமே வேப்பங்காயாய்க் கசந்துபோன சில நண்பர்கள் கூட, "ஐயோ, பாவம்! சுப்பு எங்கே போய்விட்டான். ஒரு வேளை வாயைப் பிளந்திருப்பானே!" என்று அங்கலாய்க்கத் தொடங்கினர்கள்.

மூன்ரும் மாதமும் சுப்பு வரவில்லை. முன்னே தெருவில் போகும்போது எதிரே சுப்பு வந்துவிட்டானனல், எங்கே தங்களை ஓர் அணுக் காசு கேட்டுவிடப்போகிருனே என்று அடுத்த சந்தில் உடனே திரும்பி விடும்

வழக்கமுள்ள சில நண்பர்களே, இப்போது அவனைப் பார்க்க ஆசைப்பட்டார்கள். அது மாத்திர மல்ல; இப்போது அவனுக்கு இரண்டணு கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் வந்துகொண்டே இருந்த சுப்பு, திடீரென்று அடியோடு வராமலே நின்றுவிட்டால், யாருக்குத்தான் அவனைக் காண ஆவல் வராது?

ஆனல், அடுத்தடுத்த மாதங்களில் சுப்புவைப் பற்றிய நினைப்புக் குறைந்தது. பிறகு, நாங்கள் அவனை ஏறக்குறைய மறந்தே போய்விட்டோம்.

இந்த நிலையில் பல மாதங்களுக்கப்புறம், ராணுவ உடை அணிந்த வாலிபன் ஒருவன் ஒரு நாள் எங்கள் ஆபீசுக்குள் நுழைந்தான். ஆளை முதலில் அடையாளம் புரியவில்லை. அவன் தலையில் அணிந்திருந்த "தொப்பியை" எடுத்தபிறகுதான், அவன் நம் பழைய சுப்பு என்று தெரிந்து, எங்களில் பலரும் அவனை நெருங்கினேம். ஆனல், சிலருக்குமாத்திரம் ஒரு பயம் போல் இருக்கிறது. தற்செயலாக அன்று சம்பளத்தேதி வந்திருந்தது. அவனது பழைய தொழிலின் ஞாபகம், அவர்களை மிரட்டியிருக்கலாம் ஒருவேளை. ஆனல், அதெல்லாம் இல்லை. அவன் ராணுவத்தில் சேர்ந்து இப்போது ஒரு சிப்பாய் ஆகியிருக்கிருன். இருபது நாள் லீவு எடுத்துக்கொண்டு வந்திருப்பதாகவும், அப்படியே பழைய நண்பர்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று அங்கே வந்ததாகவும் அவன் தெரிவித்தான். அதன் பின்பே அந்த நண்பர்களுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது.

சுப்பு புதியசுப்புவாயிருந்தான். எப்போதுமே அவனுக்கு ஒருவித மிடுக்கு உண்டு. ஆனல், அதில் ஏற்கெனவே கொஞ்சநஞ்சம் ஒட்டியிருந்த பசபசப்புப் போய்விட்டது. வெகு கம்பீரமாய் ஆகிவிட்டான். எங்களில் நெருங்கிய ஐந்தாறுபேரை, சேர்ந்தாற்போல் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றுன்.

"ஏழு பேர்களுக்குப் பாதம் அல்வாவும் பூரியும் கொண்டுவா" என்று ஹோட்டல் பையனுக்கு சுப்பு கட்டளையிட்டான். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டே, "ஏனடா சுப்பு! நீ எப்படியப்பா சிப்பாய் ஆனய்?" என்று கிண்டலாகக் கேட்டோம்.

"அதெல்லாம் பெரிய விஷயம்" என்று புன்சிரிப்புடன் பதிலளித்தான் சுப்பு.

"அதை எங்களுக்குத்தான் சொல்லேன். கொஞ்சம் போதாவது போகும்" என்று நாங்கள் கூறினேம்.

சுப்பு ஐஸ்வாட்டரை எடுத்து ஒருவாய் விழுங்கிவிட்டு, தொண்டையைக் கனைத்துக் கொண்டான். பிறகு, ஜேபியில் இருந்த ஒரு சிகரெட் பாக்கட்டை எடுத்து அதில் ஒன்றைப் பற்ற வைத்து, எங்களிடமும் நீட்டினன். சிலர் எடுத்துக் கொண்டார்கள். பின்பு, சுப்பு சிப்பாயான புராணத்தை விரிவாகப் பிரசங்கம் செய்யத் தொடங்கினன்.

"ஹூம், எனக்கு வேலை போனதும், 'யாசகம் புருஷ லட்சணம்' என்று அந்தத் தொழிலில் நான் இறங்கியதும் தான் உங்களுக்குத் தெரியுமே? உங்கள் கிட்ட வசூலித்த பணத்தைக் கொண்டே நான் குடித்தனம் நடத்திவிட்டதாக நீங்கள் நினைத்

துக் கொண்டிருப்பீர்கள். அதில்லே. உங்கள் பணம் எனக்குப் போதவேயில்லே. வெளியிலும் கொஞ்சம் பீராயத் தொடங்கினேன். கொஞ்சமென்ன; சுவிஸ்தாரமாகவே என்று சொல்லலாம். நகரம் பூராவிலுமே சஞ்சாரம் புரிந்தேன்....''

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியுமப்பா. விஷயத்தைச் சொல்'' என்று நாங்கள் முடுக்கினோம்.

"என்னடாப்பா அவசரம்? அதுதான் சொல்லுகிறேனே! பொறுமையாய்க் கேளுங்களேன் — இப்படி நகரமெல்லாம் சுற்றினேனா? அப்போது ஒரு நாள் இரவு எட்டுமணி இருக்கும். மைலாப்பூரில், கபாலீசுவரர் கோயிலுக்குக்கிழக்கே ஒரு மாடி வீட்டு வாசலில் போய்க்கொண்டிருந்தேன். பெரிய மனுஷன் வீடாய்த் தோன்றியது. வாயிற்படியில் போய் நின்றுகொண்டேன். 'ஸார்' என்று மெள்ளக் குரல் கொடுத்தேன். பேச்சுமூச்சில்லே. பாதி திறந்திருந்த கதவை, படாரென்று திறந்தேன். அதென்ன அந்த வீட்டிலே ஜப்பான்காரன் குண்டு விழுந்தால்கூட ஒரு ஜீவனும் கிளம்பாதுபோலேயிருந்தது. மனித அரவத்தையே காணோம். திறந்த வீட்டில் ஆள் இல்லாமலா போவார்கள்? வந்தது வரட்டுமென்று மெள்ள வாயிற்படிக்குள்ளே தலையை நுழைத்தேன். ரேழியிலே கதவு வைத்த ஓர் உள்ளுக் குள்ளே, ஏ. ஆர். பி. மறைப்புப் போட்ட ஒரு விளக்கின் பிரகாசத்தில் ஒருவர் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார் - படிக்கவாவது! படிப்பது போல் பாவனைசெய்து கொண்டிருந்தார். அவர் என்னவோ பலமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தது போல்தான் தோன்றியது.

நான் மிகவும் மெதுவான குரலில் 'ஸார்' என்றேன். அவ்வளவுதான். அவர் ஏதோ தேள் கொட்டியவர் போல, அலறிப் புடைத்துக்கொண்டு, ஆகாயத்திலே எழும்பி துள்ளிக் குதித்து, தத்தளித்து, சாமியாடி மாதிரி வெடவெட என்று தேகமெல்லாம் ஆட, 'யாரடா நீ? —எங்கே வந்தாய்? — போ வெளியே — திருடன்! திருடன்! கொலேகாரன்! — அடே சம்பந்தம், மாணிக்கம், ஓடிவாருங்கோடா! பாவிகளா! ஓடி வாருங்கோ' என்று ஆவேசமாய்க் கத்தத்தொடங்கி விட்டார். நான் பிரமித்துப் போனேன்; எனக்கு ஒன்றுமே புரியவில்லே. எவனோ ஒரு பைத்தியத்திடம், வந்து மாட்டிக் கொண்டோம் என்று எண்ணி, தலே தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்பதாக வெளியே ஓட முயன்றேன். இதற்குள் எமகிங்கரர் மாதிரி இரண்டு ஆட்கள் என்னே வந்து பிடித்துக் கொண்டார்கள். என் மூளேயே கலங்கிப் போய் விட்டது. — அடே வேணு! உன்னைத் தான் எடுத்துக் கொள். என்னவோ யாசகத்துக்குப் போகிறாய்...'' என்று, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே என்னைப் பார்த்தான் சுப்பு.

"உன் குறும்பு விடவில்லேயே. யாசகம் உன்னோடிருக்கட்டும். அந்த வேலே எனக்கு வர வேண்டாமப்பா'' என்று நான் ஆத்திரத்தோடு மறித்துச் சொன்னேன்.

சுப்பு சிரித்துக்கொண்டே, "அட, பேச்சுக்குச் சொன்னால், பிரமாதப்படுத்துகிறாயே! நீ பிரபுவாகவே இரு. ஆனால், நம் பெரியவர்களே சொல்லியிருக்கிறார்

களே: குடைநிழலிலிருந்து குஞ் சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணு வர்' என்று நீ கேட்டதில்லையா? தவிர, 'வீடு நமக்குத் திருவாலங் காடு — விமலர் தந்த ஓடு நமக் குண்டு' என்று பட்டினத்தடி களே பாடியிருக்கிறரே. நம் வேதாந்தத்தின் உன்னதமான நிலை, ஓட்டைக் கையிலே பிடிப் பது தான். பிச்சை எடுப்பதே பெரிய மனிதனின் லட்சணம்; அதுதான் நமது பாரமார்த்திகம்; அதுவே மனிதன், தேவனுகும் வழி...'' என்று யாசக தர்மத் தின் பிரபாவங்களை விளக்கிப் பிரசங்கம் தொடங்கிவிட்டான்.

"போதுமடா உன் உபந்யா சம், கதையைச் சொல்'' என்று எங்களில் ஒருவன் சொன்னன்.

"ஓ! அப்படிக் கேளு. உங்க ளுக்குச் சுவாரஸ்ய மிருக்கிறதா என்று தான் பார்த்தேன். என்ன சொன்னேன்? இரண்டு கிங்கரர் கள் என்னைப் பிடித்துக்கொண் டார்கள் என்றல்லவா சொன் னேன். ஆமாம். இப்போது உங்க ளிடம் உண்மையைச் சொல்வதற் கென்ன? அன்று நான் இரண்டு நாள் பட்டினி, ரொம்ப நெருக் கடியான நிலைமை. யாசகத்துக் குப் போன இடத்தில் திருடன் என்றும் கொலைகாரன் என் றும் என்மீது பழி சுமத்திக் கட்டிப் பிடிக்கிறர்கள்! என் உடம்புதான் சிலுசிலுத்தது என் றல், தலையும் ஒரேயடியாய்க் கிறுகிறுத்தது. எனக்கே ஒன் றும் தோன்றமல், முண்டியடித் துக் கொண்டு திமிறி ஓட முயன் றேன். 'விடாதே! இவனை அந்தப் பாதகிதான் அனுப்பியிருக்கிருள். போலீஸ்காரனை அழைத்துவா! கட்டிப்போடு கழுதையை. கொலைகாரப் பயல்!' என்று, வீட் டெஜமான் — அதுதான் அந்தப் பைத்தியம் — உறுமிக் கொண்டி ருந்தது. நான் வாயே திறக்கமுடி யாதபடி என்னை இம்சித்து, அவல் பொரி மாதிரி அவர்கள் எல்லா ருமே என்னை ஏதேதோ திட்டிக் கொண்டிருந்தார்கள்....''

"கதையைச் சுருக்கமாய்ச் சொல்ல உனக்குத் தெரியா தாடா?'' என்று பொறுமை யிழந்த ஒருவன் கேட்டான்.

"அதெப்படி யப்பா முடியும்? 'யானையைப் பானைக்குள் அடைத் துத் தா' என்றதாமே ஒரு குழந்தை; அதுமாதிரி சொல்லுகி ருயே!...'' என்ற சுப்பு, கதையை மறுபடியும் தொடர்ந் தான்.

மேலும் வளர்த்தி வளர்த்தி அவன் சொன்ன கதையின் சுருக்கம் இதுதான்: சுப்பு யாச கத்துக்குப் போன வீட்டுக்காரர் ஒரு பெரிய பணக்காரர். அவ ருக்கு ஒரு மனைவி உண்டு. ஆனல், அவளுக்கும் இவருக்கும் ஏதோ பெரிய மனஸ்தாபம். இருவரும் பிரிந்துவிட்டார்கள். அவள் பிரிந்தாலும் இவர் சொத் திலே பங்கு கேட்டாள். இவர் மாட்டேனென்று மறுத்துவிட் டார். அவள் இவரை ஆள் வைத் துக் கொல்லுவதாகச் சபதம் செய்திருக்கிருள். அந்தச் சபதம் தான் இவருடைய பீதிக்குக் கார ணம். நம் சுப்பு, ராத்திரியில், ஆளரவமில்லாத நேரத்தில், பூனை போல் பதுங்கி வரக் கண்டதும், அவர் நடுங்கி விட்டார். அதி லிருந்துதான் இத்தனை கலவரங் களும் நேர்ந்துவிட்டன. பெரிய கூட்டமும் கூடியது. கடைசியில் யாரோ சுப்புவின் சிநேகிதன், கூட்டத்தோடு கூட்டமாய் வந் திருக்கிருன். சுப்புவைப் பார்த்த தும், அவன் ஆச்சரியப் பட்டு

விட்டான். அவனுக்கு அந்தப் பணக்காரரிடம் நெருங்கிய பரிச்சய முண்டு. அவன் தலையிட்டு சுப்புவை விடுவித்தான்.

இந்த விவரங்களை யெல்லாம், ஒரு முதல்தரக் கதாசிரியன் மாதிரி விரிவாக அவன் வர்ணித்துச் சொன்னான்.

"இதெல்லாம் சரியப்பா. இதற்கும் நீ சிப்பாயானதற்கும் என்ன சம்பந்தம்?"

"அதைத் தானே சொல்ல வந்தேன்" என்று, சிகரெட்டின் கடைசித் துண்டையும் நஷ்டமாக்காமல் ஒரு மூச்சு இழுத்து எறிந்துவிட்டு, "ஊம். அப்புறம் அந்தப் பணக்காரரை நான் சும்மா விடவில்லை. என்ன செய்தேன், தெரியுமா?" என்று, சற்று நின்றான் சுப்பு.

"அடேயப்பா? பெரிய வீரனடா நீ! அதுதான் சிப்பாயே ஆகியிருக்கிறாய்! என்ன செய்தாய்?"

"ஒரே போடாய் அவரிடம் பத்து ரூபாய் தட்டிவிட்டேன். ஆனால், அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தபோது, என் மனது வெறிச் சென்றிருந்தது. நிம்மதி யில்லாமலே நடந்தேன். அப்போது வழியிலே ஓரிடத்தில் 'ராணுவத்தில் சேருங்கள்' என்று ஒரு விளம்பரம் தொங்கியது. அதைக் கண்டதும், ஆஹா, என் மனதில் என்னென்னவோ எண்ணங்களும் உணர்ச்சிகளும் கொப்புளித்துப் பொங்கின. அதை நான் எப்படி வர்ணிப்பேன்! ரூஸோ என்ற பிரஞ்சு அறிஞரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களாடா நீங்கள்? அவர் ஒரு நாள் சாலைவழியே போய்க் கொண்டிருந்தபோது, நியூஸ் பேப்பரில் ஒரு விளம்பரத்தைக் கண்டார். உடனே ஆயிரம் ஜோதி விளக்குகளின் ஒளியால் கண் கூசியவர்போலானார். அற்புதமான கருத்துக்கள் திரள் திரளாய்த் திமி திமி என்று அவருடைய மனதிலே வந்து குவிந்தன. அவர் உள்ளம் துடித்தது; மனம் குழம்பியது; மூளை கறங்கி மயங்கியது; மூச்சுத் திணறியது. நடக்கவே முடியாமல், ஒரு மரத்தடியிலே போய், அரை மணி நேரம் அம்மாடி என்று ஓய்ந்து உட்கார்ந்து விட்டார். அந்தப் பரபரப் பெல்லாம் அடங்கிய பின்பே, அவ்விடத்தை விட்டு அகன்றார்.

"'ராணுவத்தில் சேருங்கள்' என்ற விளம்பரத்தைப் பார்த்தும் ஏறக்குறைய இதே மாதிரி கதிதான் எனக்கும் ஏற்பட்டது. ராணுவத்தில் சேருங்கள்! ஐயோ உயிரையே அல்லவா விலைக்கு விற்கவேண்டும்! உயிருக்குத் துணிவதா?......ஆமாம்; இப்போதென்ன வாழ்கிறது?

'பிழையைத் திருத்து'

முதலாளி: (குமாஸ்தாவை நோக்கி): "என்ன ஐயா, கடிதம் இது? ஓரிடத்தில் 'பாற்தேன்' என்று பெரிய 'ற்' போட்டிருக்கிறீர். இன்னோரிடத்தில் 'பார்த்தேன்' என்று சின்ன 'ர்' போட்டிருக்கிறீரே?"

குமாஸ்தா: "இரண்டில் ஒன்று பிசகி விட்டது. மன்னியுங்கள்."

முதலாளி: "போனால் போகிறது அதைத் திருத்தி விடும்."

குமாஸ்தா: "எதை, எஜமான்?"

முதலாளி: (தலையைச் சொரிந்து கொண்டு) "உம்ம் — எதையா? அதை — அதைத் தான். எது பிசகோ அதை."

"சற்றுமுன் மைலாப்பூரில் சிக்கிக் கொண்டேனே! அந்த யாசகம் மட்டில் ரொம்பச் சுலபமான தொழிலா? மானம், வெட்கத்தையெல்லாம் துறந்து கையை ஏந்திக்கொண்டு கிளம்பினால், அதிலும் தான் உயிருக்கே துணியவேண்டி இருக்கிறது. சிப்பாய் செத்தால் வீரசொர்க்கம் உண்டு. பஞ்சத்தில் அடிபட்டுச் சாவதைவிட அது மேல் அல்லவா? இந்த யாசக வாழ்வைவிடச் சிப்பாய் வாழ்வே அதிக சுலபமானது என்று எனக்குத் தோன்றியது. உடனே மனுப் போட்டேன். சிப்பாய் ஆகிவிட்டேன்" என்று முடித்தான் சுப்பு.

"சுப்பு, உனக்கென்னடா சம்பளம்?" என்று கேட்டான் ராமு.

அதற்குப் பதிலளிக்காமல் "நீ என்ன படித்திருக்கிறாய்? ஆனர்ஸ் இல்லையா?" என்று வினவினான் சுப்பு.

"ஆமாம்."

"நான் என்ன படித்திருக்கிறேன், ஞாபக மிருக்கிறதா?"

"ஆஹா! நான்காவது பாரம். ஆபீஸில் ஒரு சின்ன டிராப்ட் எழுதுவதானாலும், என் பிராணனைத் தானே வாங்குவாய். நன்றாய் ஞாபகமிருக்கிறது."

"வாஸ்தவம். உன் சம்பளம் என்ன?"

"நாற்பத்தைந்து ரூபாய்" என்று பதில் சொன்னான் ராமு.

"அதைப்போல மூணுமடங்கு என் சம்பளம்" என்று அழுத்தலான குரலில் அழுத்தந் திருத்தமாய்ச் சொன்னான் சுப்பு.

நாங்கள் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் பார்த்து அசட்டு விழி விழித்துக் கொண்டோம்.

இந்தச் சமயத்தில் எங்கள் கோஷ்டியிலிருந்த அண்ணாசாமிக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. "ஏனடா சுப்பு, நீ யுத்தகளம் பார்த்திருக்கிறாயோ? அது எப்படியடா இருக்கும்?" என்று கேட்டான்.

சுப்பு 'கொல்' என்று சிரித்து, "யுத்தகளம் என்று தனியாய் ஒன்றும் கிடையாது. சோறு கண்ட இடம் சொர்க்கம், சிப்பாய் நிற்கும் இடம் யுத்தகளம். சொர்க்கமும் யுத்தகளமும் அண்ணன் தம்பிகள். ஆனாலும், மைலாப்பூரில் மாட்டிக் கொண்டேனே, அதை விட மோசமான நிலைமை இது வரையில் என் சிப்பாய் வாழ்க்கையில் எனக்கு ஏற்படவில்லை. அந்தமட்டும் கடவுளை நான் மனதார வாழ்த்தத்தான் வேண்டும்" என்று முடித்தான் சுப்பு.

✲

கோடி ஜனங்கள் மதிப்பும் தவறுமா?

"இட்மா என்ற நாடகத்தை, இரண்டு கோடி ஜனங்கள் வெகு ஆவலாய், போன வருஷம் பிரிட்டிஷ் ரேடியோவில் கேட்டார்களாம். இதைப் பற்றி பி. பி. ஸி. பெருமையடித்துக் கொண்டது. 2,00,00,000 பேரின் மதிப்பும் தவறாக இருக்குமா? இருக்காதென்று எண்ண என்னால் முடியவில்லை. ஏனென்றால், கலை சம்பந்தப்பட்ட எந்த ஒரு விஷயத்திலும், 2,00,00,000 பேர் ஒரே முகமாய்ச் சரியான மதிப்பிடுவது என்பது முடியவே முடியாத காரியம்."

— ஜேம்ஸ் அகேட்.

சென்னை
ஸாகர், கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் பல முக்கிய நகரங்
களிலும் இப்பொழுது
வெற்றியுடன்
நடைபெறுகிறது
தாஸி
அபரஞ்சி
ஜெமினி
....தயாரிப்பு....
டைரெக்ஷன்.. பி.என். ராவ்..

இரு இலைகளும் ஒரு மொட்டும் . . .

'இரு இலைகளும் ஒரு மொட்டு' மாகப் பறிப்பது தான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள்தான் பறிக்கப்படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.

ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தப் புதிதான சரக்குகள் அடிக்கடி வினியோகிக்கப் படுகின்றன. 'இரு இலை ஒரு மொட்டு' அதன் உன்னதமான மணத்தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறை தான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களிலிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக் கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடந்தைத் தொழில் ஆலைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின, புத்தப்புதிதான குணம், திருப்தியளிக்குந் தன்மை, இவற்றை ரஸிக்க விரும்புபவர்களுக்கு 'டார்ஜீலிங் ப்ளெண்ட்' தான் சரியான தேயிலை.



ப்ரூக் பாண்ட்

அனர்க்கிஸம்

• வெ. சாமிநாத சர்மா

ராஜியத்திலே பல சித்தாந்தங்கள் உண்டு. ஜனங்களை ஆளவேகூடாது என்பதும் அவைகளில் ஒன்றாகும். அப்படிப்பட்ட ஒரு சமூகத்தைப் படைப்பதும் சாத்தியமா? ஆம், சாத்தியம் என்று சொன்னார் கோமகன் குரோபாட்கின். அந்த அனர்க்கிஸத்துவத்தை, சர்மாஜி விளக்குகிறார்.

அனர்க்கிஸம் (Anarchism) என்ற சொல்லுக்கு அராஜகம் என்று சிலர் பொருள் கொள்கின்றனர். அப்படியில்லை. அராஜகம் என்றால், சாதாரண அர்த்தத்தில், பலாத்காரம் நிறைந்த, அரசியல், பொருளாதார, சமுதாய சம்பந்தமான பல துறைகளிலும் பலவகைக் குழப்பங்கள் மலிந்த ஒரு நிலைக்கே பெயராயிருக்கிறது. ஆனால் அனர்க்கிஸம் என்பது, அன்பினாலும், பரஸ்பர சம்மதத்தின் பேரிலும் அரசியல், பொருளாதார, சமுதாய விவகாரங்கள் நடைபெறுகிற ஒரு நிலையைக் குறிப்பிடுகிறது. அனர்க்கியா (Anarchia) என்ற வார்த்தையினடியாகப் பிறந்தது அனர்க்கிஸம். அனர்க்கியா என்றால் ஆளுகையின்மை என்று பொருள். ஆளுகையின்மை என்று கேட்டவுடன் கலகமும் குழப்பமுமே நமது எண்ணத்தின் முன்னணியில் வந்து நிற்கின்றன. இதனாலேயே இந்த வார்த்தையைக்கண்டு அஞ்சுகிறோம். ஆளுஞ் சக்தி இல்லாமலே, அந்த ஆளுஞ் சக்தி, பிரஜைகளிடமிருந்து என்னென்ன கடமைகளை எதிர்பார்க்கிறதோ அந்தக் கடமைகளை அந்தப் பிரஜைகள், சுயமாக, பரஸ்பர நம்பிக்கையின் பேரில் செய்துகொண்டு போவார்களானால், ஆளுஞ் சக்தி எதற்கு? தன் கடமையை உணர்ந்து ஒழுங்காக வேலை செய்து கொண்டு போகிற ஒரு தொழிலாளிக்கு, அவனை மேற்பார்வை செய்ய மேஸ்திரி எதற்கு? அந்தத் தொழிலாளி, தனக்குத்தானே மேஸ்திரி. அதைப் போல் ஒரு நாட்டின் பிரஜைகள், எப்பொழுது தங்களுக்குத் தாங்களே அரசர்கள் என்று உணரும்படியான நிலைக்கு வருகிறார்களோ அப்பொழுது எல்லோருக்கும் மேலான ஓர் அரசன் அல்லது அரச சக்தி தேவையில்லாமலே போகிறது. இந்த நிலைக்குத் தான் அனர்க்கிஸம் என்று பெயர். இதனை இந்திய அரசியல் நூலார் வைராஜ்யம் என்று சொல்வர். கம்யூனிஸத்தின் லட்சிய நிலை இதுவே. இதனைச் சிறிது விளக்குவோம்.

கம்யூனிஸத்தின் முதற்படியாக, தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது. இதன் மூலம், முதலாளித்துவம் முடிந்துவிடுகிறது. அதாவது சுரண்டுவோர் என்ற ஒரு தனிவர்க்கத்தினர் இல்லாமலே போய்விடுகிறார்கள். பின்னர், ஜனங்களுடைய தேவையை அனுசரித்தும், லாபத்தைக் குறியாகக் கொள்ளாமலும் ஒரு திட்டப்படி பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படி உற்பத்தி செய்யப்பட்டு வருவதன் காரணமாக, சமுதாய சம்பந்தங்களும் அரசியல் விவகாரங்களும் அதிகமான பேருக்கு அதிகமான நன்மையை அளிக்கக்கூடிய மாதிரி

ஒழுங்குபடுகின்றன. சட்டத்தின் தூண்டுதலோ, அரசாங்கத்தின் நிர்ப்பந்தமோ இல்லாமலே, ஜனங்கள் பிரஜா உரிமையை அனுபவிக்கிறார்கள்; பிரஜையின் கடமைகளைச் செய்கிறார்கள். இந்த நிலையில், அரசாங்கம், சட்டம், ஆள்வோர் முதலிய சொற்கள் அர்த்தமில்லாமல் போகின்றன. ஆளப்படுகிற அவசியம் இல்லாமற் போனால், ஆட்சி எதற்கு? ஆட்சி தேவையில்லாத இந்த நிலையைத்தான் "ராஜ்யாதிகாரத்தின் ஒடுக்கம்" என்று கம்யூனிஸ்ட்டுகள் கூறுகிறார்கள்.

இந்த நிலை எப்பொழுது ஏற்படும்?

ஒரு படியிலிருந்து மற்றொரு படிக்குச் சுலபமாகத் தாண்டிவிடுவதைப்போல் சுலபமாகவும் சீக்கிரத்திலும் இந்தப் படியை அடைய முடியாதென்பதை கம்யூனிஸ்ட்டுகள் ஒப்புக்கொள்கிறார்கள். எப்பொழுது அடைய முடியும், அப்படி அடைந்தால் அந்தப் படி, அதாவது ஆட்சியற்ற நிலை எப்படி இருக்குமென்பவைகளைப்பற்றியும் திட்டமாகக் கம்யூனிஸ்ட்டுகள் ஒன்றுங் கூறவில்லை. அப்படிக் கூறவும் முடியாது தானே? பொதுவாக அவர்கள் என்ன சொல்கிறார்களென்றால், ஆள்வோரில்லாத இந்தச் சமுதாயத்தில், அவரவரும் அவரவர் சக்திக்குத் தகுந்தபடி உழைப்பர்; தேவைக்குத் தகுந்தபடி ஊதியம் பெறுவர். தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிற காலத்தில் அதாவது கம்யூனிஸத்தின் முதற்படி நிலையில் 'சக்திக்குத் தகுந்தபடி உழைப்பு; உழைப்புக்குத் தகுந்த ஊதியம்!' இரண்டாவது படி நிலையில், அதாவது லட்சிய நிலையில் மேலே சொன்ன மாதிரி 'சக்திக்குத் தகுந்தபடி உழைப்பு, தேவைக்குத் தகுந்த ஊதியம்.' முன்னதில் உழைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. பின்னதில் தேவை முக்கியத்துவம் பெறுகிறத.

இந்த இரண்டாவது நிலையை எப்பொழுது அடைய முடியுமென்பதைப் பற்றி லெனின் பின் வருமாறு கூறுகிறான்:— "சமுதாய வாழ்வின் அடிப்படையான தத்துவங்களை, ஜனங்கள், தாங்களாகவே இயல்பாக அனுஷ்டிக்க எப்பொழுது பழக்கப் படுத்திக் கொண்டுவிடுகிறார்களோ, தங்களுடைய சக்திக்குத் தகுந்தபடி தாங்களாகவே உழைக்க முன்வந்து, அந்த உழைப்பின் விளைவாகச் சமுதாயத்திற்குத் தேவையான பொருள்கள் உற்பத்தியாகின்றனவோ அப்பொழுதுதான் இந்தப் புதிய சமுதாயம் அமையும். அப்படி அமைந்து விட்டபிறகு, சமுதாயத்தின் பிரதியோர் அங்கத்தினருக்கும் எவ்வளவு எவ்வளவு பொருள்கள் வினியோகிக்கப்படவேண்டும் என்ற கணக்குப் போட்டுத் திட்டம் வகுக்க வேண்டிய அவசியமே இராது. அவரவரும் அவரவருக்குத் தேவையான பொருள்களைத் தாங்களாகவே தாராளமாக எடுத்துக்கொள்வார்கள்."

குரோபோட்கின் என்ற மற்றோர் அறிஞன், இந்த இரண்டாவது நிலையைப் பின் வருமாறு அழகாக வருணிக்கிறான்:— "அனார்க்கிஸம் என்பது, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றியும். அந்த வாழ்க்கை எப்படி நடை முறையில் இருக்க வேண்டுமென்பதைப்பற்றியும் கூறுகிறது. இதன்படி அரசாங்கமில்லாமலே சமுதாயம் அமைகிறது. இந்தச் சமுதாயத்தில், சட்டத்திற்கு இணங்கிப் போவதன் மூலமாகவோ, அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவ

தன் மூலமாகவோ, ஒழுங்கு நிலை பெறுவதில்லை. அதற்குப் பதிலாக, பொருள்களை உற்பத்தி செய்து எல்லோருக்கும் கிடைக்குமாறு செய்வதற்கும், ஒரு நாகரிக புருஷனுடைய பலவகைப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமாக, பிரதேச வாரியாகவோ, தொழில் வாரியாகவோ அமைத்துக் கொண்டுள்ள பல பிரிவினரும், தாங்களே சுயமாகச் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் மூலமாகவே ஒழுங்கு நிலவுகிறது. "சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சுயநலமில்லாத, பற்று விட்ட, கர்மயோகிகள் நிறைந்த ஒரு சமுதாய அமைப்பையே இது குறிக்கிறது.

அனார்க்கிஸ தத்துவத்தின் பிரசாரகர்கள் பலராயிருந்த போதிலும் முக்கியமாக ஓரிரண்டு பேரை மட்டும் குறிப்பிடலாம். மைக்கேல் பக்குனின் (Michael Bakunin 1814-1876) என்பவன் மார்க்ஸின் சமகாலத்தவன். அவனோடு பிணக்குக் கொண்டு, தனியாக ஒரு கட்சியை ஸ்தாபித்தான். இன்னொருவன் ப்ரின்ஸ் குரோபோட்கின் (Prince Kropotkin *1842-1921*) என்பவன். இவன், யந்திரங்களின் மூலமாகப் பெருவாரியான பொருள்கள் உற்பத்தி செய்யப் படுவதைக் கண்டித்து, பழயமாதிரி சிறு சிறு கைத்தொழில்களே இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினான். லியோ டால்ஸ்டாயும் (Leo Tolstoy *1828-1910*) ஒருவித அனார்க்கிஸ்ட்டே. சட்டத்தின் மூலமாகவல்ல, அன்பின் மூலமாகவே ஜனங்களை ஆட்சி புரிய வேண்டுமென்று இவன் கூறுகிறான். இந்த வகையில் மகாத்மா காந்தியும் ஓர் அனார்க்கிஸ்ட்டே.

யாருக்கு ஆபத்து!

புதிதாக ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாயிற்று. அவள் தன் தாயுடனும் புருஷனுடனும் காடு சூழ்ந்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். ஒரு நாள் அவளுடைய புருஷன், குடிசைக்குள்ளே உட்கார்ந்து ஒரு காயைத் தின்று கொண்டிருந்தான். அப்போது மனைவி ஓட்டமாக அவனருகே ஓடி வந்து, "வாருங்கள், வாருங்கள்! அம்மாவைப் புலி துரத்துகிறது" என்று பதற்றமாகக் கூறினாள். ஆனால், அவன் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. "புலி எப்படி நாசமானால் எனக்கென்ன?" என்றான்.

புரிந்த லட்சணம்

ஓர் ஆங்கிலத் தளபதி, கூர்க்கப் படையினருக்கு, பாரசூட் பயிற்சியைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது, பாரசூட் விமானிகள் 500 அடி உயரத்திலிருந்து கீழே குதிக்கவேண்டும் என்று கூறினார்.

பிரசங்கம் முடிந்ததும், ஒரு கூர்க்க சிப்பாய் அந்தத் தளபதியிடம் சென்று, "500 அடி உயரத்திலிருந்து குதிப்பது கஷ்டம். 300 அடி என்றால் இலகுவாயிருக்கும்" என்றார்.

அந்த ஆங்கிலத் தளபதி சிரித்துக் கொண்டே, "300 அடி உயரத்திலிருந்து குதிக்கத் தொடங்கினால், பாரசூட் குடையை விரிப்பதற்குக் கூட நேரம் இராதே!" என்றார்.

கூர்க்க சிப்பாயின் முகம் மலர்ந்தது. "ஓ, குடையைப் பிடித்துக் கொண்டு குதிப்பதா? அப்படியானால் சரி. வெறுமனே குதிக்கச் சொல்லுகிறீர்களாக்கும் என்று நான் நினைத்தேன்!" என்றார் அவர்.

ஆவேசக் கவிதை

நீலாவதி ராம சுப்பிரமணியம்

ஆங்கிலேயர்கள் பலர் கூடியுள்ள ஓர் இடத்தில் அவர்களைக் கலக்க வேண்டுமானல், கரடியோ, புலியோ ஒன்றும் வர வேண்டியதில்லையாம். கவிதை ஒன்று வருகிறது என்று சொன்னல் போதுமாம். அவ்வளவு தான்; உடனே மூலைக் கொருவராய் அவர்கள் எழுந்து சென்று விடுவார்களாம். இதை, திரு. டி. கே. சி. அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். கவிதை என்ருல் அவ்வளவு பயமா என்று இப்போது நாம் ஆச்சரியப் படலாம். ஆனல், வெகுநாள் வரை, நம்மில் பலருடைய நிலைமை, அதற்கடுத்தபடியாகவே இருந்து வந்தது. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியின் கவிதை, மக்களிடத்திலிருந்த பயத்தையும் வெறுப்பையும் ஒழித்துவிட்டது. காரணமென்ன? சாதாரணமாக மக்கள் பேசுவதிலே எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. சிலர் பேசுவது எதற்கும் ஒரே சீராய் இருக்கும். சிலர், வழ வழ என்று வளர்த்திக் கொண்டேயிருப்பார்கள். சிலர், சந்தர்ப்பங்களுக்கேற்ப உணர்ச்சிபாவங்களை அப்படியே சித்திரித்துப் பேசுவார்கள். சாதாரணப் பேச்சிலும் சரி, மேடைப் பேச்சிலும் சரி, உண்மை மட்டும் இருந்தால் போதாது; உணர்ச்சியும் துடிக்க வேண்டும். உணர்ச்சியே நம் இதயத்தைக் கவர்ச்சி செய்யும். அப்படி உணர்ச்சியோடு நம் இதயத்தைக் கவரும் கலைகளும் கவிதைகளுமே என்றும் சிரஞ்சீவியாயிருக்கும். பாரதியாரின் பாடல்களுக்குள்ளே உணர்ச்சி உச்சியில் நிற்பது, அவருடைய பாஞ்சாலி சபதம். நம் நாட்டுப் பழங் காவியங்களான, ராமாயணமும் பாரதமும் துயர்க் கடல்கள்தான். கடலிலே எத்தனை கோடி அலைகளுண்டோ அத்தனையும் இவைகளில் இடம் பெற்றிருக்கின்றன. பாரதியார் என்றும் அழியாத தம் உணர்ச்சிச் சித்திரங்களை நமக்கு வைத்துச் சென்றிருக்கிருர்.

இன்று நம்மிடையே சில சிறந்த கவிகள் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். அவர்களுக்குள் நாஞ்சில் நாட்டுக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். கவிமணி அவர்களைச் சமீபகாலத்திலேதான் தமிழ்நாட்டார் அறிய முடிந்தது. அவர்களின் ஒப்பற்ற கவிகளை, 'மலரும் மாலையும்' என்ற நூலில் அனுபவிக்கிருேம். தேசியக் கவி பாரதியார் கனற் களஞ்சியம்; கவிமணி சாந்தசீலர். ஆனல், கவிமணி அவர்களின் 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மிய'த்தில், ஆவேசம் நிறைந்திருக்கிறது. ஆம்; கொடுமையின் எல்லையற்ற தன்மையை, விசித்திர நிலையை விளக்குவதல்லவா அந்த நூல்? அதில் புத்தரின் கருணை வெள்ளத்தையா காணமுடியும்? நம் நாட்

கவிதை என்ருல், பூமியிலே கால் பாவாமல், ஆகாசத்திலே பறக்க வேண்டும் என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். வாழ்க்கை நிகழ்ச்சிகளை மனித உணர்ச்சிகளோடு கலந்து, இனிமையான, இதயத்தைக் கிளரக்கூடிய பாஷையிலே சித்தரிப்பதும் உன்னதமான கவிதைதான். அத்தகைய ஒன்று, ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையின் நாஞ்சில் நாட்டு மருமக்கள் மான்மியம்.

டில் பெண்கள் அதிகக் கஷ்டத்தை அனுபவிக்கும்போது, சீதையையும், சந்திரமதியையும், துரோபதியையும்- உதாரணமாக எடுத்துக் காட்டுவார்கள். இந்த உதாரணங்களையே கவிமணி அவர்கள் எடுத்துக்கூறுவது, ஒரு தனி அழகாகும். மருமக்கள் வழி வந்த ஒரு பேதையின் துயரத்துக் கருகில், சீதையும், துரோபதையும் சிறிதுவிலகி யிருக்கும்படியாகவே அவர் சித்தரித்திருக்கிறார்:

காசினி மீதென்
கதைபோல் இல்லை.
சீதையின் கதையும்
சிறுகதை யாகும்.
பாஞ்சாலியின் கதை
பழங்கதை யாகும்.
தமியேன் கதைக்குச்
சந்திரமதி கதை
உமியாம் தவிடாம்
ஊதும் பொடியாம்.

இதற்குமேல் என்ன சொல்வதற்கிருக்கிறது! நாஞ்சில் நாட்டைத் தாயகமாகக் கொண்டதால், கவிஞர் காரணவ முறையின் சீர்கேட்டைப் பற்றி நன்கு விளக்கியிருக்கிறார். அந்த நாட்டில் உள்ள ஒரு கொடிய பழக்கத்தின் போக்கைச் சித்திரிக்கும் நூலேயானாலும், யாவருமே அனுபவிக்கவும் படிப்பினைகளைப் பெறவும் தக்க முறையில் அவர் கவிதை அமைந்திருப்பது போற்றத்தக்கதாகும்.

கோர்ட்டுகள் நாஞ்சில் நாட்டில் மட்டுமா இருக்கின்றன? எங்கும்தான் இருக்கின்றன. கோர்ட்டுகளாலும், வக்கீல்களாலும் எண்ணற்ற குடும்பங்கள் என்னென்ன கேடான நிலையை அடைகின்றன என்பதை, 'கோடேறிக் குடி முடித்த படலம்' என்பதில் கவிஞர் ரசபாவம் ததும்ப அருமையாய்ச் சித்திரித்திருக்கிறார்:

அரையடிச் சுவருக்
காக ஐக்கோர்ட்டு
வரையிலும் ஏறி
வழக்குப் பேசி,
அந்திர புரத்து
மந்திரம் பிள்ளை
அடியோடு கெட்ட
தறிய மாட்டீரோ?

எவ்வளவு உண்மை இது!

இந்தியா மிகச் சிறந்த நாடு. இந்து மதம் பெரியது. அதில் பல குறைகள் எப்படியோ புகுந்து விட்டன. குறிப்பாக, இந்து மதத்தின் சாபக்கேடு 'தீண்டாமை' என்று அறிவாளிகள் பலரும் வருந்துகிறார்கள். இந்தத் தீண்டாமையும், சில ஆண்டுகளுக்கு முன்வரை நாஞ்சில் நாட்டில் ஒரு தினுசாய்த் தான் இருந்து வந்தது. இந்தக் கொடிய பேயைப்பற்றி எவ்வளவோ பேர் எழுதியிருக்கிறார்கள்; பேசியிருக்கிறார்கள். இதே விஷயத்தை நமது கவிஞரின் வாக்கில் இப்போது காண்போம். நியாயமற்ற செய்கைகளின் பார்வை, என்றும் எந்த இடத்திலும் கோணல் பார்வையே யாகும்; ஒருதலைப் பட்சமான பார்வையாகவே இருக்கும். இதைத்தான் 'ஒரு கண்ணில் வெண்ணெய்; ஒரு கண்ணில் சுண்ணாம்பு' என்று சொல்லுவார்கள்.

பட்டப்பகல் வரும்
பேயாம் - ஒரு
பக்கமே பார்க்கப்
பழகிய பேயாம்.
மூட்டக்குனிந்திடும்
பேயாம் - அது
முன்னேற்றங் கண்டு
முடமாகும் பேயாம்.
கண்ணிலே காணும்
பேய் ஐயா - இரு
காலும் நிலத்தில்
பதியும் பேய் ஐயா

நிர்ணய மில்லாப்
பேய் ஐயா - நடு
நீதி நெறி காணு
நீசப்பேய் ஐயா.
வஞ்சம் பொருமைகள்
எல்லாம் - அதை
வட்டமாய்ச் சுற்றி
வரும் பரிவாரம்
நெஞ்சம் நடுங்குதே
ஐயா, - அதன்
நிட்டூரம் சொல்ல
முடியாதே ஐயா.

இந்த வரிகள் தீண்டாமையின் கோரத்தை, எவ்வளவு மனங் குழையும்படி சித்திரிக்கின்றன! இதுதான் கவி.

ஒரு பத்து வருஷங்களுக்கு முன், நாங்கள் சிலர் நாஞ்சில் நாடு சென்றிருந்தோம். கன்னியா குமரியின் காட்சியைக் கண்டு களித்து விட்டு, சேந்தன்புதூர் வரவேண்டியிருந்தது. அப்படி வந்து கொண்டிருக்கும் போது, எனக்குத் தாகம் மிகுதியாயிற்று. எங்கேயும் தண்ணீர் இல்லை. சேந்தன்புதூருக்குச் சமீபம் கிட்டத் தட்ட இரண்டு மைல் தூரத்தில் வரும்போது, பல பெண்கள் ஒரு மலையிலிருந்து குடிதண்ணீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். (மலையின் பெயர் ஞாபக மில்லை.) என் தாகம் தாங்கமுடிய வில்லை. அவர்களும் பெண்கள் தானே என்று கூச்சத்தை விட்டுத் துணிந்து ஒரு பெண்ணிடம் தண்ணீர் கேட்டேன். என்ன கொடுமை? பதிலே இல்லை.

எனக்கு எரிச்சல் ஒருபுறம்; ஆச்சரியம் ஒருபுறம். நான் தமிழில்தான் கேட்டேன். அவர்களும் தமிழ்ப் பெண்கள் தான். தமிழ் விளங்காமலா போய்விட்டது? இல்லை. அவர்களுக்குத் தமிழ் நன்ருய் விளங்கிவிட்டது. அவர்கள் விஷயம் எனக்குத்தான் விளங்கவில்லை. இந்த நிலையில் ஏதேதோ எண்ணிக்கொண்டு சற்று நடந்தேன். நடக்க, நடக்கத் தாகத்தின் வேகம் அதிகரித்தது. மறுபடி தண்ணீர் கேட்கவோ வாய் வரமாட்டேனென்கிறது. இருந்தாலும், எல்லோரும் ஒரு மாதிரியாகவா இருப்பார்கள்; மற்ருெருவரைக் கேட்கலாம் என்றெண்ணி மீண்டும் ஒரு பெண்ணிடம் கேட்டேன்.

தாகித்து வந்தவருக்குச்-செம்பில்,
தண்ணீர் அளித்திடச் சம்மதியாது

என்ற கவிஞரின் வாக்கை, அப்போது நான் அறியவில்லை.

தாகமென்று வருபவர்க்குத்
தண்ணீரை அளியாமல்
ஆகமங்கள் ஓதி நிற்றல்
அழகாமோ? அறமாமோ?

என்று கவிமணி காட்டும் நீதி முறை, அங்கே யாருக்கு வேண்டும்? ஆனல், முதல் பெண் மாதிரி இல்லை. இந்த இரண்டாவது பெண்ணைத் தண்ணீர் கேட்டதற்குப் பதில் கிடைத்தது. அந்தப் பதிலால், தாகம் தீர்ந்ததோ? அதுதான் இல்லை.

அந்தப் பதில்தான் என்ன என்பீர்களோ? "நிறை குடத்துத் தண்ணீரை மற்றவர்களுக்கு முதலில் கொடுக்கக் கூடாது – அதாவது வேறு சாதியாருக்கு" என்பதுதான் பதில்.

எப்படி உலகம்! இந்த நிலையைக் கவிஞர் மிக அழகாக விளக்குகிருர். இந்தத் தீண்டாமை, தீண்டத்தகாதவர் என்பவர்க்கு மட்டும் இல்லாமல், எப்படியோ எல்லோரிடத்தும் வந்து புகுந்து விட்டது. கவியின் கருத்துப்படி, அந்தக் கொடிய பேயைச் சட்டத்தால் கடலிலே தள்ளியாகி விட்டது. இனி, மன அழுக்கை எப்படியாவது கழுவிவிட மார்க்கம் தேடவேண்டும். பாரதியார் கதறியபடி, மனம் வெளுக்க இனியும் வழி இல்லாமலா போகும்?

*

புத்தக உலகம்

கல்வி முதலிய கட்டுரைகள்: ஆசிரியர்: வெ. சாரநாதன் எம். ஏ.; வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. விலை ரூ. 1-6-0.

இது ஒரு கட்டுரைத் தொகுதி. இதற்குக் 'கல்வி' என்ற பெயர் கொடுத்திருந்தாலும், இதில் பல்வேறு விதமான கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. கல்வி சம்பந்தமாக ஆசிரியர் கூறும் கருத்துக்கள் ஆராய்ச்சிக்குரியன. முன்னுரையில் காணப்படுவதுபோல, இந்நூலிலுள்ள ஒவ்வொருகட்டுரையிலும் 'சிந்தனையின் வேரும், கிளைகளும், இலைகளும், மலர்களும், கனிகளும் பல வர்ணங்களுடன் மின்னுகின்றன.'

கட்டுரைகள்: ஆசிரியர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார். வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 4-8-0.

இந்த நூலில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் எழுதிய 23 கட்டுரைகளும் சோக்ரதர் வாழ்க்கையும் அடங்கியிருக்கின்றன. இவை சமூக, இலக்கிய, மத சம்பந்தமான பல்வேறு விஷயங்களைப்பற்றியவையாகும். இலக்கிய சம்பந்தமான நான்கைந்து கட்டுரைகள் அழகாய் அமைந்திருக்கின்றன. சிறு கதையைப்பற்றி ஆசிரியர் இவ்வளவு கச்சிதமாகவும் தெளிவாகவும் ஆணியடித்ததைப்போல எழுதியிருப்பதைப் புகழாதிருக்க முடியவில்லை. இன்னும், 'தேனீ' வளர்ப்பதைப்பற்றி வேண்டுமா? 'உணவுசாஸ்திரத்'தைப் பற்றி வேண்டுமா? 'விசுவரூப தரிசனம்' செய்ய விரும்புகிறீர்களா? ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக, ரசமான முறையில் தெளிவான இனிய நடையில் அமைந்திருக்கிறது.

அழகின் சிரிப்பு: ஆசிரியர்: பாரதி தாசன். வெளியிட்டோர்: முல்லைப் பதிப்பகம், 59, பிராட்வே, சென்னை. விலை ரூ. 1-0-0

'ஆடற் றமிழே நீ என்றன் ஆவி' என்று தம்மை யிழந்த லாகிரியோடு, தமிழை விளிக்க, பாரதிதாசனுக்குத் தான் உரிமையுண்டு. இலக்கிய கர்த்தனிடம் - கவிஞனிடம் - வார்த்தைகள் கொஞ்ச வேண்டும். பாரதிதாசனின் வாக்கிலே அவை அவ்விதம்தான் கொஞ்சுகின்றன. இந்த 'அழகின் சிரிப்'பில் இயற்கையின் பல வித சௌந்தர்யங்கள் வர்ணிக்கப் படுகின்றன. அத்தனையும் தெவிட்டாத தேன் மொழியிலே அமைந்திருக்கிறது. படிப்பவர் உள்ளம் பரவசமடையும் சொல்லோவியங்கள் இந்தப் பாடல்கள்.

நட்சத்திர மாலை: (மாலை 1): ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால். வெளியிட்டோர்: 'பேசும் படம்' காரியாலயம், 289, எஸ்பிளனேட், சென்னை. விலை ரூ. 2-0-0

சினிமா நட்சத்திரங்களைப் பற்றி அறிய, சினிமா ரசிகர்களுக்கு உலகெங்குமே ஆவல் தோன்றுவது சகஜம். சினிமா நடிகர், நடிகைகளில் 24 பேர்களின், வரலாறுகளையும் குணகுணங்களையும், ரஸமான முறையில் விவரிக்கிறார் ஆசிரியர். நேர்த்தியான சில மூவர்ணப்படங்களும், மற்றும் பல ஆப்டோன் படங்களும் புத்தகத்தை அலங்கரிக்கின்றன.

பெண்களுக்கு: ஆசிரியர்: மகாத்மா காந்தி. மொழிபெயர்த்தவர்கள்: அ. லெ. நடராஜன், வெ. ராமசாமி. வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 6-0-0

பெண்களைப் பற்றி, காந்திஜி பல இடங்களில் பேசியதையும் எழுதியதையும் ஸ்ரீ ஹிங்கொராணி தொகுத்து வெளியிட்ட ஆங்கிலப் புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. பெண்கள் முன்னேற்றம் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் காந்திஜி இதில் விவாதித்திருக்கிறார். பெண் விடுதலையில் ஆர்வம் கொண்ட ஒவ்வோர் ஆணும் பெண்ணும் வாசிக்கவேண்டிய அருமையான நூல். தெளிவான தமிழ் நடையில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. மிகச் சிறந்த ஆங்கிலப் புத்தகங்களுடன் போட்டி

போடக்கூடிய முறையில், அச்சும் பதிப்பும் அமைந்திருக்கிறது.

கற்றது குற்றமா?: ஆசிரியர்: வ. ரா; வெளியிட்டோர்: கஸ்தூரி பதிப்பகம், திருத்துறைப்பூண்டி, தஞ்சை ஜில்லா. விலை: ரூ. 2—0—0.

நான்கு சிறு கதைகளின் தொகுப்பு இது. நான்கிலும் வரும் தம்பதிகள் நாலு விதம்; 'மாமூல் தம்பதிகளு' அல்ல. வ. ரா. வின் கதாபாத்திரங்கள், அறிவொளி நிறைந்த, ஒரு முன்னேற்ற உலகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் சம்பாஷணை அத்தனையும் எந்த இடத்திலும், மதிப்பரிய முத்துக்களைச் சொரிவதுபோல், நம் சிந்தனையைக் குதூகலமடையச் செய்யும் கருத்துக்களை உதிர்க்கிறது. உயர்ந்த சிந்தனைக் கனிகளை ஒவ்வொரு வரியிலுமே சுவைக்கிறோம். மனதில் தைக்கும் நடை; புதுமையான பாணியில் அமைந்த இனிமையான கதைகள்.

ஜெயில்: ஆசிரியர்: ப. ராமஸ்வாமி. வெளியிட்டோர்: தமிழ்ச்சுடர் நிலையம், ஜி. டி., சென்னை. விலை ரூ. 1—8—0.

சிறு கதைகள் தமிழில் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. பொழுது போக்கும், பழைய இலக்கிய விளக்கமுமான கட்டுரைகளும் தமிழில் உண்டு. ஆனால், தீவிரமாய் முக்கியமான பிரச்னைகளை ஆராயும் கட்டுரைகள் அபூர்வம். அந்த முறையில் ஐந்து கட்டுரைகளை ஆசிரியர் எழுதியுள்ளார். ஜெயில் சீர்திருத்தம், அந்தமான், இலங்கை இந்தியத் தொழிலாளர், அமிருத பஜார் ஆசிரிய பரம்பரை, இந்தியத் தேசிய மறுமலர்ச்சி ஆகிய விஷயங்களை, அவர் நேர்த்தியாக விளக்கியிருக்கிறார். சிக்குச் சிடுக்குகளோ, விடுகதைகளோ இல்லாமல், எளிய சொற்களில், மிகத் தெளிவாய், இந்தக் கட்டுரைகள் இயன்றிருக்கின்றன.

மக்கள் மலர்ச்சி: ஆசிரியை: 'குமுதினி'. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை. விலை ரூ. 1-0-0.

குழந்தை வளர்ப்பைப் பற்றித் தமிழில் விரிவான புத்தகம் எதுவும் இல்லை யென்று கூறலாம். இந்நூல் அந்தக் குறையை ஒருவாறு பூர்த்தி செய்கிறது. பெண்கள் பிரசவ காலத்தின் போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும், குழந்தைகள் பிறந்த பிறகு நோய் நொடிகளிலிருந்து அவற்றைப் பாதுகாத்து எவ்வாறு வளர்ப்பது என்பதைப் பற்றியும், ஆசிரியை தெளிவாக விளக்கியிருக்கிறார்.

ரவீந்திரநாத் டாகுர்: ஆசிரியர்: கி. சந்திரசேகரன். வெளியிட்டோர்: 'தினமணி' காரியாலயம், மௌண்ட்ரோட், சென்னை. விலை ரூ. 0-8-0.

இந்த நூல் தாகூருடையவாழ்க்கைச் சரித்திரத்தைக் கூறுகிறது. தாகூர் கவியான வரலாற்றைப் பற்றி ஆசிரியர் ரசமாக எழுதியிருக்கிறார். நூலின் இறுதியில், தாகூருடைய நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியும் தேர்ந்தெடுத்த சில கவிதைகளின் மொழிபெயர்ப்பும் அடங்கி யிருக்கின்றன. முன்னுரையில் கண்டிருப்பது போல, தாகூரைப் பற்றிச் சேகரித்த பல அருமையான விஷயங்களை எல்லாம் ஆசிரியர் இந்த நூலில் வழங்கியிருக்கிறார். இது ஒரு நல்ல வாழ்க்கைச் சித்திரம் என்பதுடன் இலக்கிய விமர்சனமுமாகும்.

வாழ்க்கைத் துளிகள்: ஆசிரியர்: என். எஸ். ஸ்ரீநிவாஸன். கிடைக்குமிடம்: இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-12-0

இது ஒரு சிறு கதைத் தொகுதி. மொத்தம் பதினேழு கதைகள் அடங்கியிருக்கின்றன. ஆசிரியர் இதற்கு 'வாழ்க்கைத் துளிகள்' என்ற பெயர் அளித்திருப்பதற்கு ஏற்ப, கதைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களுக்குப் பிரதிநிதிகளா யிருக்கின்றன.

*

88847

காமதேனு

வனஸ்பதியும் சுத்தம்
செய்த எண்ணெயும்

தற்போதைய விலைகள்

37 ராத்தல் டின்	....	ரூ.	23	4	0
10 ராத்தல் டின்	....	ரூ.	7	4	0
5 ராத்தல் டின்	....	ரூ.	4	0	0
1 ராத்தல் டின்	....	ரூ.	0	14	0
சுத்தம் செய்த 37 ராத்தல் எண்ணெய் டின்		ரூ.	22	0	0

எல்லா விலையும் ரயில்வே செலவு உள்பட

விற்பனை வரி பிரத்தியேகம்

ஜப்பானியப் பிரசாரகர்கள் இந்தியாவை நாங்கள் விடுதலை செய்வோம் என்று ஜெபிக்கிறார்கள். தம் சொந்த நாட்டிலேயே ஒருபோதும் சுயேச்சையோடில்லாத மக்கள் இப்படிப்பட்டதோர் வாக்குறுதி கொடுப்பது வெகு அழகுதான். இந்தியா சுயராஜ்யத்தை நாடுகிறது. யுத்தத்திற்குப் பிறகு அதை அடையத்தான் போகிறது. மற்ற ஆசிய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமேயொழியவிடுவிக்கக்கூடாது என்னும் எண்ணம் கொண்டுள்ள இராணுவத் தலைவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள நாட்டவரின் உதவி எதுவும் இந்தியாவுக்குத் தேவை யில்லை.

வெற்றி

வழியே

விடுதலை

1019 TM



அவளுக்காக
ரூ. 10 ஐ ரூ. 15
ஆகச் செய்யுங்கள்.

இன்னும் பன்னிரண்டு வருஷங்கள் கழித்து இச்சிறுமிக்குக் கல்யாணம் செய்ய வேண்டிவரும். அவள் தகப்பனர் முன் யோசனையோடு இல்லாவிடில், கல்யாணச் செலவுகளுக்கும், முக்கியமாக வரதக்ஷிணை கொடுப்பதற்கும், தேவையான பணத்தைப்பெற மார்வாடியிடம் போகவேண்டியதுதான். விஷயமறிந்த பெற்றோர்கள் பிற்காலத்தில் ஏற்படும் செலவுகளை எதிர்பார்த்து, முன் கூட்டியே பணம் சேகரித்து வைக்கிறார்கள். அத்தகையோர்களுக்கு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் முதலீடு மதிப்பு நன்கு விளங்கும். நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளில் இன்று முதலிட்ட ரூ. 10, பன்னிரண்டு வருஷங்களில் உத்திரவாதமுள்ள ரூ. 15 ஆக வளரும். . இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமானவரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம். போட்ட பணமும் மிகப் பத்திரமாக இருக்கும். மேலும், முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் இந்த நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். உங்கள் மகள் பெயரில் இன்றே நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்குங்கள்; அவள் கலியாணத்தின் போது நூற்றுக்கு நூற்றைம்பதாக சீதனம் கொடுக்கலாம்.

உங்கள் சேமிப்பையெல்லாம் லாபமும், பத்திரமும் உள்ள

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குவதில் உபயோகியுங்கள்

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு

அஸ்ஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி த்ங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்

C. P. U. 416.

Regd. No. M. 4162 SHAKTI September 1944

ஊக்கத்துக்கு உயர்துணைவன்.

எல்லோராவில் கைலாசநாதர் கோவில் மதில்களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டு நீங்கள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊக்கமளித்த சக்தி எது என்பது உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் லக்ஷியம் தெய்வ கலையை அங்கே பெருகிறது. நமது அன்றுட வாழ்விலும் ஆது மானுஷிக எல்லையை மீறுகிறது. பெண் அன்போடும் பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்போல் அதிசயம் வேறு என்ன? நாள் பூருவும் உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும் கணவனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் தயாரித்துக் கொடுப்பதுபோல் திருப்தி அளிப்பது வேறு என்ன? அன்பு ததும்பும் கோப்பை அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அவன் மனமும் கலகலக்கிறது.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டி மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்திற்கு ஏற்ற ஒரே பானம் இந்தியன் டி

இந்தியன் டி மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan

லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.